
கல்கி
KALKI 4-3-1973 45 காசு

கல்கி

பரிதாபி, மாசி 21

மார்ச் 4, 1973



பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே. □



குருவடி வாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்து.
உவட்டா உபதேசம் புகுத்திஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி — ஔவையார்

கல்கி

மலர் 32

இதழ் 31

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
-- பாரதியார்

வரிகள் வரும் பின்னே; அறிக்கை வரும் முன்னே!

இந்த இதழ் அச்சுக்குப் போகும் போது 73–74 ஆண்டுக்கு மத்திய அரசு என்னென்ன புது வரிகள் விதிக்கப் போகிறது என்ற விவரங்கள் வெளியாகவில்லை. ஆனால் வரிகள் கடுமையாக இருக்கக்கூடும் என்பதற்கான அறிகுறிகள் என்னவோ இப்போதே தெளிவாகத் தோன்றியுள்ளன.


ரயில்வே பட்ஜெட் ஒரு முன் அறிவிப்போ என்று எண்ணும்படி உள்ளது. பிரயாணிகள் கட்டணத்திலும், சரக்குகள் போக்குவரத்திலும் விகிதங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. இதன் மூலம் சுமார் இருபது கோடி ரூபாய் ரயில் நிர்வாகத்துக்குக் கிடைக்கும். ஆனால் பிரயாணிகளுக்கு ஏற்படும் கஷ்டங்களும், இட நெரிசல்களும், வசதிக் குறைவும் மேலும் அதிகரித்து, ரயில் பயணத்தையே பயங்கர அனுபவமாக மாற்றிவிடும். சரக்குகள் கட்டணவிகிதத்தின் உயர்வினால், அந்தந்தப் பொருள்களின் விலைகள் மட்டுமின்றி, பொதுவாகவே பல பொருள்களின் விலைகள் உயரவே செய்யும். ''கட்டண விகிதங்களின் உயர்வு மிகச் சொற்பம்தான்'' என்று சொல்லப்படுவது நொண்டிச் சாக்குத்தான். ஆண்டுதோறும் சிறுகச் சிறுக ஏற்றப்பட்டுள்ள கட்டணங்களைக் கவனத்தில் கொண்டு பார்த்தால் இப்போது உத்தேசித்துள்ள சொற்ப உயர்வைப் பெரிய சுமை என்றே சொல்ல வேண்டும். ரயில்வே வரவு செலவை மொத்தமாகப் பார்க்கும் போது விதிக்கப்படவிருக்கும் கட்டண உயர்வு இல்லாமல் இருந்தால்கூட ரயில்வே பிரிவின் நிலைமையும் பொருளாதாரமும் ஒன்றும் கெட்டுப் போய்விடாது என்பது புரியும்.

பட்ஜெட்டுக்கு ஒரு வாரம் முன்னதாக நாட்டின் பொருளாதார நிலைமையை விளக்கிச் சொல்லும் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கிறார்கள். இந்த அறிக்கை விவரிக்கும் நாட்டுப் பொருளாதார நிலைமை நம்மைச் சோகத்தில் ஆழ்த்துவதாக உள்ளது. விலைகள் பயங்கரமாக உயர்ந்துள்ளன. விவசாயப் பொருள்களின் உற்பத்தி கணிசமாகக் குறைந்துள்ளது. உற்பத்தி பெருகும் என்பதற்கான அறிகுறிகளைக் காணவில்லை. நிர்வாகச் செலவுகளும் கட்டுக்கடங்காமல் பெருகிக் கொண்டிருக்கின்றன. தொழில்கள் ஓரளவுக்கு உற்பத்தியைப் பெருக்க முயன்றாலும், இப்போது ஏற்பட்டுள்ள மின்விசைத் தட்டுப்பாட்டினால் உற்பத்தியில் சுணக்கமே ஏற்படும். சர்க்கார்த் துறைத் தொழில்களில் சுமார் 5000 கோடி முதலீடு செய்யப்பட்டிருந்தும் இன்னமும் லாபம் சம்பாதிக்கும் நிலைக்கு அவை வரவில்லை. நோட்டு அச்சடித்துப் பணப் புழக்கத்தைப் பெருக்குவது விரும்பத்தக்கதல்ல என்று அரசாங்கம் ஒப்புக்கொள்ளுகிறது என்றாலும் அதைக் கைவிட அதனால் முடியவுமில்லை; கைவிட அது விரும்பவுமில்லை. இந்த நிலையில் ஐந்தாவது திட்டம் தடையின்றி நிறைவேற வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்கிறது அரசு. நிதி வசதிகள் பெருகவில்லை. சிக்கனம் செய்ய வேண்டிய இடங்களில் சிக்கனம் கடைப்பிடிக்க முடியவில்லை. இந்த நிலையிலும் 'அல்ஜுஷயர் திட்டம்' தீட்டுவதிலும், அதை எப்படியும் நிறைவேற்றியாக வேண்டும் என்று அவசரப்படுவதிலும் குறைவில்லை. அரசாங்கத்தின் அறிக்கை இதைத்தான் உணர்த்துகிறது.


இந்தப் பயங்கரச் சூழ்நிலையில்தான் 73–74 ஆண்டுக்கான வரவு செலவு கணக்கும், புது வரிமுறைகளும் உருவாகப் போகின்றன. எல்லாவற்றையும் இணைத்துப் பார்க்கும் போது கணிசமான அளவுக்குப் புது வரிகள் இருக்கக்கூடும் என்றே எண்ணவேண்டியிருக்கிறது.

வரிச் சுமையினால் ஏற்கனவே திணறிக் கொண்டிருக்கும் மக்களுக்கு மேலும் புது வரிகள் காத்துக் கொண்டிருக்கின்றன என்று நினைக்கும்போது கவலைப்படாமல் எப்படி இருக்க முடியும்?


மக்களது கஷ்டங்களைக் கவனித்துச் செயல்பட வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஆனால் நமது அரசாங்கமோ மக்களின் கஷ்டங்களை அதிகரிப்பதிலேயே கண்ணுயிருக்கிறது.




விழாத் தலைவர் அவர்களே!.... கடை திறப்பாளர் அவர்களே! பிரதான விருந்தினர் அவர்களே! உங்கள் அனைவரையும் வருக, வருக என வரவேற்கிறோம்!....
பஞ்சம் பற்றாக்குறை
கள்ள மார்க்கெட்
ரேஷன் தொல்லை
உணவு தானிய மொத்த வியாபாரக் கடை
உரிமையாளர்: பாரத அரசு
தொடக்க விழா வைபவம்



இப்பத்தான் 'உருளைக் கிழங்கு சாப்பிடுங்கள்' என்ற அத்தியாயத்துக்கு வந்திருக்கேன்! வேலை முடிந்ததும் நாற்காலியைக் காலி பண்ணிடுவேன்!
பதவி
அத்தியாயம் 32
ஆட்சி
தேசிய மயம்
பண வீக்கம்
உச்ச வரம்புகள்


பல நன்மைகள் பயக்கும்
கங்கை, காவிரி
இணைப்புத் திட்டத்தைக்
கைவிடாதீர்கள்
கிரி
மாநில
சுயாட்சி
பொறியியல் நிபுணர்கள்


என்ன கார்
தயாரிக்கிறார்கள்....
தகர
டப்பா !
சி.எஸ்
மாருதி
ஸஞ்சய்

தமிழ் நாட்டிலே... தீரன்

முதல்வரும் நிற மாற்றமும்

மதுரையில் ஒரு தினசரியை வெளியிட்டுப் பேசிய தமிழக முதல்வர், ''பெண் என்றால் அச்சம், பயிர்ப்பு, நாணம் எல்லாம் இருக்க வேண்டும். அதைப் போலத்தான் பத்திரிகையும். அதை மறந்துவிட்ட காரணத்தால் நிறம் மாறிய நிலையில் இருக்கின்றன பல பத்திரிகைகள். பத்திரிகைகள் நிறம் மாறக் கூடாது. வேறு காரியங்களுக்காக நிறம் மாறினால் அந்த நிறத்தை மங்களமாகக் கொள்வோம். ஆனால் பத்திரிகைகளே நிறம் மாறினால் அதை ஆபாசமாக எடுத்துக் கொள்வார்கள்'' என்று பல எடுத்துக்காட்டுக்களைக் கூறிப் பத்திரிகா தர்மத்தைப் பற்றி ரொம்பவும் தாராளமாகப் பேசியிருக்கிறார். இந்த மாதிரி அறிவுரைகளையும் தர்மங்களையும் கடைப்பிடிக்க வேண்டியவர்களும், மேற்கொள்ள வேண்டியவர்களும் இன்று வேறெங்கும் இல்லை. அவரது கட்சியிலும், கட்சியைச் சார்ந்த பத்திரிகைகளிலும் தான் அவர்கள் இருக்கிறார்கள். சாதிபேதங்களை வளர்க்கும் விதத்தில் மனிதர்களையும், செய்திகளையும் திரிப்பது, நிறம் மாறுவது எல்லாம் யாருக்கு உரியவையோ அவர்களுக்கு முதல்வர் அறிவுரை கூறியிருப்பது பொருத்தமே.

மின்சார வெட்டும் தொழில் உரிமையாளரும்

தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சாரப் பற்றாக்குறையையும், அதன் பயங்கர விளைவுகளையும் தொழில் உரிமையாளர்கள் நன்கு உணர்ந்து பொறுப்புடன் கூடிச் சிந்தித்திருக்கிறார்கள். திரு எஸ். நாராயணசாமி அவர்கள் தலைமையில் தென்னிந்திய வர்த்தக சபைக் கட்டடத்தில் நடைபெற்ற கூட்டத்தில், 'ஒவ்வொரு தொழில் உரிமையாளரும் மின்சாரப் பற்றாக் குறையினால் எவ்வளவு பாதிக்கப்பட்டுள்ளார் என்பதையும், அதைப் பற்றிய விவரங்களையும் பரிகாரங்களுக்கான யோசனைகளையும் கூற வைப்பதற்குப் பயன்படும் வினாத்தாள் ஒன்றை அனுப்பி வைப்பது' என முடிவாகியுள்ளது. தொழிலதிபர் திரு கோத்தாரி அவர்களோ இந்த யோசனைகளுக்கும் ஒரு படி மேலே போய், 'தொழில் உரிமையாளர்களே கூட்டுச் சேர்ந்து மின் நிலையங்களை நிறுவவும் தயாராயிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். தொழில் நடத்துகிறவர்கள் திறமையாகவும், காலதாமதமின்றியும் அவசியமாகவும், அவசரமாகவும், சிந்திக்கத் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதில் நாம் மகிழ்ச்சி அடைகிறோம்; பாராட்டுகிறோம்.

கறுப்புக்கொடி

சமீபத்தில் தமிழக முதலமைச்சர் சென்றிருந்ததை ஒட்டிப் பட்டுக்கோட்டையில் நடந்திருக்கும் சம்பவங்கள் கவனிப்பதற்கும் கவலைப்படுவதற்கும் உரியவை. முதல் அமைச்சர் பட்டுக்கோட்டைக்கு வரும்போது கறுப்புக் கொடி காட்டுவதென்று அ.தி.மு.க.வினர் முடிவு செய்து முன் அறிவிப்புக் கொடுத்து முறைப்படி போலீஸாரிடம் அனுமதியும் பெற்றுக் கறுப்புக் கொடிகளுடன் நின்றிருந்த இடத்தில் லாரி லாரியாகப் பக்கத்து ஊர்களில் இருந்து வரவழைக்கப்பட்ட தி.மு.க. ஆட்கள் வந்து வம்புக்கு இழுத்து அடிதடிகளை உண்டாக்கியிருக்கிறார்கள். இதனால் தடியடிப் பிரயோகம், கண்ணீர்ப் புகைப் பிரயோகம் எல்லாம் நடக்க நேரிட்டிருக்கின்றன. இவற்றில் சம்பந்தப்படாத பொதுமக்களுக்கும் துன்பம் நேர்ந்துள்ளது.

இதைப் பற்றித் திரு காமராஜ் அவர்கள் வருத்தப்பட்டு, ''ஆளும் கட்சியினரே வன்முறை வெறியாட்டங்களை நடத்துவதையும், ரவுடிகளைக் கொண்டு எதிர்க்கட்சியினரைத் தாக்குவதையும் எனது அரசியல் வரலாற்றிலேயே இப்போதுதான் முதல் முறையாகப் பார்க்கிறேன்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஜனநாயகத்தில் ஆட்சியின் மேல் தங்களுக்குள்ள அதிருப்தியைக் காட்டுவதற்குக் கறுப்புக் கொடி காட்டுவது அங்கீகரிக்கப்பட்ட உரிமையாகும். அதை ஒடுக்குவதற்குக் கட்சி முரடர்களை ஏவிவிட்டுப் பொது வாழ்வின் அமைதியைக் குலைக்கும் செயல்களை இனியாவது தி.மு.க.வினர் கைவிடவேண்டும்.

ரேஷன் வருகிறது

மின்சாரப் பற்றாக்குறையின் காரணமாக நாட்டில் மண்ணெண்ணெய் விலை ஏறிவிட்டது. தஞ்சை மாவட்டத்தில் சில இடங்களில் மண்ணெண்ணெய் கிடைக்காததால் சென்னையிலிருந்து ரயிலில் ஊர் போகிறவர்கள் ஐந்து லிட்டர், பத்து லிட்டர் என்று மண்ணெண்ணெயை அபூர்வப் பண்டமாக டின்னில் ஊருக்கு வாங்கிச் செல்ல நேர்ந்திருக்கிறது. பிப்ரவரி 22ந் தேதி முதல் தமிழ் நாடு முழுவதும் மண்ணெண்ணெய்க்கு ரேஷன் வருகிறது. லிட்டர் 65 காசு விதம் விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும் இப்போதே எழுபது காசுக்குத்தான் மண்ணெண்ணெய் கிடைக்கிறது.



தாற்காலிகமாகச் சர்க்கரைக் கார்டுகளைக் காண்பித்து மண்ணெண்ணெயை வாங்கிக் கொள்ளலாம் என்றும், அப்புறம் வேறு கார்டுகள் வழங்கப்படலாம் என்றும் தெரிகிறது. இப்போது அநேக கடைகளில் சர்க்கரைக் கார்டைக் காட்டினால் சர்க்கரையே

கிடைப்பதில்லை. ஏதோ, மண்ணெண்ணெயாவது கிடைத்தால் சரி.

மார்ச் மாதத்திலிருந்து பதினைந்து தினங்களுக்கு ஒரு முறை ரேஷனில் மண்ணெண்ணெய் சப்ளை செய்யப்படுமாம். இந்தப் பற்றாக்குறை தாற்காலிகமானது என்றும் மணலி சுத்திகரிப்பு ஆலை இயங்கத் தொடங்கியதும் சரியாகிவிடும் என்றும் அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்திருப்பது ஓரளவு ஆறுதல் அளிக்கிறது.

ஒரு நல்ல ஆரம்பம்

சுதந்திரப் போராட்ட வீரரும், இலக்கியக் கர்த்தாவுமான வீர விளக்கு வ. வே.சு. ஐயர் முன்பு நடத்தி வந்த சேரன் மாதேவி குருகுலமும், பாரத்வாஜ ஆசிரமமும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பது பெருமகிழ்ச்சியைத் தருகிறது. புதுப்பிக்கப்பட்ட இந்தச் சரித்திரப் புகழ்பெற்ற ஆசிரமம் திருப்பராய்த்துறை ராமகிருஷ்ண தபோவனம், விஸ்வ இந்து பரிஷத்தின் திருநெல்வேலிக் கிளை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த முயற்சியால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. முன்பு வ. வே. சு. ஐயரால் தொடங்கப்பட்டு 1922–25 ஆண்டுகளில் பாரத நாடெங்கும் புகழ் பெற்றிருந்த இந்த ஆசிரமம் 1925ல் திரு ஐயரவர்கள் காலமானதால் காந்தியடிகளின் தர்மகர்த்தாப் பொறுப்பின் கீழ் பன்னிரண்டு ஆண்டு காலம் இருந்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் சமூக ஆன்மீக தார்மீக நிகழ்ச்சிகளைக் கவனிக்கவும், செழிக்கச் செய்யவும் இந்த ஆசிரமம் இனிமேல் பாடுபடும் என்று இதன் அமைப்பாளர்கள் கூறியிருக்கிறார்கள்.

பரீட்சைகள் மாற வேண்டும்

சென்னையில் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த ஒரு கருத்தரங்கில் நம்முடைய கல்வியில் பரீட்சை முறைகளை மாற்றி அமைப்பதற்கான கருத்துக்களை விவாதித்திருக்கிறார்கள். பரீட்சை முறையை இப்போதிருப்பதைவிட இன்னும் எப்படிக் கவர்ச்சிகரமாக மாற்றுவது என்பது பற்றிக் கூறுகையில் லயோலா கல்லூரியின் முன்னாள் முதல்வர் பூஜ்ய டி. என். ஸெக்குயிரா, ''ஒரு விளையாட்டு வீரர் தமது திறமையினைக் காட்டிப் பரிசைப் பெறுவதற்காகப் பந்தயத்தை ஆவலோடு எதிர்பார்ப்பது போல் மாணவர்களும் பரீட்சையை எதிர்நோக்கும்படி செய்தாக வேண்டும்'' என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார். '' ஒரு மாணவனுக்கு எவ்வளவு தெரியும் அல்லது எவ்வளவு தெரியாது என்பதைக் கண்டுபிடிப்பதற்காக மட்டுமே அல்லாமல் ஒரு மாணவன் எவ்வளவு நன்கு சிந்திக்க முடியும் என்பதைக் கண்டு பிடிப்பதற்கான கேள்விகள்தாம் பரீட்சையில் உருவாக்கப்பட வேண்டும்'' என்று பச்சையப்பன் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் டபிள்யூ. வி. வெங்கடராவ் கருத்துத் தெரிவித்திருக்கிறார். பரீட்சை முறைகள் பற்றிக் கூறிய அபிப்பிராயங்கள் விதம் விதமாக இருந்தாலும் அதை நடைமுறைக்கு ஒப்ப மாற்றி அமைக்க வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை யில்லை.

ராஜாஜி சிந்தனை

உலகத்தில் அநேக விதமான மரங்களும் இருக்கின்றன; மிருகங்களும் இருக்கின்றன. அவைகள் எல்லாம் வேறு வேறானவை. அதே போல் உலகத்தில் உள்ள பல தேச மக்களுடைய வழக்கங்களும் வேறு வேறானவை. அவைகள் குறைபாடு உடையனவாக இருந்தால் அவைகளை நாம் சீர்திருத்தலாம். அவைகள் கேடானவையாயிருப்பினும் அவற்றினால் அடையக் கூடிய பயனை அடைய முயலலாம்.

பறவையினுடைய சிறகுகளும், மனிதனுடைய கைகளும், குதிரையினுடைய வாலும், பசுவினுடைய கொம்பும் எப்படி நன்மை பயப்பனவாகவும் தீமை பயப்பனவாகவும் உளவோ, அப்படியேதான் சமூகப் பழக்க வழக்கங்களும் நன்மை பயப்பனவாகவும் தீமை பயப்பனவாகவும் உள. நாம் கைகளுக்குப் பதிலாகச் சிறகுகள் இருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும் என்று எண்ணலாம். அப்படியே பசுவின் கொம்பும் குதிரையின் வாலும் இருந்தால் நல்லது என்று எண்ணலாம். ஆனால் அப்படி எண்ணுவது முற்றிலும் தவறே. நான் கூறுவதை வேறு விதமாகப் பொருள் கொண்டு விடவேண்டாம். நான் கூறும் உதாரணங்களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் வேறுபாடு உண்டு என்பதை அறிவேன்.

மனிதன் சிறகை அடைய முடியாது. ஆனால் நாம் நம்முடைய பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள முடியும். ஆம்! பறவைகளுடைய உடலையும் மிருகங்களுடைய உடலையும் மாற்ற முடியாது.

பழக்க வழக்கங்களை மாற்றுதவரை அவற்றால் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. நமக்கு எது இல்லையோ அதற்காக வருந்த வேண்டியதில்லை. பழக்க வழக்கங்களை மாற்ற முயன்ற போதிலும் அப்படி மாற்ற முயலும் காலத்தில்கூட அவற்றால் அடையக் கூடிய நன்மைகளை அடைய முடியும். வேறுபாடுகள் எல்லாம் வேறுபாடுகளேயன்றி, உயர்வு தாழ்வு குறிப்பன அல்ல என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். உயர்வு தாழ்வு கற்பியாமல் இருந்தால் எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

ராஜாஜியின் ஜெயில் டைரி

1922 ஜனவரி, 24உ

செவ்வாய்க் கிழமை : குண்டூர் ஜில்லாவில் வரி கொடா இயக்கம் நடந்து கொண்டிருக்கிறது. தென் கன்னட ஜில்லாவிலும் நடப்பதாகக் கேள்வி. சட்ட மறுப்பு இயக்கம் தமிழ் நாட்டில் மெதுவாக நடந்து வருகிறது. மிதவாதிகள் மகாநாடு கூடி அதிகமான கோரிக்கைகளை அரசாங்கத்துக்கு அனுப்புவதாகச் சொல்லுகிறார்கள். இந்த மிதவாதிகளுக்கு என்றைக்குத்தான் சுறுசுறுப்பு ஏற்படுமோ தெரியவில்லை. அவர்கள் கண் முன்னால் எத்தனையோ தியாகங்களும் கஷ்டங்களும் நடைபெறுகின்றன. அவற்றைப் பார்த்துக் கொண்டு அவர்கள் எத்தனை காலம் சும்மா இருக்கப் போகிறார்களோ ?



சிறைத் தலைமை அதிகாரி என்னை எப்படியாவது மறுபடியும் வைத்திய சாலைக்குக் கொண்டுபோய்விட முனைந்திருப்பது போல் தெரிகிறது. அதற்கு என்ன காரணம் என்று மட்டும் விளங்கவில்லை. அங்கே போனால் மூட்டைப் பூச்சிகளுடனும், துர்நாற்றத்துடனும் உறங்க வேண்டியிருக்கும். அங்கே போவதை நான் ஒரு கொடிய தண்டனையாகக் கருதுவதாக அவரிடம் தெளிவாக்கிவிட எண்ணியிருக்கிறேன்.


காலையில் எட்டு மணி வரைதான் உலாவலாம் என்பது சிறை விதி. அந்த நேரம் வரையில் வெளியில் உலாவிக் கொண்டிருந்தேன். அதற்குப் பிறகு எட்டேமுக்கால் மணி வரையில் நூல் நூற்றேன்.

மாதம் ஒரு முறை எழுதும் கடிதத்தை எழுதி முடித்தேன். மாதத்தில் ஒரு கடிதம்தான் எழுதலாம். ஆகையால் அதிலேயே அனைவருக்கும் எழுத வேண்டியவைகளை எழுதி ஆபீஸுக்கு அனுப்பினேன். அதன் பிறகு சுந்தர காண்டம் படித்து முடித்தேன். என்ன அழகான காவியம்! ''ஏதேனும் காரியம் கைகூட வேண்டுமானால் சுந்தர காண்டத்தைப் பாராயணம் செய்வார்கள்'' என்று என் தந்தை அவர்கள் கூறியது ஞாபகத்துக்கு வருகிறது. நம்முடைய சுதந்திரச் சீதையையும் கண்டு விடுவோமா ?

சுதேசி வேலை செய்வதற்காக அதிகமான பணம் ஜில்லா காங்கிரஸ் காரியதரிசிகளிடம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் சிறைக்குச் சென்று விட்டால் எல்லாம் குழப்பமாகிக் கெட்டுப் போகும் என்பதாகவும் சிலர் எண்ணுகின்றனர். இந்தக் கருத்து ஆபத்தானது என்று டாக்டர் ராஜனுக்கு எழுதினேன். பணம் என்பது ஒரு நல்ல பொருள்தான். ஆயினும் அநேக சமயங்களில் அது இடையூறாக ஆகிவிடுகிறது. பணத்தைப் பாதுகாப்பதிலேயே கண்ணாயிருந்தால் பணி பாழாய்ப் போகும். அது கூடாது. சத்தியாக்கிரகத்தில் இறங்கிவிட்டோம். அரை குறை எண்ணம் ஆகாது. முழுமூச்சாக இதை நடத்த வேண்டியதுதான்.

இன்று ஏற்பட்ட ஒரு வேடிக்கையாதெனில் ஜனவரி இருபத்தெட்டாம் தேதி நடைபெறும் மத்திய கலாசாலை தினக் கமிட்டிக்கு வரும்படி எனக்கு அனுப்பியுள்ள அழைப்புக் கடிதம்தான்! நான் வேலூர்ச் சிறையில் இருப்பதை அறிந்தே யாரோ ஒருவர் இந்த விலாசத்துக்கு அழைப்பை அனுப்பியிருக்கிறார்.

உள்ளும் புறமும்



ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள்

மநுஷ்யனாகப் பிறந்த ஒவ்வொருத்தனும் ஓயாமல் அலைச்சலான அலைச்சல் அலைந்து கொண்டிருக்கிறானே, எதற்காக? ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்குத்தான். வெளியிலிருக்கிற வஸ்துக்களிடம் இவனுக்கு ஆசை. அவற்றைப் பெறவே அலைகிறான். ஒன்று கிடைத்து விட்டாலும் போதவில்லை. இன்னொன்றுக்கு ஆசைப்படுகிறான். அதைத் தேடி ஓடுகிறான். இவனுக்குச் சாந்தி என்பதே ஒரு நாளும் இல்லை.

வெளியில் இருக்கிற வஸ்து வந்தால்தான் சந்தோஷம், ஆனந்தம் என்று துரத்திக் கொண்டே இருப்பவனுக்குச் சாந்தி எப்படி வரும்? வெளியில் இருப்பது நம் வசத்தில் இருப்பதல்ல. அது வந்தாலும் வரும், போனாலும் போகும். அதை நம் வசப்படுத்திக் கொண்டதாக நினைத்தபோதே கைவிட்டும் போகக் கூடும். நமக்கு அந்நியமான வெளியிலிருந்து ஆனந்தத்தை நிரந்தரமாகச் சம்பாதித்துக் கொள்வது நடக்காத காரியம். அது சாந்தியைக் கெடுக்கிற பிரயத்தனம்தான்.

மநுஷ்யன் புறத்தில் ஆனந்தத்தைத் தேடிக் கொண்டு போவதற்குக் காரணம், அவன் உள்ளுக்குள் தானே ஆனந்த ஸ்வரூபமாக இருப்பதுதான். ஆனால் மாயையால், தானே ஆனந்த ஸ்வரூபம் என்பதை மறந்து விட்டிருக்கிறான். இருந்தாலும் இவனுடைய ஸ்வபாவமே ஆனந்தமானபடியால் இவனுக்கு ஆனந்தம் அடைய வேண்டும் என்ற எண்ணம் மட்டும் இருக்கிறது. மநுஷ்யர்களில் எவராவது ஆனந்தத்தைத் தேடாமல் துக்கத்தைத் தேடிப்போகிறவர் உண்டா? ஆனாலும் அந்த ஆனந்தம் உள்ளே இருப்பதை அறிந்து சாந்தத்தில் அதை அநுபவிக்காமல், வெளியிலே ஆனந்தத்தைத் தேடித் துரத்திக் கொண்டே போய்ச் சாந்தியை ஓயாமல் கெடுத்துக் கொள்கிறார்கள். தன் நிஜ ஸ்வரூபம் என்ன என்று ஒருவன் அம்பாளின் கிருபையால் பிரார்த்தித்து ஆத்ம தியானம் செய்து பார்த்தால், தானே பூரண ஆனந்த வஸ்து என்று தெரிந்து கொள்வான்.

இவனுடைய இயல்பான உள் ஆனந்தம் மகா சமுத்திரம் மாதிரி இருக்கிறதென்றால், இவன் இப்போது புறத்தில் தேடி ஓடுகிற வஸ்துக்களிலிருந்து கிடைக்கிற ஆனந்தமெல்லாம் ஒரு திவலை மாதிரிதான். இதை ஒருத்தன் உணர்ந்து விட்டால் அப்புறம் வெளி இன்பத்தைத் தேடவே மாட்டான். தன்னைத் தானே அநுபவித்துக் கொண்டு ஆனந்த சமுத்திரமாக இருப்பான். சமுத்திரம் இருக்கிற இடத்தில் இருந்தாலும் அதனிடம் நதிகள் வந்து விழுகின்றன அல்லவா? அப்படியே ஆசைகள் இவனிடம் வந்து சமுத்திரத்தில் நதிகள் விழுந்து மறைவது போல் மறைந்தே போய்விடும். 'ஆபூர்யமாணம் அசலப்ரதிஷ்டம் சமுத்ரம்' என்று கீதை சொன்ன மாதிரி பேரின்பக் கடலாக நிறைந்து, அசைவதற்கு இடமே இல்லாத அளவுக்கு எங்கும் நிறைந்து, அசையாமல் பரம சாந்தமாக நிற்பான். தேவேந்திர பதவியின் ஆனந்தம் கூட இந்த ஆத்மானந்தக் கடலில் ஒரு துளிதான் என்கிறார் ஸ்ரீ பகவத் பாதர்கள்: 'யத் ஸௌக்யாம்புதி லேச லேசத இமே சக்ராதயோ நிர்விருதா:'

பதவி, பணம், ஸ்திரீ — புருஷாள், கௌரவம், பப்ளிஸிடி — என்றிப்படி வெளியிலிருந்து நமக்கு ஆனந்தம் கிடைப்பதாக எண்ணிக் கொண்டு ஓயாமல் யத்தனம் செய்வது அத்தனையும் சமுத்திரமாக இருக்கிற நாம் அதை அறியாமல் ஒரு சொட்டு ஜலத்துக்காகத் தவிக்கிற மாதிரிதான். வெளிப் பொருள் எதுவோ கிடைக்காததால் நமக்குக் குறை வந்துவிட்டதாகத் துக்கப்படுவது சுத்தத் தப்பு. நமக்குக் குறையே இல்லை. நமக்குள் நாமே பூரண வஸ்து. நமக்கு அந்நியமாக வெளி என்றே ஒன்று இல்லை. வெளியிலே இருக்கிற அத்தனை ஆனந்தமும் நம்முள்ளேயே அடக்கம். 'தானாக வெளியிலிருந்து எது வந்தாலும் வரட்டும். சமுத்திரம் நதிகளை அடக்கிக் கொள்வதுபோல் அவற்றையும் உள்ளே இருப்பதோடு சேர்த்துக் கொள்வோம். எதுவும் வரவில்லை என்றால் பாதகமில்லை. உள்ளே இருக்கிற பரமாத்ம வஸ்துவின் லேசந்தான் வெளியில் இருப்பதெல்லாம்' என்கிற தெளிவோடு எப்போதும் இருக்க முயல வேண்டும்.





குளிர் நாட்களிலே வரண்டிடும் சரும மென்மையைக் குழைவுடனே உமக்கு மீட்டுத் தருவது பாண்ட்ஸ் கோல்டு க்ரீம்: உலகெங்குமே அரம்பையர் விரும்பும் அழகுசாதனம் இயற்கை எவ்வாறு செயல்படுகிறதோ அதே முறையில்

உமது சருமத்தைப் பேணிக் காப்பது பாண்ட்ஸ் கோல்டு க்ரீம். வாடாமலரென மென்மையோடு மிளிரத் தேவைப்படும் சருமத் தைலங்களை மீட்டுத் தருகிறது பாண்ட்ஸ் கோல்டு க்ரீம். இட்டுப் பயனடைவீர் இன்றிரவே!

உலகிலேயே உச்ச விற்பனை உடைய கோல்டு க்ரீம்: பாண்ட்ஸ்

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்க்., (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் அமெரிக்காவிலே இணைக்கப்பட்டது.)

லின்டாஸ்- CPC. 2-140 TM.

அலை ஓசை

அமரர் கல்கி



14. ரஜனிபூர் ராஜகுமாரி

சூரியா தன் திகைப்பை நீக்கிக் கொண்டு, ''மாப்பிள்ளை! இது என்ன கோபம்? இங்கிலாந்தில் இருந்தபோது இங்கிலீஷ் சினிமாக்கள் அதிகமாகப் பார்த்தீர்களா, என்ன? ஒரு காரணமும் இல்லாமல் துப்பாக்கியால் சுடுவேன் என்கிறீர்களே? தோட்டாக்களை வீணாக்க வேண்டாம். பின்னால் ஏதாவது அவசியமான காரியத்துக்கு உபயோகமாக இருக்கும்'' என்றான்.

''எப்போதும் நீ அரட்டைக்கல்லித்தனமாகப் பேசறதில் கெட்டிக்காரன் என்று எனக்குத் தெரியும். உன் அதிகப்பிரசங்கத்தை என்னிடம் காட்ட வேண்டாம். சீதாவை அழைத்துக் கொண்டு ஓடினவன் அல்லவா நீ? இப்போது வஸந்தியையும் 'கிட்நாப்' செய்ய வந்துவிட்டாய்! உன்னைப் போலீஸில் பிடித்துக் கொடுத்து விட்டு மறு காரியம் பார்க்கப் போகிறேன். தப்பி ஓடப் பார்க்காதே! ஓடினால் கட்டாயம் சுட்டு விடுவேன்!'' என்றான் ராகவன்.

ராகவனுக்குப் பின்புறத்தில் நின்றுகொண்டிருந்த காமாட்சி அம்மாள், ''அப்பா, ராகவா! இது என்ன ரகளை வந்ததும் வராததுமாய்? அப்படி ஒன்றும் சூரியா செய்யத் தகாத காரியத்தைச் செய்யக் கூடியவன் அல்ல. நான்தான் வஸந்தியை அவள் அம்மாவிடம் அழைத்துப் போகும்படி சூரியாவிடம் சொன்னேன். வெகு நாட்களாக அந்தக் குழந்தை அப்பா, அம்மா இரண்டு பேரையும் பார்க்காமல் ஏங்கிக் கிடந்தது!'' என்றாள்.

வஸந்தி, ''சூரியா மாமா! நான் அப்பாவைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறேன். நீங்கள் சட்டென்று இங்கிருந்து ஓடிப் போய் விடுங்கள்!'' என்றாள்.

குழந்தையின் மழலையைக் கேட்ட ராகவனுடைய மனம் சாந்தமும் சிறிது வெட்கமும் அடைந்தது.

''மிஸ்டர் சூரியா! பொம்மனாட்டிகள் எல்லோருமே உன்னுடைய கட்சியில்தான் இருப்பார்கள் என்று எனக்குத் தெரியும். சரி! இந்தத் தடவை போனால் போகிறதென்று விட்டு விடுகிறேன். விடு சவாரி! நிற்காதே! கெட் அவுட்!'' என்றான் ராகவன்.

''ஸார்! நான் போகத்தான் போகிறேன். ஆனால் போவதற்கு முன்னால் உங்கள் மனத்தில் உள்ள ஒரு தப்பெண்ணத்தை நிவர்த்திக்க விரும்புகிறேன். உங்கள் மனைவி சீதாவை நான் அழைத்துக்கொண்டு ஓடிப் போனதாய்ச் சற்று முன்பு சொன்னீர்கள்! நிஜமாகவே நீங்கள் அவ்விதம் நம்புகிறீர்களா என்று தெரியவில்லை. நம்பினால் அதைக் காட்டிலும் தவறு வேறொன்றுமில்லை. ரஜனிபூர் ராஜாவின் ஆட்கள் சீதாவைக் கைப்பற்றிக் கொண்டு போனார்கள். அதைத் தடுத்து நிறுத்திச் சீதாவைக் காப்பாற்றிக் கொண்டு வருவதற்காகவே, நான் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றேன். அப்போதுதான் போலீஸார் என்னைப் பிடித்துக்கொண்டார்கள். சத்தியமாகச் சொல்கிறேன்!'' என்று சொன்னான் சூரியா.

''ஆமாண்டா, அப்பா, ராகவா! இதையெல்லாம் சூரியா என்னிடமும் சொன்னான். அவன் சொன்னதெல்லாம் எனக்கு நம்பிக்கையாயிருந்தது. சீதாவும் அதே மாதிரிதான் சொன்னாள்!'' என்றாள் காமாட்சி அம்மாள்.

''அம்மா பட்ட கஷ்டத்தையெல்லாம் கேட்டால் அதிசயமாகவும் பயங்கரமாகவும் இருக்கு, அப்பா! அராபியக் கதைகளிலே வருகிறதுபோல் இருக்கு'' என்றாள் வஸந்தி.

ராகவன் தன் கைத் துப்பாக்கியைப் பையில் போட்டுக் கொண்டு, ''அப்படியானால் அதையெல்லாம் எனக்கும் விவரமாகச் சொல்லிவிட்டுப் போ, சூரியா! ஊருக்குப் போக அவசரம் ஒன்றுமில்லையே?'' என்றான்.

''அப்படியே ஆகட்டும், மாப்பிள்ளை ஸார்! எனக்கு அவசரம் ஒன்றும் இல்லை!'' என்றான் சூரியா.

* * *

சூரியா ரஜனிபூர் ராஜாவின் ஆட்களைப் பற்றிக் குறிப்பிட்டவுடனேயே ராகவனுடைய மனத்தில் அதைப் பற்றிச் சூரியாவிடம் முழு விவரமும்

தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் உண்டாகி விட்டது. ஆகையால் ஸ்நானம், சாப்பாடு எல்லாம் முடிந்ததும் சூரியாவை அழைத்துக் கொண்டு தன்னுடைய பழைய மாடி அறைக்குப் போய்ச் சேர்ந்தான்.

'' சூரியா! கப்பலில் வரும்போது நான் ஒரு பயங்கரமான சொப்பனம் கண்டேன். குழந்தை வஸந்தி காணாமற் போய்விட்டது போலவும் அவளைத் தேடிக் கொண்டு நான் பூமியிலும் வானத்திலும் நீரிலும் நெருப்பிலும் புகையிலும் பனியிலும் ஓடி ஓடி அலைந்ததாகவும் கண்டேன். குழந்தையின் குரல் மட்டும் 'அப்பா! அப்பா!' என்று பரிதாபமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. ஆனால் அவள் இருக்கும் இடத்தை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. கனவு கலைந்து எழுந்ததும் 'இனி ஒரு நாளும் வஸந்தியை விட்டுப் பிரிவதில்லை' என்று சபதம் செய்து கொண்டேன். ஆகையினால்தான் நீ வஸந்தியை அழைத்துப் போக வந்திருக்கிறாய் என்று கேள்விப்பட்டதும் எனக்கு அவ்வளவு கோபம் வந்தது! அதை நீ பொருட்படுத்த வேண்டாம்!'' என்றான் ராகவன்.

''மாப்பிள்ளை ஸார்! கனவு காண்கிற விஷயத்தில் தாங்களும் தங்களுடைய மனைவியும் போட்டி போடுவீர்கள் போலிருக்கிறதே! நாம் ஆக்ராவுக்குப் போயிருந்தபோது அத்தங்காள் கனவு கண்டது பற்றிச் சொன்னது ஞாபகம் இருக்கிறதா? ஆனால் அத்தங்காளின் வாழ்க்கையில் அந்தப் பயங்கரக் கனவைக் காட்டிலும் பயங்கரமான பல சம்பவங்கள் உண்மையாகவே நிகழ்ந்து விட்டன!'' என்று சொன்னான் சூரியா.

''அந்தச் சம்பவங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்குத்தான் உன்னை இருக்கும்படி சொன்னேன், சூரியா! நினைத்துப் பார்த்தால் வேடிக்கையாகத் தோன்றவில்லையா? சீதாவைப் பற்றி அவளுடைய கணவனாகிய எனக்குத் தெரிந்திருப்பதைக் காட்டிலும் உனக்கு அதிகமாகத் தெரிந்திருப்பது ஆச்சரியம் அல்லவா?'' என்று ராகவன் குத்தலாகக் கேட்டான்.

'' ஆச்சரியமான விஷயம்தான் ; இல்லை என்று சொல்லவில்லை. சந்தர்ப்பங்கள் அப்படி ஏற்பட்டு விட்டன. மேலும் நீங்கள் அநாவசியமாக என்னவெல்லாமோ சந்தேகப்பட்டுக்கொண்டு அத்தங்காளைப் பற்றிக் கவனிக்காமல் இருந்து விட்டீர்கள்...''

''என்னுடைய சந்தேகங்கள் அவசியமா, அநாவசியமா என்பதைப் பற்றி இப்போது சர்ச்சை வேண்டியதில்லை. ரஜனிபூர் ராஜாவின் ஆட்கள் உன் அத்தங்காளைப் பிடித்துக் கொண்டு போனார்கள் என்று ஒரு கதை சொன்னாயல்லவா?...''


''அது கதையல்ல, மிஸ்டர் ராகவன்! சத்தியமாக நடந்தது!''

''அப்படியே இருக்கட்டும். ரஜனிபூர் ஆட்கள் சீதாவைப் பிடித்துக் கொண்டு போனது எதற்காக? பிடித்துக்கொண்டு போய் என்ன செய்தார்கள்? நீ சொல்வதைமட்டும் உண்மை என்று நிரூபித்து விடும்பட்சத்தில் அந்த ரஜனிபூர் சமஸ்தானத்தையே ஒழித்துக் கட்டிவிட்டு மறு காரியம் பார்ப்பேன்!'' என்றான் ராகவன்.

''என்னால் ஒன்றையும் நிரூபிக்க முடியாது, மாப்பிள்ளை! எப்பொழுதோ யாரோ செய்த காரியத்தை நான் எப்படிச் சாட்சி விட்டு நிரூபிக்க முடியும்? நான் சொல்வதை நீங்கள் நம்பினால் தான் உண்டு.''

''அப்படியானால் நம்பிக்கை உண்டாகும்படியாக உன்னுடைய கதையைச் சொல், பார்க்கலாம்.''

''மறுபடியும் 'கதை' என்றே கூறுகிறீர்கள். நான் என்ன சொல்லி என்ன பிரயோசனம்?''



''நமக்குள் வீண் விவகாரம் வேண்டாம். முதலில், ரஜனிபூர் ராஜாவின் ஆட்கள் எதற்காகச் சீதாவைப் பிடித்துக்கொண்டு போனார்கள் என்று சொல். ஒருவேளை காணாமற் போன ரஜனிபூர் ராஜகுமாரி என்பதாகச் சீதாவை நினைத்துக் கொண்டார்களோ?'' என்று ராகவன் கேலியாகக் கேட்டான்.

''ஆமாம்; உங்களுக்குத்தான் தெரிந்திருக்கிறதே?'' என்றான் சூரியா.

சூரியாவினுடைய பதில் ராகவனுடைய ஆவலை அதிகமாக்கிற்று.

''நான் ஏதோ குருட்டாம்போக்காய்ச் சொன்னேன். நீ அதுதான் உண்மை என்கிறாய். நான் ஆச்சரியக் கடலில் மூழ்கிப் போக வேண்டியதுதான். ஆயினும் பாக்கி விவரங்களையும் தெரிந்து கொள்வதற்காக அடியோடு ஆச்சரியக் கடலில் முழுகிப் போய்விடாமல் மேலே தலையை மட்டும் நீட்டி வைத்துக்கொண்டிருக்கிறேன்!'' என்று சொன்னான் ராகவன்.

''இன்னும் உங்களுடைய கேலிப் பேச்சு போகவில்லை, மாப்பிள்ளை ஸார்! நீங்கள் எப்போதாவது ஒரு விஷயத்தைக் கவனித்ததுண்டா? தாரிணி தேவியும் சீதா அத்தங்காளும் அசப்பிலே பார்க்கும்போது உருவ ஒற்றுமை கொண்டவர்களாக உங்களுக்கு எப்போதாவது தோன்றியதுண்டா?'' என்று சூரியா கேட்டான்.

ராகவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. மனத்தில் பற்பல ஐயங்களும் ஊகங்களும் அலைமோதிக் கொண்டு எழுந்தன. ஆயினும் வெளிப்படையான அமைதியுடன், ''இல்லை, சூரியா! பெண்மணிகளின் உருவங்களையோ அவர்களுடைய உருவ ஒற்றுமை வேற்றுமைகளையோ நான் அவ்வளவாகக் கவனிப்பதில்லை. நீ சொல்வது போல் தாரிணியும் சீதாவும் ஓரளவு உருவ ஒற்றுமை உள்ளவர்கள் என்றே வைத்துக் கொள்ளலாம். அதனால் என்ன?'' என்று கேட்டான்.

''வேறொன்றும் இல்லை. ரஜனிபூர் ஆட்கள் தாரிணி தேவி என்று நினைத்துக்கொண்டு சீதாவைக் கைப்பற்றிக் கொண்டு போனார்கள்...?''

''ஆகா! அப்படியானால் தாரிணி...?'' என்று ராகவன் ஆரம்பித்து, ஒரு பெரிய கேள்விக் குறியுடன் வாக்கியத்தை நடுவில் நிறுத்தினான்.

''ஆமாம்; ரஜனிபூர் ராஜகுமாரி உண்மையில் தாரிணி தேவிதான்'' என்றான் சூரியா.

ராகவன் சற்று நேரம் வியப்பினால் திகைத்திருந்தான். பிறகு, ''உனக்கு எப்படித் தெரிந்தது, சூரியா? தாரிணியுடன் எத்தனையோ காலம் நான் பழகியவன். அவளும் என்னிடம் சொல்லவில்லை; நானும் சந்தேகிக்கவில்லையே?'' என்றான்.

''தாரிணி என்னிடம் சொல்லவில்லை. நானும் சந்தேகிக்கவில்லை. சீதா அத்தங்காள் மூலமாகத்தான் எனக்கு முதலில் தெரிந்தது.''

''தாரிணி என்று எண்ணிக்கொண்டு சீதாவைப் பிடித்துப் போனார்கள் என்று எப்படி அனுமானித்தாய்?''

''சீதாவை அவர்கள் கைப்பற்றிய முதல் நாள் நானும் தாரிணி தேவியும் வெள்ளி வீதிக்குப் பின்னால் உள்ள காந்தி மைதானத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம்...''

அசூயை நிறைந்த குரலில் ராகவன், ''என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள்?'' என்று கேட்டான்.



''புரட்சி இயக்கத்தை எப்படித் தொடர்ந்து நடத்துவது, இந்தியாவின் சுதந்திரத்தை எப்படிக் கைப்பற்றுவது, வெள்ளைக்காரர்களை நாட்டை விட்டு எப்படி வெளியேற்றுவது என்பது போன்ற விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். தாரிணி அவ்விடமிருந்து போன பிறகு மூன்று ஆசாமிகள் என்னிடம் வந்தார்கள். அவர்களுடைய தோற்றத்தைப் பார்த்தவுடனேயே சுதேச சமஸ்தானத்து ஆட்கள் என்று தெரிந்து போய்விட்டது. தாரிணியைக் கைப்பற்றுவதற்கு நான் உதவி செய்தால் லட்சம் ரூபாய் கொடுப்பதாக அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அவர்களுடைய நோக்கம் என்னவென்பதை அப்போது நான் அறியவில்லை. சமஸ்தான ராஜாக்களின் வழக்கத்தை யொட்டித் துர்நோக்கம் கொண்டு தாரிணியைக் கொண்டுபோக எண்ணுகிறார்கள் என்று எண்ணினேன். அவர்களை நன்றாகத் திட்டி அனுப்பினேன். மறு நாள் அதே காந்தி மைதானத்தில் ஏறக்குறைய அதே நேரத்தில் அதே இடத்தில் நானும் சீதா அத்தங்காளும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம்....''

''ஆகா! அப்படிச் சொல்லு! உத்தமியாகிய சீதா அத்தங்கா யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டுக் கிளம்பிக் காந்தி மைதானத்துக்கு வந்தாள் அல்லவா? எதற்காக?''

''மாப்பிள்ளை! நீங்கள் கோபித்துக் கொள்வதில்லை என்றால் உண்மையைச் சொல்லி விடுகிறேன்.''

''நான் கோபித்துக் கொள்வதானால் பொய் சொல்வாயாக்கும்?''

''சரி! எப்படியானாலும் நிஜத்தைச் சொல்லி விடுகிறேன். ராகவன்! சற்று முன்னால் நீங்கள் என்னைப் போலீஸாரிடம் பிடித்துக் கொடுத்து விடுவதாகச் சொன்னீர்கள். அப்படிச் செய்திருப்பின் ஒன்றும் மோசம் முழுகியிராது. ஆனால் முன்னொரு தடவை என்னைப் போலீசில் பிடித்துக் கொடுப்பதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்திருந்தீர்கள். தங்கள் வீட்டைச் சுற்றி இரகசியப் போலீஸ் சூழ்ந்திருக்க ஏற்பாடு செய்திருந்தீர்கள். அந்தச் சமயம் நான் கைதியாகியிருந்தால் புரட்சி இயக்கத்துக்குப் பெருந் தீங்கு நேர்ந்திருக்கும். அவ்விதம் நேராமல் தங்கள் மனைவி சீதாதான் காப்பாற்றினாள். உங்கள் வீட்டுக்கு நான் வர வேண்டாம் என்று எனக்கு எச்சரிக்கை செய்வதற்காகக் காந்தி மைதானத்துக்கு வந்தாள்....''

சீதா தன்னைத் தேடி வந்தது பற்றிய முழு உண்மையையும் சூரியா சொல்லவில்லை; பாதிதான் சொன்னான். அதுவே ராகவனுடைய மனத்தில் கொதிப்பை உண்டாக்கப் போதுமானதாக இருந்தது. 'ஆகா! அந்தச் சண்டாளி அப்படியா செய்தாள்? இந்தக் காலிப் பயலைக் காப்பாற்றிக் கொடுப்பதில் அவளுக்கு ஏன் அத்தகைய சிரத்தை ஏற்பட்டது?' என்று மனத்துக்குள் எண்ணிப் பொருமினான்.

வெளிப்படையாக, ''சூரியா! ஒரு பெண் பிள்ளையின் பேச்சை நீ இவ்வளவு தூரம் நம்பக் கூடியவன் என்று நான் எண்ணவில்லை. நான் ஏதோ தமாஷாகப் பேசியதை உண்மையென்று நினைத்துக் கொண்டு வந்து உன்னிடம் ஏதோ உளறியிருக்கிறாள்!'' என்றான்.

''இருக்கலாம், மிஸ்டர் ராகவன்! தமாஷாகக் கூடக் கெடுதலான காரியங்களைப் பற்றிப் பேசக் கூடாதென்று இதிலிருந்து ஏற்படுகிறது. உங்களுடைய தமாஷ் பேச்சிலிருந்து எவ்வளவு விபரீதங்கள் நேர்ந்து விட்டன, பாருங்கள்!'' என்றான் சூரியா.

''அந்த விபரீதங்களைப் பற்றிய விவரத்தை இன்னும் நீ எனக்குச் சொல்லுகிற வழியாக இல்லை. அதைத் தெரிந்து கொள்வதற்கோ எனக்கு ஒரே பரபரப்பாக இருக்கிறது!'' என்றான் ராகவன்.

''நீங்கள் சொல்லும்படி விட்டால் தானே? குறுக்கே ஏதாவது கேட்டுக் கொண்டே யிருந்தால் எப்படிச் சொல்வது? சற்று மௌனமாகக் கேட்டால் எல்லாவற்றையும் சொல்லி விடுகிறேன்!''

''சரி! இதோ மௌனம்!'' என்று சொல்லி ராகவன் கேலியாகத் தன் வாயைப் பொத்திக் கொண்டான்.

பிறகு சூரியா, சீதாவைத் தாரிணி என்று நினைத்துக் கொண்டு ரஜனிபூர் சமஸ்தானத்து ஆட்கள் கைப்பற்றிக் கொண்டு போனது முதல் சீதா கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்து கைதியானது வரையில் எல்லாவற்றையும் சுருக்கமாகக் கூறினான்.

''ரஜனிபூர் ஆட்கள் செய்த தவற்றையே கல்கத்தா போலீஸ்காரர்களும் செய்தார்கள். சீதா அத்தங்காளைத் தாரிணி தேவி என்று கருதிப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்து சிறைக்கு அனுப்பினார்கள்!'' என்று சூரியா சொல்லி முடித்தான்.

15. கங்காபாயின் கதை

சூரியா சொல்லிய கடைசி விஷயம் ராகவனுடைய எண்ணத்தை வேறு வழியில் செலுத்தியது. பலவித சந்தேகங்கள் அவன் மனத்தில் உதித்தன. ''ரஜனிபூர் பைத்தியம்'' என்று சொல்


தேயிலை உயர்தரம்,
கோள்கலமோ நிரந்தரம்!
உங்களுக்கு மிகவும் பிடித்தமான
ஸ்பென்ஸரின்
ரெட் பாண்ட் அல்லது
கிரீன் லேபல் தேயிலை
இப்போது வண்ணம் நிறைந்த, காற்றுப் புகாத,
உறுதியான, பலவிதப் பயன்கள் கொண்ட
பாலிஎதலீன்
டப்பாக்களில்
கிடைக்கிறது. முந்துங்கள். ஸ்டாக் தீர்வதற்குமுன்
விரைந்து சென்று வாங்குங்கள். தென்னிந்தியாவிலுள்ள
பெரு நகரங்களில் மட்டுமே இந்தச் சலுகை.
ஸ்பென்ஸர் அண்ட் கோ. லிமிடெட்
சென்னை மற்றும் கிளைகள்



Creative Unit-555-Tam.

லப்பட்ட ஸ்திரீ தன்னிடம் சீதாவைப் பற்றி எச்சரித்தது நினைவுக்கு வந்தது. இந்த விஷயத்தில் இன்னும் ஏதோ மர்மம் இருக்கிறதென்றும் அதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும் எண்ணினான். ஒருவேளை சீதா தான் உண்மையில் ரஜனிபூர் இளவரசியோ, என்னமோ; இந்தப் போக்கிரி சூரியாவும் அவனுடைய காதலி தாரிணியும் சேர்ந்து ஏதோ சூழ்ச்சி செய்துகொண்டிருக்கிறார்களோ என்னமோ? இல்லாவிட்டால் சீதா தவறாகச் சிறைக்கு அனுப்பப்பட்டிருந்தும் இவர்கள் ஏன் அவள் தாரிணி இல்லை என்று சொல்லி அவளை விடுவிக்க முயற்சி எதுவும் செய்யவில்லை?

''சூரியா! தாரிணி தேவிதான் காணாமற்போன ரஜனிபூர் இளவரசி என்று எதனால் அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறாய்? ஏன் அந்த ராஜகுமாரி சீதாவாக இருக்கக் கூடாது?'' என்றான் ராகவன்.

சூரியாவின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. ''சீதா, ரஜனிபூர் ராஜகுமாரி என்று ஏற்பட்டால் எவ்வளவோ நலமாயிருக்கும், மிஸ்டர் ராகவன்! ஏனெனில், தாரிணிக்கு அந்த 'ராஜகுமாரி' என்கிற பட்டமே வேப்பங்காயாக இருக்கிறது. எனக்கும் அப்படித்தான். ஆனால் சீதா அத்தங்கா ரொம்பவும் 'ரொமாண்டிக்' இயல்பு உள்ளவள். தான் ராஜகுமாரி என்று ஏற்பட்டால் அத்தங்காளுக்கு எவ்வளவோ சந்தோஷமாக இருக்கும். தங்களுக்கும் அது திருப்தி அளிக்கும் என்று தெரிகிறது. அத்தங்கா பேரில் தங்களுக்குள்ள கோபத்தையெல்லாம் மறந்து சந்தோஷம் அடைவீர்கள். ஆனால் அப்படி இல்லையே, என்ன செய்வது? யாருக்கு ஒரு பொருள் பிரியமாயிருக்கிறதோ, அவருக்கு அப்பொருளைக் கடவுள் அளிப்பதில்லை. வேண்டாதவர்களுக்குப் பார்த்துக் கொடுக்கிறார்!'' என்று சூரியா சொன்னான்.

''உன்னுடைய வேதாந்தம் அப்புறம் இருக்கட்டும். சீதா டில்லியை விட்டுப் போன சில நாளைக்கெல்லாம் எனக்கு ஓர் அனுபவம் ஏற்பட்டது. அதைச் சொல்கிறேன், கேட்கிறாயா?''

''பேஷாகக் கேட்கிறேன்; சொல்லுங்கள்!'' என்றான் சூரியா.

அதன் பேரில் ராகவன், திடீரென்று ஒரு நாள் கையில் கத்தியுடன் தோன்றிச் சீதாவைச் சரியாக நடத்த வேண்டும் என்று தனக்கு எச்சரிக்கை செய்துவிட்டுப் போன வெறி கொண்ட ஸ்திரீயைப் பற்றிச் சூரியாவிடம் விவரமாகச் சொன்னான்.

''அந்த ஸ்திரீ யார்? சீதாவைப் பற்றி அந்த வடநாட்டு ஸ்திரீக்கு ஏன் அவ்வளவு சிரத்தை உண்டாக வேண்டும்? உன்னால் சொல்ல முடியுமா?'' என்று ராகவன் கேட்டான்.

''சொல்ல முடியும்!'' என்று சூரியா சொன்ன பதில் ராகவனைத் தூக்கிவாரிப் போட்டது.

''அந்த ஸ்திரீயின் முதல் பெயர் ரமாமணி பாய். இப்போது அவள் பெயர் ரஸியா பேகம். சீதா அத்தங்காள்மீது அவளுக்கு வாஞ்சை ஏற்படக் காரணம் உண்டு. அது பெரிய கதை, மாப்பிள்ளை ஸார்! கிட்டத்தட்ட முப்பது வருஷங்களுக்கு முன்னால் ஆரம்பிக்கும் கதை. எனக்கும் வெகு காலம் வரையில் தெரியாமல்தான் இருந்தது. சில மாதங்களுக்கு முன்புதான் தெரிந்து கொண்டேன். அதுவும் ரஸியா பேகம் சொல்லித்தான் தெரிந்தது. அந்தத் துர்ப்பாக்கியவதி பெரும்பாலும் வெறி கொண்டு திரிகிறவள். அபூர்வமாகச்

அண்ணா எதை மறைத்தார்?



பள்ளி இறுதி வகுப்பில் அண்ணா தேர்வு எழுதிக்கொண்டிருந்தபோது ஒரு விந்தையான நிகழ்ச்சி நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

•

தேர்வு எழுதிக் கொண்டிருந்த போதே, அண்ணா சட்டைப் பையில் கையை விட்டிருக்கிறார். பின்னர் எழுதுவதை நிறுத்திவிட்டு, ஒரு கையால் முகத்தை மறைத்துக் கொண்டு மறு கையையும் முகத்தருகே கொண்டு செல்லும்போது, மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்த ஆசிரியர் அவரைக் கவனித்துவிட்டார். புரியக் கூடாத குற்றம் புரிந்து விட்டவரைப் புலனாய்ந்து கண்டு பிடித்துவிட்டாற்போல், அவர் குற்றம் சாட்ட முனைந்துவிட்டார். அண்ணா காப்பி அடித்து எழுதுவதாக அவருடைய குற்றச்சாட்டைக் கேட்டு அண்ணாவுக்குச் சிரிப்பே வந்துவிட்டது. எனினும் அதைப் புன்னகையாக மாற்றிக் கொண்டு மெள்ளத் தம் பையில் கையை விட்டார்; பொடி மட்டையை வெளியே எடுத்துக் காட்டினார்.

''தேர்வைத் திறம்பட எழுத வேண்டுமானால் இது அவசியம் தேவைப்படுகிறது. ஆகவே, அருள் கூர்ந்து இதைப் பற்றி யாருக்கும் சொல்லிவிடாதீர்கள்'' என்று நயமாகச் சொல்லி ஆசிரியரிடம் தம் நிலைமையைத் தெளிவுபடுத்தினார் அண்ணா.

அதற்கு மேல் அண்ணாவின் மீது என்ன நடவடிக்கை எடுக்க முடியும்?

ஆதாரம்: பேரறிஞர் அண்ணாவின் பெருவாழ்வு

தகவல்: ''விஜயம்''

சில சமயம் அவளுடைய மனம் தெளிகிறது. அப்படிப்பட்ட சமயத்தில் தற்செயலாய் அவளைப் பார்த்தபோது கேட்டுத் தெரிந்து கொண்டேன். சீதா அத்தங்காளிடம் கூட அதைப் பற்றிச் சொல்லவில்லை. தங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாதலால் சொல்லுகிறேன்!'' — இந்தப் பூர்வ பீடிகையுடன் ஆரம்பித்து ரஸியா பேகத்தைப் பற்றிய அபூர்வ வரலாற்றைச் சூரியா கூறினான்.

* * *

மூப்பது வருஷங்களுக்கு முன்னால் ரஜனிபூர் சமஸ்தானத்தின் சிம்மாசனத்தில் வீற்றிருந்த மகாராஜா மற்றும் பல சமஸ்தான மன்னர்களைப் போலவே சிற்றின்பப் பிரியனாக இருந்தான். ராஜ்ய காரியங்களைத் திவானும் பிரிட்டிஷ் ரெஸிடெண்டும் பார்க்கும்படிவிட்டு விட்டுத் தான் லீலா விநோதங்களில் காலம் கழித்து வந்தான். அந்த லீலா விநோதங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்குப் பல துர்மந்திரிகள் இருந்தனர். அவர்களில் முக்கியமானவன் மதோங்கர்.

ஒரு சமயம் ரஜனிபூர் மகாராஜாவின் சபைக்கு மகாராஷ்டிர தேசத்திலிருந்து பாடகி ஒருத்தி வந்து பாடினாள். அவள் பெயர் கங்காபாய். மகாராஜாவுக்கு அவள் பாட்டும் பிடித்திருந்தது; அவளையும் பிடித்திருந்தது. பாடகியுடன் அவளுக்குத் துணையாக அவள் தமக்கையும் வந்திருந்தாள். தமக்கையின் பெயர் ரமாமணி. அவள் நல்ல தைரியசாலி. உலக விவகாரங்களில் தனக்கு மிஞ்சியவன் கிடையாது என்று அவளுக்கு எண்ணம்.

மகாராஜாவின் முன்னிலையில் மூன்று நாள் இன்னிசைக் கச்சேரி நடந்த பிறகு மதோங்கர் என்பவன் அந்தப் பெண்கள் தங்கியிருந்த ஜாகைக்கு வந்தான். பாடகியை மகாராஜாவுக்கு ரொம்பவும் பிடித்திருப்பதாகத்தெரியப்படுத்தினான். அதற்கு ரமாமணி, ''அப்படியானால் மகாராஜா என் தங்கையைக் கல்யாணம் செய்து கொள்ளட்டுமே?'' என்றாள். ''மகாராஜாவின் உத்தேசமும் அதுதான்'' என்றான் மதோங்கர். ரமாமணி 'கல்யாணம்' என்ற வார்த்தையினால் ஏமாந்து போய்விட்டாள். தன் தங்கைக்கு இதோபதேசம் செய்து சம்மதிக்கப் பண்ணினாள். 'மகாராஜா எவ்வளவு பெரிய ரசிகர் என்பதை நீயே பார்த்துத் தெரிந்து கொண்டாய். அவருடைய ராஜ்யமோ ரொம்பக் கீர்த்தி வாய்ந்தது. ஐசுவரியத்துக்கு அளவேயில்லை. இப்படிப்பட்ட அரண்மனையில் மகாராணியாக இருக்கப் பூர்வ ஜன்மத்தில் நீ தவம் செய்திருக்க வேண்டும்' என்றாள். 'கல்யாணம்' என்னும் கேலிக் கூத்து நடந்தது. அது கேலிக் கூத்து என்பது அந்தப் பெண்களுக்கு அப்போது தெரியாது. கொஞ்ச நாளைக்குப் பிற்பாடுதான் மகாராஜாவுக்கு ஏற்கெனவே மூன்று கல்யாணங்கள் ஆகி, அரண்மனையில் மூன்று ராணிகள் இருக்கிறார்கள் என்று தெரிந்தது.

இதையறிந்து ரமாமணி திடுக்கிட்டாலும் ஆசையையும் நம்பிக்கையையும் இழக்கவில்லை. அந்த மூன்று ராணிகளுக்கும் குழந்தை இல்லை என்பதை அவள் அறிந்து கொண்டாள். ஒரு நாள் மகாராஜா கங்காபாயைப் பார்க்க வந்திருந்தபோது அவரைத் தனியாக ரமாமணி சந்தித்தாள். கத்தியைக் காட்டிப் பயமுறுத்தினாள். தன் தங்கைக்குப் பிள்ளைக் குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தையை ரஜனிபூர் இளவரசனாக்க வேண்டும் என்று வாக்குறுதி பெற்றாள். அவ்விதமே மகாராஜாவிடம் ஒரு காகிதத்தில் எழுதிக் கையெழுத்து வாங்கிக் கொண்டாள்.

இதெல்லாம் மதோங்கருக்குத் தெரிந்தது. ரஜனிபூர் ராஜ்யம் யாருக்குப் போக வேண்டும் என்பது பற்றி அவனுக்கு வேறு யோசனை இருந்தது. ஆகையால் ரமாமணியின் சூழ்ச்சிக்கு அவன் பதில் சூழ்ச்சி செய்தான். ராணி கங்காபாய்க்குப் பிள்ளைக் குழந்தை பிறந்தால் அதைப் பிறந்த உடனேயே கொன்றுவிட வேண்டும் என்று மருத்துவச்சியிடம் ஏற்பாடு செய்தான்.

மதோங்கர் மருத்துவச்சியிடம் பேசியதை மூன்றாவது மகாராணி கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் தர்ம சிந்தையும் உதார குணமும் படைத்த உத்தமி. ரமாமணியை அழைத்து வரச் செய்து மதோங்கரின் சிசுஹத்தி ஏற்பாட்டைப் பற்றிக் கூறினாள். பிரசவ காலம் நெருங்குவதற்கு முன்பு நாலாவது மகாராணியை பம்பாய்க்கு அழைத்துக் கொண்டு போய் விடும்படியும் அதற்கு வேண்டிய ஒத்தாசை தான் செய்வதாகவும் கூறினாள். மூன்றாவது மகாராணி கூறியது உண்மை என்பதற்கு வேண்டிய ஹேஷ்யங்கள் ரமாமணிக்குக் கிடைத்தன. மகாராஜாவோ அந்தச் சமயம் ஐரோப்பாவுக்குச் சென்றிருந்தார். ஆகவே ரமாமணி மூன்றாவது மகாராணியின் யோசனைப்படியே காரியம் செய்தாள். தங்கை கங்காபாயை அழைத்துக் கொண்டு மதோங்கருடைய காவலாளிகளுக்குத் தெரியாமல் பம்பாய்க்குப் பிரயாணமானாள்.

ராஜபுத்திர் நாட்டு வழக்கத்தைக் கங்காபாய் மேற்கொண்டு, 'பர்தா' ஸ்திரீகளுக்குரிய முகமூடி அணிந்திருந்தாள். ஆகையால் அவளை அழைத்துக் கொண்டு பிரயாணம் செய்வதில் அதிக கஷ்டம் ஏற்படவில்லை. ஆனால் வேறு விதமான கஷ்டங்கள் ஏற்பட்டன. கையில் கொண்டு வந்திருந்த பணமும் ரயில் டிக்கட்டுகளும் வழியில் காணாமற் போய்விட்டன. ஆகையால் பம்பாய் நகரை அடுத்திருந்த சின்ன ரயில்வே ஸ்டேஷன் ஒன்றில் டிக்கட் பரிசோதனை செய்த ரயில்வே உத்தியோகஸ்தன் அந்த ஸ்திரீகளிடம் டிக்கட் இல்லை என்று கண்டு அவர்களை இறக்கி விட்டு விட்டான்.

இரண்டு பேரும் பெண்கள். ஒருத்தி ஒன்பது மாதம் கர்ப்பம். கையில் பணம் இல்லை. ஆனால் கங்காபாய் அணிந்து கொண்டிருந்த ஆபரணங்கள் இருந்தன. அவற்றில் ஒன்றை விற்றால் பணம் கிடைக்கும். எங்கே, எப்படி விற்பது? ரமாமணி நகையை விற்பதற்குப் போனால் ஒன்பது மாதத்துக் கர்ப்ப ஸ்திரீயை எங்கே விட்டு விட்டுப் போவது? அல்லது யாரிடம் சென்று உதவி கேட்பது?

அதுவோ சின்னஞ் சிறிய ஸ்டேஷன். வேளையோ இரவு வேளை. பம்பாயை அடுத்துள்ள சிறு ஸ்டேஷன்களில் ரயில் வரும்போது கூட்டம் கசகசவென்று இருக்கும். ரயில் போனதும் ஸ்டேஷன் நிர்மானுஷ்யமாகி விடும்.

ரமாமணி தங்கையை அழைத்துக் கொண்டு பிரயாணிகள் தங்கும் வெயிட்டிங் அறைக்குச் சென்றாள். கங்காபாய்க்கு நிலைமை இன்னதென்று ஒருவாறு தெரிந்து விட்டது. முகத்தை மூடியிருந்த 'பர்தா' துணிக்குள்ளேயிருந்து விம்மல் சத்தம் கேட்கத் தொடங்கியது. ரமாமணி அவளுக்கு ஆறுதல் கூற முயன்றாள்.

அந்தச் சமயத்தில், ''அது என்ன விம்மல் சத்தம்?'' என்று தெரிந்து கொள்வதற்காக இராத்திரி ஸ்டேஷன் மாஸ்டர் வந்து எட்டிப் பார்த்தார். ஒரு பர்தா ஸ்திரீயையும் பர்தா இல்லாத இன்னொரு ஸ்திரீயையும் கண்டார். அவர்கள் மகாராஷ்டிர தேசத்தவர் என்பதை அறிந்து கொண்டு மராத்தி பாஷையில், ''என்ன விஷயம்?'' என்று விசாரித்தார். அப்படி விசாரித்த ஸ்டேஷன்மாஸ்டர்தான் சீதாவின் தந்தை துரைசாமி ஐயர்.

ரமாமணி பாய் அறைக்கு வெளியே வந்து அந்த ஸ்டேஷன்மாஸ்டரிடம் தங்கள் நிலைமையை ஒருவாறு எடுத்துக் கூறினாள். இராத்திரி தங்க இடம் வேண்டும் என்றும் மறுநாள் காலையில் தன் தங்கையை பம்பாயில் ஒரு பிரசவ ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்கு உதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாள்.

''உதவி செய்தால் எனக்கு என்ன தருவீர்கள்?'' என்று ஸ்டேஷன் மாஸ்டர் கேட்டார்.

துரைசாமிக்கு அப்போது சம்பளம் சொற்பம். அவருடைய மனைவி ராஜம்மாள் அதே சமயத்தில் பிரசவ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு முதல் குழந்தைப் பேற்றை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஆகையால் செலவுக்குச் சம்பளம் போதாமல் மேல் வரும்படி ஏதாவது கிடைத்தால் தேவலை என்ற நிலை ஏற்பட்டிருந்தது. ஆகையினால்தான் ''எனக்கு என்ன தருவீர்கள்?'' என்று கேட்டார். அந்தப் பெண்களின் தோற்றத்தைப் பார்த்ததில் அவர்களிடம் பணம் நிறைய இருக்க வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது.

ரமாமணி, ''நீங்கள் இந்தச் சமயத்தில் உதவி செய்தால் எங்களிடம் உள்ள எந்தப் பொருளைக் கேட்டாலும் கொடுத்துவிடத் தயார். என்னையே

The following particulars regarding the ownership of the 'KALKI', the Tamil weekly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

1. *Place of Publication*: Madras
2. *Periodicity of its Publication*: Weekly
3. *Name of Printer and Publisher*: R. Ananthanarayanan
   Nationality: Indian
   Address: 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-31
4. *Name of Editor*: T. Sadasivam
   Nationality: Indian
   Address: 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-31
5. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital:*
   Bharathan Publications Pvt. Ltd., 20, Dr. Guruswami Mudaliar Road, Madras-600031.

R. Ananthanarayanan,
1-3-73 *Publisher*

மார்ச் சிறுகதைச் சிறப்பு மலர் 25

வேண்டுமானாலும் கொடுத்து விடுகிறேன்!'' என்று சொன்னாள்.

துரைசாமிக்கு வெட்கமும் வியப்பும் உண்டாயின. இந்த மாதிரிப் பதிலை அவர் எதிர்பார்க்கவில்லை. மனத்துக்குள், 'சிவ சிவா! ஒரு மனைவியைக் காப்பாற்றுவதே என்னால் முடியாத காரியமாயிருக்கிறது. உன்னையும் கட்டிக் கொண்டு என்னத்தைச் செய்வது?' என்று எண்ணிக் கொண்டார். ஆயினும் அந்தப் பெண்களின் பரிதாப நிலை அவருடைய இதயத்தை இளகச் செய்திருந்தது.

''அப்படியெல்லாம் சொல்ல வேண்டாம் அம்மா! எனக்குப் பிரதிப் பிரயோஜனம் ஒன்றும் வேண்டியதில்லை. என்னால் முடிந்த உதவியை உங்களுக்குச் செய்கிறேன்!'' என்றார்.

மறு நாள் காலையில் தம்முடைய மனைவியை எந்தப் பிரசவ ஆஸ்பத்திரியில் சேர்த்திருந்தாரோ, அதே ஆஸ்பத்திரியில் கங்கா பாயையும் கொண்டு போய்ச் சேர்த்தார். ஆனால் இந்த விஷயத்தை அவருடைய மனைவியிடம் சொல்லவில்லை. சொன்னால் வீண் சந்தேகத்துக்கும் வீண் பேச்சுக்கும் இடமாகும் என்று சொல்லவில்லை.

தினந்தோறும் பிரசவ ஆஸ்பத்திரிக்குத் தம் மனைவியைப் பார்க்கப் போனபோது ரமாமணியையும் துரைசாமி பார்த்து வந்தார். ரமாமணி துரைசாமியிடம் அளவில்லாத நன்றி பாராட்டினாள். அந்த நன்றி வெகு சீக்கிரத்தில் அத்தியந்த விசுவாசமாகவும் ஆருயிர்க் காதலாகவும் பரிணமித்து வந்தது.

ராஜம்மாளும் கங்காபாயும் ஒரே நாள் இராத்திரியில் ஆஸ்பத்திரியில் குழந்தைப் பேறு அடைந்தார்கள்.

இதற்குள்ளே மதோங்கர் எப்படியோ மோப்பம் பிடித்துக் கொண்டு அந்தப் பிரசவ ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தான். ரமாமணிக்கு இது தெரிந்தது. மதோங்கரின் கையில் அகப்படாமல், கங்காபாயுடன் வேறு இரகசிய இடத்துக்குப் போய்விட விரும்பினாள். அதற்கும் துரைசாமியின் உதவியைக் கோரினாள். ரமாமணியின் மோக வலையில் முழுதும் சிக்கிக் கொண்ட துரைசாமி அவளுடைய கோரிக்கைக்கு இணங்கினார். விஸ்தாரமான பம்பாய் நகரில் சுலபமாய்க் கண்டுபிடிக்க முடியாத இடத்தில் ஜாகை பிடித்து அவர்களைக் கொண்டு போய் வைத்தார்.

ரமாமணியும் அவள் தங்கை கங்காபாயும் குழந்தை தாரிணியும் அங்கே வசிக்கத் தொடங்கினார்கள்.

துரைசாமி தம்முடைய மனைவி ராஜம்மாளுக்குத் தெரியாமல் ரமாமணியின் வீட்டுக்கு அடிக்கடி போய் வந்து கொண்டிருந்தார்.

தாரிணி பிறந்த வேளையில் பிறந்த ராஜம்மாளின் ஆண் குழந்தை சீக்கிரத்தில் இறந்து போயிற்று.

அந்தத் துக்கத்தை மறப்பதற்காகத் துரைசாமி அடிக்கடி ரமாமணியின் வீட்டுக்குப் போய்த் தாரிணியை எடுத்துக் கொண்டு சீராட்டினார்.

இப்படியாக நாட்கள் போய்க்கொண்டிருந்தன. ரஜனிபூர் மகாராஜா ஐரோப்பாவிலிருந்து திரும்பினார். ரமாமணி பம்பாயில் அவர் தங்கியிருந்த ஜாகைக்குச் சென்று பேட்டி காண விரும்பினாள். பேட்டி கிடைப்பதே கஷ்டமாயிருந்தது. சண்டை பிடித்துப் பேட்டி கண்டு மகாராஜாவிடம் கங்காபாயின் நிலைமையைப் பற்றிச் சொன்னபோது, ரஜனிபூர் மகாராஜா தமக்கு அவர்களைத் தெரியவே தெரியாது என்று சாதித்து விட்டார். ரமாமணி பாய் அவர் கைப்பட எழுதிக் கொடுத்திருந்த கடிதத்தை எடுத்துக் காட்டினாள்.


மகாராஜாவின் உத்தரவுப்படி அவருடைய ஆட்கள் பலவந்தமாக அந்தக் கடிதத்தை ரமாமணியிடமிருந்து பிடுங்கிக்கொண்டு அவளை வெளியே துரத்தி விட்டார்கள்.

ரமாமணி அளவில்லாத துயரத்துடனும் ஏமாற்றத்துடனும் ஜாகைக்குத் திரும்பிச் சென்றாள். கங்காபாயிடம் எல்லா விவரங்களையும் சொன்னாள். கங்காபாய் மூர்ச்சித்து விழுந்தாள். அப்புறம் அவளுடைய உடல்நிலை நாளுக்கு நாள் சீர்கேடு அடைந்து வந்தது. சில மாதங்களுக்கெல்லாம் கங்கா பாய் இந்த மண்ணுலகை நீத்தாள். (தொடரும்)



NSFC (என் எஸ் எஃப் ஸி) இப்போது உங்களுக்குத் தயாரித்து வழங்குகிறது நிர்கார்ட். நிர்கார்ட் இந்தியாவின் முதல் நைலான் டயர் கார்ட்; அது மிக்க வலிமையுள்ளது. நீடித்து உழைக்கக் கூடியது.

இதே நைலான் டயர் கார்ட்தான் கனவாகன டயர் உற்பத்தி பாதுகாப்பில் பெரும் முக்கிய பங்கு வகிக்கிறது. இது உட்புறத்திலே கனமான சட்டம் போன்ற வலுவைத் தருகிறது.



nircord®

இந்தியாவின் முதல் நைலான் டயர் கார்ட்

நிர்லான் ஸிந்தெடிக் ஃபைபர்ஸ் & கெமிகல்ஸ் லிமிடெட்

115, மகாத்மா காந்தி ரோடு, பம்பாய்-1

® ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்.

Interpub/NIR-C-26A/71 Tm






□ பாலக்காடு ஸ்ரீ மணி அய்யர் அவர்களுக்கு அறுபதாண்டு நிறைவெய்தியதை யொட்டி ஒரு விழா சென்னை கிருஷ்ணமூர்த்தி சென்டரில் நடைபெற்றது. செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யர் "எப்படி சூரியனைச் சூரியனுக்கும்; சந்திரனைச் சந்திரனுக்குமே ஒப்பிட்டுக் கூற முடியுமோ அதுபோல் மணி அய்யருக்கு ஒப்பானவர் மணி அய்யர்தான்" என்று பாராட்டினார். அந்நாளிலேயே ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை, இவரது மணியின் வாசிப்பை மணியான வாசிப்பு எனக் கண்டு உன்னதமான எதிர்காலம் காத்திருக்கிறது எனவும் உணர்ந்து கூறியதை ஸ்ரீ செம்மங்குடி நினைவு கூர்ந்தார். திரு டி. எஸ். முருகபூபதி, "பாடகர் ஏதாவது தவறு செய்து விட்டால்கூட அது ரசிகர்களுக்குத் தெரியாத வண்ணம் திருத்திக் கொண்டு போய் உதவுவார் மணி அய்யர்" என்று அவரது அனுசரிப்பான வாசிப்பை சிலாகித்தார். ஸ்ரீமதி எம். எஸ். பிரார்த்தனைகீதம் பாடினார். ஸ்ரீ மணி அய்யருக்கு திரு வி. வி. நரசிம்மனும் ஸ்ரீமதி மணி அய்யருக்கு ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மியும் மலர் மாலைகள் சூட்டி மகிழ்வதையும் படங்களில் காணலாம்.





□ மதுரை சத்குரு சமாஜத்தின் ஆதரவில் தியாகராஜர் விழா அதி விமரிசையாக நடைபெற்றது. இந்தக் குதூகல வைபவத்தில் பூதலூர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளுக்கு 'மதுர கலா ப்ரவீண' என்ற விருது வழங்கிக் கௌரவித்தனர். மதுரை சர்வகலாசாலையின் துணைவேந்தர் திரு மு. வரதராசனார் இந்த இனிய நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்ததோடு வித்வான் பூதலூர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளுக்கு விருது வழங்கிக் கௌரவித்தார்.





□ அமெரிக்க கலாச்சார நிலையத்தில் நவீன அமெரிக்கச் சிற்பக் கண்காட்சி நடைபெற்றது. உலோகங்களால் மட்டுமின்றி பிளாஸ்டிக், மரம் முதலியவற்றாலான நவீன பாணி சிற்பங்கள் இடம் பெற்றிருந்தன. நிறம் மாறுகிற, ஒலி எழுப்புகிற, அசைவுகள் கொண்ட நூதனமான சிற்பங்கள் ரசிகர்களிடம் விநோதமான உணர்வுகளை ஏற்படுத்தின. படத்தில் காண்பது குளிக்கும் தொட்டி உருவில் அமைந்த பெட்டி.

நெஞ்சில் நிற்கும் நிகழ்ச்சிகள்



அண்மையில் வானதி பதிப்பகத்தார் ராஜாஜியின் ராமாயணம், மகாபாரதம் ஆகிய நூல்களை அழகிய முறையில் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். ராஜாஜி அவர்கள், தலைப்புக்களை மாற்றி விருப்பதுடன், வரிக்கு வரி படிக்கச் செய்து இப்புதிய பதிப்புக்குத் தேவையான திருத்தங்களும் செய்திருக்கிறார். திரு வினுவின் புதிய அட்டைப் படங்கள் கண்ணைக் கவர்கின்றன. இந்நூல்களில் திரு மீ. ப. சோமு நான்முகமாக எழுதியுள்ள பகுதிகளில் இங்குள்ள உருக்கமான நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. நூல்களைப் பெற, **"வானதி பதிப்பகம், 82/11, பாண்டி பஜார், சென்னை–600017" என்ற விலாசத்துக்கு எழுதலாம்: விலை ஒவ்வொன்றும் ரூ. 5-00.**



இராயப்பேட்டை லாயிட் சாலையில் நான் குடியிருந்த மாடியின் கீழ் வீட்டுக்கு மலேயாவில் இருந்து ஒரு நண்பர் விருந்தாளியாக வந்திருந்தார். எங்கள் வீட்டுக்கு ராஜாஜி அடிக்கடி வந்து போவதைப் பார்த்த அந்த மலேயா நண்பர் ஒரு நாள் ராஜாஜியிடம் இராமாயணத்தைப் பற்றி ஒரு கருத்தை விவாதிக்க வேண்டும் என்று விரும்பி மாடிக்கு வந்தார்.

ஆங்கில நூல்கள் பலவற்றை ஆழ்ந்து படித்து நன்கு தேறியிருந்தவர் அந்த நண்பர். இராமனையும் சீதையையும் ஒரு கதையில் வரும் முக்கிய பாத்திரங்கள் என்று கருதிப் பார்க்காமல், தெய்வங்களை வணங்குவதுபோலக் கும்பிட்டு, அந்தக் கதையின் நிகழ்ச்சிச் சுவையை அநுபவிக்க முடியாமல், நம் நாட்டு மக்கள் தங்கள் கண்களை மூடிக் கொள்ளுகிறார்களே என்று ராஜாஜியிடம் வருத்தத்தோடு பேசத் தொடங்கினார் அவர். மேனாட்டு இலக்கிய விமரிசனப் பாங்கிலே அழகாகப் பேசினார். ராஜாஜி புன்முறுவலோடு கேட்டுக் கொண்டே வந்தார். பிறகு பேச ஆரம்பித்தார்:

"நம்முடைய புனிதமான புராணக் கதைகளையெல்லாம் வெறும் உருவகங்களாகவும், சுசாப் கதைகளாகவும் ஆக்கிவிடுவது எனக்குச் சம்மதம் இல்லை."

இவ்வாறு தொடங்கினார் ராஜாஜி !

" உருவகங்களைக் கொண்டு நாம் வாழ முடியுமா? கண்ணனும், பார்த்தனும், சீதையும், அநுமனும், பரதனும், பூஜைக்கு உரிய மூர்த்திகள். வெறும் கதாபாத்திரங்கள் அல்ல. பெரியோர்களையும் வீர புருஷர்களையும் பார்த்து அவர்களைப் பின்பற்றுவது ஒருவிதம். கதைகளைப் படித்து அந்தக் கதாபாத்திரங்களைப் பின்பற்றுவது மற்றொரு விதம். பரதனையும் சீதையையும் பீமனையும் பின்பற்றுவது, உயிர்கொண்ட நம் முன்னோர்களைப் பின்பற்றுவதுபோல் !

"கங்கையிலும் காவேரியிலும் தாகத்துக்குத் தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அந்த ஆறுகள் குடி தண்ணீர்ச் சாதனங்கள் மட்டுமல்ல, அவை ஜீவநதிகள். வணங்க வேண்டிய தெய்வங்கள் !"

ராஜாஜியின் இந்த விளக்கத்தைக் கேட்டதும், நண்பர் மனம் உருகிவிட்டார்.

□ □ □

மருத்துவ மனையில் ராஜாஜி சேர்வதற்கு இரண்டு வாரங்கள் முன்பு என்னுடைய வழக்கமான வாராந்திரச் சந்திப்பு நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல், அவரோடு பேசிக் கொண்டிருந்து விட்டுப் புறப்படுகிற நேரத்தில், மகாபாரதப் புத்தக வேலை எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று விசாரித்தார். வானதி பதிப்பகத்தார் அச்சு வேலை தொடங்கிவிட்டார்கள் என்றும், மூவண்ண அட்டைப் படத்துக்கு ஏற்பாடு செய்கிறார்கள் என்றும் சொன்னேன். படத்தின் அமைப்பு பற்றியும் அச்சு முறை பற்றியும் விரிவாகவே கூறினேன்.

அறையிலிருந்து வெளியே வந்தவனை மறுபடியும் அறைக்குள்ளே கூப்பிட்டார்.

"சோமு! இந்த வெளியீட்டைச் சற்று அவசரப்படுத்த வேண்டும். நான் இறந்து போவதற்குமுன்பு ("before I die" என்று பச்சையாகவே ஆங்கிலத்தில் சொன்னார்.) அது வெளிவருமா என்று பாருங்கள் !" என்றார்.

நான் அதிர்ச்சி அடைந்தேன்.

"எவ்வளவு நாள் ஆகும்? ஒரு மாதம் ஆகுமா?" என்று கேட்டார்.

"ஆமாம், முப்பது தேதி வரை இருக்கிறது" என்றேன்.

" உண்மைதான். அப்படியானால்...." என்று வார்த்தைகளை இழுத்துக் கொண்டே புன்சிரிப்புச் சிரித்தார் !

"அண்ணா! நீங்கள் எவ்வளவு கடுமையாக இருக்கிறீர்கள்" ("Anna, how hard you are") என்றேன்.

"அப்பனே! வழக்கம்போல் உன்னிடம் ஒரு கடினமான உண்மையைச் சொல்லுகிறேன்." ("My dear boy, as usual I am telling you a hard truth") என்று சொல்லிச் சிரித்தார்.

எனக்கு எப்படி இருந்திருக்கும் என்பதை நீங்களே எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள்.

தொழில் ரகசியம்

— ஜூஜா —

எழுத்தாளர் 'காலன்' அவர்கள் வீட்டி னுள் நுழைந்தார் அந்த நிருபர்.

''மிஸ்டர் காலன் !'' என்று அழைத்தார்.

''இதோ வந்துவிட்டேன்!'' என்று குரல் கொடுத்த 'காலன்', கையில் நாலைந்து புத்த கங்களுடன் வெளியே வந்தார்.

''வணக்கம்.... நான் 'தினத் தூதன்' பத் திரிகையின் நிருபர்......''

''அப்படியா?.... ரொம்ப சந்தோஷம்... எங்கே வந்தீர்கள் ?''

''புத்தக வெளியீட்டுத் துறையிலே இது வரையில் யாரும் காணாத அளவுக்கு நீங்கள்



வெற்றி அடைந்திருக்கிறீர்கள்.... அதற்கான பாராட்டுதல்களை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்......''

''தாங்க்யூ!''

''உங்களைப் பேட்டி கண்டுவிட்டு வரும்படி எங்கள் ஆசிரியர் அனுப்பினார்....''

''பேட்டியா ? எதற்காக ?''

''அதுதான் சொன்னேனே!.... 'எழுத் தாளர் காலன்' என்பதைவிடப் 'புத்தக வெளியீட்டாளர் காலன்' என்றால்தான் உங் களை நிறையப் பேருக்குத் தெரிந்திருக்கிறது. அந்த அளவுக்குப் பிரபலம் அடைந்திருக் கிறீர்கள்..... எப்படி இந்தத் துறைக்கு நீங்கள் வந்தீர்கள் என்று....''

''ஓ, அதுவா...? சொல்றேன். நான் ஆரம்ப காலத்தில் பத்திரிகைகளில் நிறையத் தொடர்கதைகள் எழுதியிருப்பது....''

''தெரிந்ததே !''

''இந்தத் தொடர்கதைகளை யெல்லாம் யாராவது புத்தகமாகப் போடமாட்டார்களா என்று எனக்கு ஓர் ஆசை.... ஒரு பதிப்பாள ரைத் தேடி அலைந்தேன்.......''

''கிடைத்தார்களோ ?''

''கிடைத்தார்கள்.... என் எல்லாப் புத்த கங்களையும் நாலைஞ்சு பேர் வெளியிட் டாங்க.......''

''உங்களுக்கு நிறையப் பணம் கிடைச் சிருக்குமே ?''

''அதுதான் இல்லை !''

''ஏன் அப்படி ?''

''பதிப்பாளர்கள் மோசம் பண்ணிட் டாங்க.... சிலரிடம் 'ராயல்டி' பேசினேன்... அதாவது ஆயிரம் பிரதிகளுக்கு இவ்வளவு ரூபாய் என்று தர வேண்டும் என்பதாகக் கணக்கு.... அந்தப் பதிப்பாளர்கள் என்ன செய்தார்கள் என்றால், ஐயாயிரம் பிரதிகள் அச்சடித்துவிட்டு, ஆயிரம் பிரதிகளே போட்டதாகக் கணக்குக் காட்டினார்கள்..... மொத்தத்தில் ஏகப்பட்ட நஷ்டம் எனக்கு...''

''அப்புறம் என்ன செய்தீங்க?''

''ராயல்டி' முறை சரிப்பட்டு வராது என்று ஒவ்வொரு புத்தகத்தையும் மொத்த விலை பேசி — 'அவுட்ரைட்'டாக விற்றேன்.''

''அதிலேயாவது நிறையப் பணம் வந்ததா ?''

''வந்தது...... எனக்கல்ல, புத்தகம் போட்டவருக்கு ! மொத்தம் ஆறு பதிப் புக்கள் போட்டார்.... எல்லாப் பிரதிகளும் விற்றன.... எக்கச்சக்கமான லாபம் அவ ருக்கு..... நான் அவரிடம் 'ராயல்டி' பேசிக் கொண்டிருந்தால் எனக்கும் நல்ல லாபம் கிடைச்சிருக்கும்.....''

''ஐயோ, பாவம் !''

''அப்புறம்தான் யோசித்தேன். புத்தகம் போடுகிறவர்கள் அத்தனை பேரும் ஏழை எழுத்தாளர்கள் வயித்திலே அடிக்கிறாங்கன்னு தோணித்து... 'ஏன் நாமே நம் புத்தகங்களைச் சொந்தப் பதிப்பாகப் போட்டுக் கொள்ளக் கூடாது?'ன்னு யோசிச்சேன்.......''

''ஐ ஸீ!''

''மனசுக்குள்ளே ஒரு கணக்குக்கூடப் போட்டுப் பார்த்தேன்......''

''என்ன கணக்கு அது?''

''அநாவசியமான புள்ளி விவரங்கள் எதுக்கு.....? சுருக்கமா சொல்லறேன்: என்

புத்தகம் 5000 பிரதிகள் அச்சடிக்க என்ன செலவாகும் என்கிற கணக்கு அது.....''

'' அப்படியா ?''

'' ஒரு நாவல் 5000 பிரதி அச்சடிக்க 7500 ரூபாய் ஆகும் என்று கணக்குப் போட்டேன்.......''

'' அதாவது ஒரு பிரதியின் அடக்க விலை ஒண்ணரை ரூபாய் ஆகிறது!''

''கரெக்ட்! புத்தகத்தின் விலையை மூணு ரூபாய்னு வைச்சேன்... ஏஜெண்டுகளுக்கு இருபது சதவிகிதக் கமிஷன் கொடுத்தேன்.....''

'' பரவாயில்லையே !''

'' எல்லாப் பிரதிகளும் விற்பனையாச்சு மளமளன்னு...... முதல் வெளியீட்டிலேயே 4500 ரூபாய் லாபம் கிடைச்சது !''

''பலே! பலே !''

''இப்படியே என்னுடைய கதைகள் எல்லாவற்றையும் புத்தகம் போட்டேன்...... புத்தகத் தொழிலில் முழுமூச்சுடன் இறங்கிவிட்டேனல்லவா, அதனாலே கதை எழுதக்கூட எனக்கு நேரம் கிடைக்காமல் போயிடுத்து!''

'' வாஸ்தவம்தானே ?''

'' 'சரி, நாம்ப எழுதாவிட்டால் என்ன, மற்ற எழுத்தாளர்கள் எழுதிய கதைகளைத்தான் புத்தகமாகப் போடுவோமே' என்று தொடங்கினேன்..... ஆச்சு, இதுவரைக்கும் ஐம்பத்து நாலு புத்தகங்களைப் போட்டிருக்கேன்.''

'' வெரிகுட் ! வெரிகுட் !''

''இதோ பார்த்தீர்களா, இந்தப் பெரிய பங்களா, அதோ வாசலிலே நிற்கிற மெர்ஸிடிஸ் கார், சொந்தத்திலே அச்சாபீஸ்—இத்தனையையும் புத்தகம் போட்டே நான் சம்பாதிச்சிருக்கேன்......''

''ஆகமொத்தம் சொந்தமாப் புத்தகம் வெளியிட்டு இந்த அளவுக்கு உசந்திருக்கீங்க, இல்லையா ?''


''ஆமாம்........''

'' அது சரி, மத்த எழுத்தாளர்களோட கதைகளைப் புத்தகமாப் போடறீங்களே, அந்த ஆசிரியர்களுக்குச் சன்மானம் என்ன கொடுக்கிறீங்க ?''

'' அந்த விஷயத்திலே நான் என்னிக்குமே ரொம்ப ஜாக்கிரதையா நடந்துப்பேன்....''

'' எப்படி ? கொஞ்சம் விவரமாச் சொல்லுங்களேன், கேட்போம் !''

'' 'ராயல்டி'ன்னு பேசினு, ஐந்நூறு பிரதிகள் மட்டும்தான் போட்டதாக அவங்



களுக்குக் கணக்குக் காட்டுவேன்..... ஆனால் பத்தாயிரம் பிரதிகளுக்குக் குறையாமல் போட்டு விப்பேன்.......''

''.......................''

'' மொத்தமா — 'அவுட்ரைட்'னு விலை பேசிக்கிட்டு வந்தாங்கன்னு ஒரு புத்தகத்துக்கு நூறு ரூபாய்க்கு மேலே பைசா தரமாட்டேன்...... குறைஞ்சபட்சம் அஞ்சு பதிப்பாவது போட்டு வித்துடுவேன்..... இப்படியெல்லாம் செய்யாட்டி, இப்படி என்னால் உசர முடியுமா?''

மாதேசுவர மகாதேவன்

''ஹரனுக்கும் குருவுக்கும் உண்டு ஒரு வித்தியாசம் - குரு ஹரனைக் காட்டுவான்; அவ்வரன் குருவைக் காட்டுவானு ?'' என்று சர்வக்ஞ கவியின் கேள்விக்கு, பதில்தருகிறது ஸ்ரீமாதேசுவரர் வரலாறு.

குருவையும் காட்டி, ஹரனையும் காட்டியவர் ஸ்ரீமாதேசுவரர். அதாவது குருவாகவும் விளங்கி ஹரனுகவும் திகழ்ந்தவர். இவர் வனிய வந்து அருள்பாலித்த இடம் மாதேசுவரமலை என்று புகழ் பெற்றது. மைசூர் ராஜ்யத்தில் கொள்ளேகால் தாலுக்காவில் இருக்கிறது இத்தலம்.

மாதேசுவரரின் மூலகுரு நந்திகேசுவரர் என்னும் சிவயோகி. இத்தலத்தில் சிவன் கோயிலில் குடிகொண்டிருக்கும் ஈசனுக்கு எத்தனை புகழோ, அத்தனை புகழ் இங்குள்ள பெரிய நந்திக்கு. குரு ஹரனைக் காட்டுவான், ஹரன் குருவைக் காட்டுவான் என்பதை நிரூபிக்கிறது இக்கோயில்.

இத்தலத்தில் ஏராளமான தம்பதிகள் சிவராத்திரியன்று வந்து பிரார்த்தனை செலுத்துகிறார்கள். ஆண் பின்னையே பெண் வேஷம் போட்டுக் கொண்டு தம்பதிகள் போலப் பிரார்த்தனை செலுத்துவது உண்டாம்!

வண்ணப்படம் : ஹரலிங்கம்



"ரெக்ஸ் பேகிங் பவுடர்

உபயோகித்து, மென்மையாக சுவைபடத் தயாரிக்கப்பட்ட கேக்குகளை என் தேநீர் விருந்துகளில் அனைவருமே விரும்புகின்றனர்"




என்கிறார் திருமதி கலோசனு ராவ்,
'ஹரி நிவாஸ்', 95, மர்ரடப்பள்ளி, சிகந்தராபாத், ஆந்திர பிரதேஷ்.

கார்ன் ப்ராடக்ட்ஸ்
தேர்ந்தெடுத்த
பரிசு – பெற்ற
பக்குவ முறை

முட்டை கலவாத சாக்கலேட் கேக்

தயாரிக்க உதவுவது
ரெக்ஸ்
பேகிங் பவுடர்





கேக், பிஸ்கோத்து, பக்கோடா, பூரி, குலாப் ஜாமூன் ஆகியவற்றை சுவைபட அதி மென்மையாகத் தயாரிக்க மிகவும் உதவுகிறது, ரெக்ஸ் பேகிங் பவுடர். சிறிதளவே சிறப்பாகச் செய்து முடிக்கிறது. அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் பக்குவப் படுத்தப்பட்டிருப்பதால், பேகிங் பவுடர்களில் மிகவும் சிறந்தது ரெக்ஸ் பேகிங் பவுடர்.

பக்குவ முறை:

2 கோப்பை பிரவுன் & போல்ஸன் ஃப்ளேவர்டு கார்ன் ஃப்ளவர்.
3 தேக்கரண்டி (தலைதட்டிய அளவு) ரெக்ஸ் பேகிங் பவுடர்.
1 கோப்பை சர்க்கரை.
½ கோப்பை வெண்ணை.
1 கோப்பை பால்.
4 மேசைக் கரண்டி (தலைதட்டிய அளவு) கோக்கோ.
½ தேக்கரண்டி (தலைதட்டிய அளவு) உப்பு.
1 தேக்கரண்டி வனில்லா எஸ்ஸென்ஸ்.
½ கோப்பை துருவிய தேங்காய்.
½ கோப்பை பொடியாக நறுக்கிய அக்ரோட்டு.

1. பிரவுன் & போல்ஸன் ஃப்ளேவர்டு கார்ன் ஃப்ளவர், உப்பு மற்றும் ரெக்ஸ் பேகிங் பவுடரை ஒன்றாகச் சேர்த்து, சலித்து எடுக்கவும். வெண்ணையையும் சர்க்கரையையும் விழுதுபோல் ஆக்கிக் கொள்ளவும். கோககோவை சூடான சிறிது பாலில் கலந்து, விழுதாக்கிய வெண்ணை – சர்க்கரையுடன் சேர்க்கவும். நன்றாக சூடாக்கவும்.
2. துருவிய தேங்காயை ஒரு தேக்கரண்டி நெய்யில் பொன்னிற-மாகும் வரை வறுத்து எடுக்கவும். தயாரிக்கப்பட்டுள்ள மாவு, பேகிங் பவுடர், வெண்ணை முதலிய கலவையுடன் தேங்காயை சேர்க்கவும். நன்றாகக் கிளறவும்.
3. அத்துடன் ½ கோப்பை நறுக்கிய அக்ரோட்டையும் வனில்லா எஸ்ஸென்ஸையும் சேர்க்கவும். நன்றாகக் கலக்கவும். அதை நெய் தடவிய சிறு அச்சுகளில் ஊற்றவும். மிருசியுள்ள அக்ரோட்டால் அதை அலங்கரிக்கவும். அடுப்பில் வைத்து 12-15 நிமிடங்கள் வரை வாட்டவும்.

OBM 0622 TM

இலவசம்! பக்குவ முறை நூல் நெ.5
தயவுசெய்து இன்றே ஒரு பிரதிக்கு எழுதுக:

உங்கள் சமையல் உன்னதமாக இருக்க உயர்ந்த சாமானையே உபயோகியுங்கள்.

பப்ளிஸிடி டிபார்ட்மெண்ட்
கார்ன் பிராடக்ட்ஸ் கோ, (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீ நிவாஸ் ஹவுஸ்,
எச். ஸோமானி மார்க், பம்பாய் 400001



நாடக மேடையில் நயமான முயற்சி

ஹயவதனா என்ற அரிய ஆங்கில நாடகத்தில் ஒரு விந்தைப் பிரச்னை, 'மூளை உடலை ஆள்கிறதா? உடல் மூளையை ஆட்டி வைக்கிறதா' என்று!

தேவதத்தன் புத்தி பலம் கொண்டவன்; கவிஞன்; கற்பனை வளம் கொண்டவன். அவன் பத்மினி என்ற செல்வச் சீமாட்டியைக் கல்யாணம் செய்து கொள்கிறான்.

தேவதத்தனின் உற்ற நண்பன் கபிலன். நல்ல தேக பலம் கொண்டவன். மல்யுத்தங்கள் செய்து பட்டங்கள் பெற்றவன். இவனது உடல் அழகைக் கண்டு தேவதத்தனின் மனைவி பத்மினி மயங்குகிறாள். மனைவியின் இந்த மன மாறுதலால் தேவதத்தன் காளியின் கோயிலில் தனது தலையை வெட்டிக் காணிக்கை செலுத்தி விடுகிறான்.

நண்பனின் சடலத்தைக் கண்ட கபிலன், நண்பனின் பிரிவாற்றாமை தாங்கமாட்டாமல் தானும் காளி கோயிலில் தலையை வெட்டிக் கொண்டு உயிர் துறக்கிறான்.

வெகு நேரம்வரையில் தேவதத்தனையும், கபிலனையும் காணாத பத்மினி, அவர்களைத் தேடி வருகிறாள். காளி கோயிலில் இருவர் சடலம் கிடப்பதைக் கண்டு, அவர்களை உயிர்ப்பிக்குமாறு காளியிடம் இறைஞ்சுகிறாள். காளியும் கருணை கொண்டு, பிரத்தியட்சமாகி, உடலுடன் தலையைச் சேர்த்து விட்டால் உயிர் பிழைத்து எழுவார்கள் என்று அருளுகிறாள். பத்மினி உற்சாக மிகுதியில் தேவதத்தனின் உடலில் கபிலனின் தலையையும் கபிலனின் உடலில் தேவதத்தனின் தலையையும் சேர்த்து வைக்கிறாள். அப்படியே அவர்கள் உயிர் பெற்று எழுகிறார்கள்.

இப்பொழுது பிரச்னை — பத்மினி யாருக்கு உரியவள்? பத்மினி மணந்தது தேவதத்தனின் தலையையா? உடலையா?— இப்படியொரு விநோதமான பிரச்னையைக் கிளப்பிவிட்டு அழகாகக் கொண்டு செல்கிறார் நாடகாசிரியர் கிரீஷ் கர்நாட்.

நாடகக் கதையைக் காலட்சேபம் செய்யும் பாகவதர் சொல்வதுபோல் கொண்டு செல்கிறார். இந்த உத்தியின் பயனாக இனிமையான கன்னடப் பாடல்களைக் கவர்ச்சியும் கௌரவமும் மிக்க மெட்டுகளில் கேட்க முடிகிறது. பாடல்களின் கருத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வழங்குகிறார்கள்.

நாடகம் முழுதும் நல்ல துடிப்புடன், இடை இடையே நளினமான நகைச்சுவையுடன் செல்கிறது.

கத்தியில்லாமலே கத்தி வெட்டு பார்க்க முடிகிறது. குதிரை வண்டி இல்லாமலே குதிரைச் சவாரி போவதைப் பார்க்க முடிகிறது. காளி கோயில் செட் இல்லாமலே காளி கோயில் பார்க்க முடிகிறது. மொத்தத்தில் பரத நாட்டிய அபிநயப் பாணியும், கதகளிப் பாணியும், ஹரிகதை பாணியும் கன்னட சங்கீதமும் மேனாட்டு நாடகங்களின் நவீன உத்திகளும் ஆங்கிலத்தில் அமைந்த சுவையான வசனங்களும் நல்ல அளவில் கலந்து ஓர் அருமையான விருந்தாகிறது.

கடைசி சில காட்சிகள் பிரதான கதையம்சத்துக்கு ஒட்டினாற்போல் தோன்றவில்லை. ஹாஸ்யரஸத்துடன் முடிக்க வேண்டும் என்பதற்காக வலிந்து ஏதோ செய்திருக்கிறார்கள். இந்த ஒரு குறையைத் தவிர, மெட்ராஸ் பிளேயர்ஸின் இந்த நவீன முயற்சி ஆங்கிலம் தெரிந்தவர்கள், நாடகக்கலை தெரிந்தவர்கள் அனைவரின் பாராட்டையும் பெறும் என்பதில் ஐயமில்லை.

— எஸ். வி. எஸ்.





தான் ஆடாவிட்டாலும்

எஸ்.ஏ.ஜி.


"மணி எட்டாகப் போகிறதே. இந்தப் பிள்ளையை இன்னும் காணுமே ! எங்கே வழி தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறானே ? அப்போதே சொன்னேன். ரயிலடிக்குப் போய் அழைத்து வாருங்கள் என்று; கேட்டால்தானே. அண்ணா பன்னிப் பன்னி எழுதியிருந்தானே?'' என்று பொரிந்த வண்ணம் வாசலுக்கும் உள்ளுக்குமாய் நடந்து கொண்டிருந்தாள் மீனாட்சி.

குத்தாலத்தில் இருக்கும் மீனாட்சியினுடைய ஒன்றுவிட்ட அண்ணா பையன் விநாயகமூர்த்தி அன்று காலை ரயிலில் பட்டணத்துக்கு வருகிறான். ஏதோ இண்டர்வியூவாம்.

'பட்டணத்துக்குப் புதுசு. முதன் முறையாக அவன் வருகிறான். கவனித்துக் கொள்ளுங்கள். அறுவடை நேரமாதலால் நான் அவனுடன் வர முடியவில்லை. முடிந்தால் 'எழும்பூருக்கு வந்து அழைத்துப் போகவும்' என்று அவன் வருகிற ரயிலையும் குறிப்பிட்டுக் கடிதம் எழுதியிருந்தார் அவளுடைய அண்ணா.

ரங்கநாதன் பூஜை செய்து கொண்டிருந்தார். தலை வாரிக் கொண்டிருந்த சரஸ்வதி, அம்மாவைக் கேலி பண்ணினாள்:

''வெளிநாட்டிலிருந்து யாரோ பெரிய மனிதர்கள் 'டூர்' வருகிற மாதிரி தான் தவிக்கப் போறே! அந்தப் பட்டிக்காட்டுமனிதன்பி.எஸ்ஸி. படிச்சிருக்கிறதா பெருமை



படிச்சிக்கிறே! பட்டணத்துக்கு வந்து சேர அவனுக்கு வழி தெரியாதாக்கும்!''

''வாயை அடக்குடி!'' என்று அதட்டினாள் மகளை. ''மூர்த்தி உனக்கு மாமா பிள்ளை! அத்தான் இல்லையோ ! மரியாதைக் குறைவாகப் பேசலாமா ?''

''குத்தாலம் பட்டிக்காடா ? கும்பகோணத்துக்குப் பக்கத்தில் காவேரிக் கரையில் இருக்கிற ஊர்......''

வாசலில் 'பீப்பீ' என்ற காரின் சத்தம் கேட்டது. பேச்சை நிறுத்திவிட்டு ஓடினாள் மீனாட்சி.

பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு டாக்ஸியிலிருந்து இறங்கி வந்தான் விநாயகமூர்த்தி. அவனை வரவேற்று உள்ளே அழைத்து வந்தாள் மீனாட்சி.

'' அண்ணா, மன்னி, குழந்தைகள் எல்லோரும் சௌக்கியமா, மூர்த்தி ? சித்தே நாழிக்குள்ளே நான் தவிச்சுப் போயிட்டேன், வழி தெரியாமல் நீ திண்டாடிக் கொண்டிருக்கிறயோ என்று. ஏன் இவ்வளவு நேரம்? வண்டி லேட்டா?'' என்று சரமாரியாகக் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனாள் மீனாட்சி.

''கேள்வி நம்பர் ஒன்: எல்லோரும் சௌக்கியம்; கேள்வி நம்பர் டூ: என் சிநேகிதன் ஒருத்தன் லா காலேஜில் படிக்கிறவன், எழும்பூரில் பார்த்துவிட்டுப் பிடித்துக் கொண்டான். அவனுடன் ஹாஸ்டலில் வந்து தங்கும்படி வற்புறுத்தினான். அவனிடமிருந்து விடுபட்டு வர நாழியாகி விட்டது; கேள்வி நம்பர் த்ரீ: வண்டி 'ரைட் டைம்'! போதுமா, அத்தை!''

ஒவ்வொரு விரலாக அவன் மடக்கிக் கொண்டு சொன்ன விதம் அவளுக்குச் சிரிப்பை மூட்டியது. சிரித்துவிட்டாள்.

'அடேயப்பா! எத்தனை குறும்பு! இவ்வளவு ஹாஸ்யமாகப் பேசக் கூட இந்தப் பட்டிக் காட்டுக்குத் தெரியுமா?' அடுக்களை வாசற்படியருகே நின்று கொண்டு சரஸ்வதி அவனை வைத்த கண் மாறாமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

'ஆளைப் பார்! மதமதவென்று எப்படி வளர்ந்திருக்கிறான்! மீசை; சைட்பர்ன்ஸ்; நெளி கிராப்பு! பரவாயில்லையே! திருந்தியிருக்கானே!'

வீட்டைச் சுற்றிப் பார்வையைச் சுழல விட்டான் மூர்த்தி. சரஸ்வதியைப் பார்த்ததும் அவன் கண்கள் வியப்பால் விரிந்தன! ஏழு வருடங்களுக்கு முன் அவன் பார்த்த சிறுமியா இவள்? பருவம் அவளை எப்படி மாற்றி விட்டது!

''அத்தை! அது சரசுதானே! எலிவால் சடையும், ஒழுகிய மூக்குமாயிருந்தவளா, இப்படி வளர்ந்து விட்டாள்?'' என்று கேட்டவன் ''ஏய், எலிக்குஞ்சு! வா, இப்படி!'' என்று அவளை அழைத்தான்.



ரோஷம் வந்து விட்டது சரசுவுக்கு. முறைத்துப் பார்த்தாள். கண்கள் வெறுப்பைக் கக்கின.

''மூஞ்சியைப் பார்! பட்டிக்காடு! மேனர்ஸ் லெஸ் கன்ட்ரி...'' என்று திட்டிவிட்டு அடுக்களையில் புகுந்து கொண்டாள் சரசுவதி.

''என்னடி இது மரியாதை இல்லாமல்?'' மூர்த்திக்குக் காப்பி கொண்டு வர உள்ளே வந்த மீனாட்சி அதட்டினாள். ''கூப்பிட்டால் போய் நாலு வார்த்தை பேசினால் என்ன? அவன் உன் அத்தான்தானே?''

பூஜை முடிந்து வந்த ரங்கநாதன் மூர்த்தியை வரவேற்றுக் குசலம் விசாரித்தார்.

பன்னிரண்டு வயதுச் சிறுமியாயிருக்கும்போது தாயுடன் குற்றாலம் போயிருந்தாள் சரசு. தாவணி போடவில்லை அப்போது. மூர்த்தியும் டிரௌசர்தான் போட்டுக்கொண்டிருப்பான். மூன்று வயது மூத்தவன், அவளைவிட.

தெருப் பிள்ளைகளுடன் சேர்ந்து கொண்டு அவன் அடிக்கும் கொட்டம் சகிக்காது. புழுதியில் புரண்டு சடுகுடு விளையாடுவான். மரங்களில் ஏறிக் குதிப்பான். தெருக்கோடியில் இருக்கும் ஆலமரத்தின் விழுதைப் பிடித்துக் கொண்டு குரங்கு போல் தொங்குவான். குலை நடுங்கிப் போவாள் அவள். சிலும்பிய தலையும் புழுதி படர்ந்த உடையுமாக அவனைப் பார்க்கும்போது வயிற்றைக் குமட்டிக் கொண்டு வரும் சரஸ்வதிக்கு. குளிக்கும்போது ஆறோ குளமோ ரெண்டு பட்டுப் போகும்படி கொட்டம் அடிப்பான் மூர்த்தி.

எந்நேரமும் அவளை வம்புக்கு இழுத்து அழ வைப்பான்: 'எலி வால் சடை, எலிக் குஞ்சு!'

அவனும் பதிலுக்குக் 'குரங்கு, பட்டிக்காடு' என்று திட்டுவாள்.

பட்டணத்தின் நாகரிகத்தில் பீச், சினிமா, பார்த்தவளுக்கு, சுற்றியவளுக்கு அந்தக் கிராமச் சூழ்நிலை அறவே பிடிக்கவில்லை. வெறுப்பா யிருந்தது. பொழுது போக என்ன இருந்தது அங்கே?

அதிலிருந்து குத்தாலம் என்றால் அவளுக்கு வெறுப்பு; மூர்த்தி என்றால் கசப்பு!

மூர்த்தி வந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டன. வந்த மறுநாளே இண்டர்வியூவுக்குப் போய் வந்தான். பதில் தபாலில் வருமாம்.

ஒரு வாரம் இருந்து பட்டணத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் போகும்படி மீனாட்சி அவனைத் தங்க வைத்து விட்டாள்.

மூர்த்தி ஏதாவது கேட்டால் சரசு அதற்கு ஏடாகூடமாகப் பதில் கூறுவாள்; வெட்டிப் பேசுவாள்; மட்டம் தட்டுவாள்.

இரண்டு பேரும் இப்படிப் பாம்பும் கீரியுமாக இருக்கிறார்களே என்று மீனாட்சியும், ரங்கநாதனும் கவலைப்பட்டார்கள்.

''ஏண்டி சரசு! அவன் பட்டணத்துக்குப் புதுசு ஆச்சே! நாலு இடங்களுக்கு அழைச்சுண்டு போய்க் காட்டக் கூடாதோ? சண்டைக்காரி மாதிரி ஒதுங்கிப் போறியே?'' என்று மகளைக் கடிந்து கொண்டாள் மீனாட்சி.

''எனக்கொண்ணும் அக்கறை இல்லை; வேணுமானால் நீ அழைச்சுண்டு போய்க் காட்டு'' என்று வெடுக்கென்று கூறினாள் சரசு.

''என்னை யாரும் அழைச்சுண்டு போக வேண்டாம் அத்தை! 'லா' காலேஜில் படிக்கிற என் சிநேகிதனோட நித்தம் ஒரு இடத்தைச் சுற்றிப் பார்த்துட்டுத்தானே நான் வரேன். ஏதோ அப்பா கடிதம் எழுதிவிட்டார்; படிச்சுப் படிச்சுச் சொல்லியும் அனுப்பினாரே என்று இங்கே வந்தேன்; தங்கினேன்! என் சிநேகிதன் ஹாஸ்டலுக்கு வந்து அவனோட தங்கும்படி தினமும் அரித்தெடுக்கிறான்.''

மூர்த்தியும் விட்டுக் கொடுக்காமல் ரோஷத்துடன் கூறினான்.

காலை நேரம். மூர்த்தியும், சரஸ்வதியும் எதிரெதிராக உட்கார்ந்து டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். இட்டிலிகளை வைத்துத் தேங்காய்ச் சட்டினியும், பசு நெய்யும் விட்டாள் மீனாட்சி. 'உம்'மென்று பேசாமல் சாப்பிடுவது மூர்த்திக்குப் பிடிக்காது. எப்போதும் கலகலப்பாக இருப்பவன் அவன். சரசுவைச் சீண்டி விட்டான்.

'' 'உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு' என்று நீ படித்ததில்லையா, சரசு? நீபாட்டுக்கு 'இட்டிலி சுரெட்டு — சட்டினியில் முக்கிவிட்டு' என்று கணக்கில்லாமல் உள்ளே தள்ளுகிறாயே?'' என்று கேலி செய்து சிரித்தான்.

''சாப்பாட்டு விஷயத்தில் கூச்சப்படமாட்டாளே; வயிற்றுக்கு வஞ்சனை பண்ண மாட்டாளே எங்கள் சரசு'' மீனாட்சி அவளுக்கு ஆதரவாகப் பேசினாள்.

அவ்வளவுதான்! கையை உதறி விட்டுக் கோபமாக எழுந்தாள் சரசு. விடுவிடென்று மாடிக்குச் சென்றாள்.

போன வேகத்தில் கையில் ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு திரும்பி வந்தாள் சரசு. புத்தகத்தைப் பிரித்து, ''கண்ணை விளக்கிவிட்டுப் படித்துப் பாருங்கள்! 'உண்டி சுருங்குதல் பண்டிக்கு அழகு' என்பதுதான் சரியான பொருத்தமான வாசகம். 'பெண்டிர்'க்கு அல்ல. * இந்தப் புத்தகத்தில் அப்படித்தான் இருக்கிறது. 'பண்டி' என்றால் வயிறு என்று பொருள். குறைந்த உணவே வயிற்றுக்கு நல்லது என்ற பொருளில் ஆண் பெண் பேதமில்லாமல் இருவருக்கும் கூறப்பட்ட பொதுவான நீதி வரி இது. இதுதான் பொருத்தமானதும்கூட!'' என்றாள்.

மூச்சு விடாமல் முழங்கி விட்டு நிறுத்தினாள் சரசு. வாயடைத்துப் போனான் மூர்த்தி. அதுவரை அவன் அதைப் பார்த்ததில்லை; படித்ததில்லை. முகம் தொங்கிவிட்டது அவனுக்கு.

''மணக்க மணக்க அத்தையம்மாள் உபசாரம் பண்ணுகிறார்களே என்று பெருச்சாளி மாதிரி வயிறு முட்ட முட்ட ஒரு பிடி பிடிக்காமல் அளவாகச் சாப்பிடுங்கள்.

''அம்மா! அந்தப் பிளாஸ்திரியை எடுத்து வந்து உன் அருமை அண்ணா பிள்ளையின் மூக்கில் ஒட்டு!'' கலகலவென்று சிரித்தாள்.

''சரிதாண்டி! வாயை மூடு! படிப்பில் பெரிய கரை கண்டவள் மாதிரி குதிக்காதே!'' மகளை அடக்கினாள் மீனாட்சி.

உள்ளுக்குள் மகளைப் பற்றிப் பூரிப்பாகவும் பெருமையாகவும் இருந்தது அவளுக்கு.

பூஜை முடித்து வந்த ரங்கநாதன் கூறினார்:

''சரசு சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. ஆண் பெண் பாகுபாடில்லாமல் அரை வயிற்றுக்குச் சாப்பிடுவதுதான் ஆரோக்கியத்தைத் தரும்; வயிற்றுக்கும் நல்லது என்று தானே டாக்டர்களும் கூறுகிறார்கள். வயிற்று வலியும் அஜீரணமும் பெண்களுக்கு மட்டும் தானா வருகிறது? ஆண்களுக்கும்தான் வருகிறது. 'பண்டிக்கழகு' என்பது 'பெண்டிர்க் கழகு' என்று திரிந்து விட்டது போலும்!''

சரியானபடி தன்னை மடக்கி வாய் திறக்க முடியாமல் செய்து விட்டாளே என்று அவள் மீது பொறாமையும் ஆத்திரமும் ஏற்பட்டாலும் அவளுடைய புத்தி சாதுரியத்தை மூர்த்தியால் வியக்காமல் இருக்க முடியவில்லை. கல்லூரியில் படிப்பவளல்லவா? பி.ஏ. ஃபைனல் ஆயிற்றே!

அதற்குப் பின்னால் அவளை அவன் அநாவசியமாகச் சீண்டுவதில்லை. ஆனாலும் அவள் இறங்கி வரவுமில்லை. தூரவே மிடுக்காக இருந்தாள்.

இரண்டு நாட்கள் கழித்து ஒரு மாலை நேரம். சரஸ்வதி மாடியில் உட்கார்ந்து ரேடியோவைத் திருப்பிக் கொண்டிருந்தாள். மூர்த்தி ஒருபுறமாக நாற்காலியில் உட்கார்ந்து ஆப்பிள் ஒன்றைக் கத்தியால் துண்டு போட்டுக் கொண்டிருந்தான். அவன் வாய் சும்மா இருக்குமா?

''சரசு! Blood is thicker than water என்றால் என்ன சொல் பார்ப்போம்; சரியாகச் சொல்லிவிட்டா இந்த ஆப்பிள் முழுதும் உனக்கு!''

சீறினாள் அவள். ''நானொன்றும் ஆப்பிளுக்கு வெறிச்சுப் போய்க் கிடக்கலே. உங்க பட்டிக்காட்டிலேதான் இது கிடைக்காது.''

---

* ஆதாரம்: திரு தி. கனகசுந்தரம் பிள்ளை அவர்களுடைய பதிப்பில் கண்ட பாடமாகும். நீதி நூல் தொகை. மூலமும் விளக்க உரையும் (முதற் பாகம்) ஸ்ரீமகள் கம்பெனி பதிப்பு.


இந்தக் கோடையில் உங்கள் கண்மணியை வேர்க்குருவிலிருந்து காப்பாற்றுங்கள்.



வேர்க்குரு மற்றும் இதர சரும எரிச்சல்களிலிருந்து தப்பும் இன்பக் குடும்பங்கள் எத்தனை இல்லை! நீங்களும் நாள்தோறும் நைஸில் உபயோகித்து இன்புற்றிருங்கள்!

• நைஸில், வியர்வையை மிக நன்றாக உறிஞ்சுகிறது. வேர்க்குருவைத் தடுக்கிறது • மருந்து கலந்த நைஸில் அரிப்புகளிலிருந்து இதமளித்து, நோய்த் தொற்றைத் தடுக்கிறது • நைஸிலில் ஒரு சக்திவாய்ந்த நச்சு முறிப்புப் பொருள்—க்ளோர்ஃபெனெஸின் உள்ளது. அது துர்நாற்றத்தை விளைவிக்கும் கிருமிகளைக் கொல்லுகிறது.

நாள்தோறும் நறுமணமுள்ள நைஸில் உபயோகிக்கும் பழக்கத்தை உங்கள் குடும்பத்திலுள்ள அனைவருமே மேற்கொள்ளட்டும்.



க்ளோர்ஃபெனெஸின் கலந்த

நைஸில்

நறுமணமுள்ள, மருந்து கலந்த பவுடர்—**க்ளாக்ஸோ** தயாரிப்பு

ASP-G-N-2 TAM



நாம்
ஓடோனில்
உபயோகிக்கிறோம்
கண்ணு...



ஓடோனில் ஏர் ப்யூரிஃபையர், கக்கூஸ், பாத்ரூம், போலுள்ள இடங்களின் துர்நாற்றங்களை உடனடியாகப் போக்கி, தூய்மையாகவும் நன்மணத்துடனும் வைத்திருக்கிறது. பல மலர்களின் மணங்கள் உண்டு—லாவெண்டர், ஜாஸ்மின், மோக்ரா ... முதலியன—விரும்பியதை வாங்கலாம்.

பல சைசுகளிலும், வகைகளிலும் கிடைக்கிறது.

BALSARA

பல்சாரா
—சிறப்பாக வாழ
சொகுசான வசதிகள்

பல்சாரா & கம்பெனி
பிரைவேட் லிட்.,
43, கோடாஸ் ஸ்ட்ரீட், பம்பாய்-1

AIYARS-BLS. 90 TM

''ஏன் கத்தறே? பதில் தெரியாதுன்னு சொல்லிட்டுப் போயேன்.''

மூர்த்தி மீண்டும் சீண்டினான்.

''ப்பூ... இவ்வளவுதானே! 'தண்ணீரை விட இரத்தம் அடர்த்தியானது' என்பது தானே அதன் அர்த்தம்!''

''தப்பு, தப்பு....'' என்று கூறிய மூர்த்தி ''ஆ....'' என்று விரலைப் பிடித்துக்கொண்டு அலறினான். 'ணங்'கென்று கத்தி கீழே விழுந்தது.

அவனது இடது கை ஆள்காட்டி விரலிலிருந்து ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது.

''ஐயையோ!'' என்று துடித்துப் போனாள் சரசு. ''எவ்வளவு ரத்தம்!'' என்று பதறியவள் சட்டென்று குனிந்து மண்டியிட்டு அவனுடைய வெட்டுப்பட்ட விரலைவாயில் வைத்துச் சப்பினாள்.

மூர்த்தியின் உடல் புல்லரித்தது. சரிக்குச் சரி அவனுடன் வாதாடிக் கொண்டும், மட்டம் தட்டிக் கொண்டும் இருக்கும் சரசுவா இவ்வளவு பரிவுடனும் பாசத்துடனும் நடந்து கொள்கிறாள்? தன்னுடைய கால்களில் உராய்ந்தாற்போல் மண்டியிட்டு உட்கார்ந்திருக்கும் சரசுவை அவன் கண்கள் ஆராய்ந்தபோது இருவர் கண்களும் சந்தித்துக் கொண்டன! அந்தப் பார்வையில் இருவர் உடலுமே சிலிர்த்தன.

சிறிது நேரம் கழித்து வாயிலிருந்து விரலை எடுத்தாள் சரசு. ''ஐயையோ! எச்சல் பண்ணி விட்டேனே!'' என்று தன் தாவணியில் துடைத்து விட்டாள். மீண்டும் இரத்தம் கசிந்தது வெட்டு வாயில். ஓடிப்போய் அலமாரியிலிருந்து டிஞ்சரும் பஞ்சும் எடுத்து வந்தாள் சரசு. அவன் எதிரே ஒரு ஸ்டூலை நகர்த்திப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து அவன் கையைத் தன் மடியில் எடுத்து வைத்துக் கொண்டு மருந்திட்டுக் கட்டினாள்.

கண்கொட்டாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் மூர்த்தி. ''இதோ பார்! நான் கேட்டேனே கேள்வி, அதற்கு என்ன பொருள் தெரியுமோ? நீ சொன்னமாதிரி நேரடியா மொழிபெயர்க்கக் கூடாது.''

''பின்னே?''

''அது ஒரு பொன் மொழியாக்கும்! 'தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்' என்பதன் ஆங்கில வாக்கியம்! பட்டிக்காடு என்று என்னை எவ்வளவுதான் வெறுத்தாலும், சரிக்குச் சரி வார்த்தையாடினாலும் நீ....''

அவன் பேச்சை இடை வெட்டினாள் சரசு: ''நீங்க மாத்திரம் எலிவால், எலிக் குஞ்சுன்னு என்னைச் சொல்லலாமா?''

அவள் இரட்டைச் சடை பின்னியிருந்தாள் அன்று. ஒன்று முதுகிலும் இன்னொன்று மார்பிலும் கிடந்தது. மார்பில் கிடந்த அவள் சடையைக் கையில் எடுத்துக் கொண்டான் மூர்த்தி. அவள் தடுக்கவில்லை.

''நான் ஏதோ விளையாட்டுக்குப் பரிகாசம் பண்ணினேன். நீ அதை சீரியஸாக எடுத்துக்குவேன்னு நான் நினைக்கல்லே. இந்த ஜடை என்ன ஜோர்ராக வளர்ந்திருக்கு! நீயும் அழகாகத்தான் வளர்ந்திருக்கே! விரல் வெட்டுப்பட்டு ரத்தம் சொட்டியதும் எப்படித் துடித்துப் போய்விட்டாய்! நானே என்ன பண்ணறதுன்னு தோன்றாமல் விரலைப் பிடித்துக் கொண்டிருந்தப்போ, பதறிப்போய்ச் சட்டென்று வாயில் வைத்துக் கொண்டாயே!... அதுதான் தானாடா விட்டாலும் தன் சதை ஆடும்கிறது. அன்னிக்கு ஒரு புத்தகத்தைத் தூக்கிக் கொண்டு வந்து உன்னுடைய வாதத்துக்கு ஆதாரம் காட்டினாய். நான் இதை விளங்க வைக்க எந்தப் புத்தகத்தை எங்கே தேடிக் கொண்டு வருவேன்? இந்தக் கத்தி உதவி செய்தது!''

கட்டுக் கட்டி முடித்து விட்டு நிமிர்ந்தாள் சரசு. ''அப்படின்னா வேணுமின்னுதான் வெட்டிக்கிட்டீங்களா?''

'ஆமாம்' என்பது போல் கண் மூடித் தலையசைத்துப் புன்னகை புரிந்தான் மூர்த்தி. ''இல்லேன்னா நீ இவ்வளவு நெருங்கி வந்திருப்பியா?'' என்று கேட்டு சிரித்தான்.


அவள் கண்களில் கண்ணீர் கசிந்தது. ''எப்படி மனம் துணிஞ்சீங்களோ? எவ்வளவு ரத்தம் வீணாகிவிட்டது!''

''நீ இப்படி உதவி செய்யறதா இருந்தால் ஒவ்வொரு விரலாக வெட்டிக் கொள்வேன்!''

கண் சிமிட்டிக் குறும்பாகச் சிரித்தான் மூர்த்தி.


கன்னங்கள் சிவப்பேறக் கண்களைத் தாழ்த்திக்கொண்டு, ''பெரிய போக்கிரி நீங்க'' என்று சிணுங்கினாள் சரசு.

இருவருக்கும் இரண்டு தம்ளர்களில் காப்பி எடுத்துக் கொண்டு வந்த மீனாட்சி அவர்கள் இருந்த நிலையைப் பார்த்து விட்டு ஓசைப் படாமல் திரும்பி விட்டாள். 'காப்பிக்கு என்ன அவசரம்? எப்படியோ இரண்டும் சேர்ந்துட்டுதுகளே. அது போதும்!'



மண் புழுவும் மகாராஜனும்

து. ராமமூர்த்தி



மண் புழுவைக் கண்டால் யாருக்காவது பிடிக்குமா? மீன்களுக்கு ஒருவேளை பிடிக்குமோ என்னவோ? வேறு யாருக்கும் பிடிக்க நியாயம் இல்லை. ரங்கசாமிக்குப் பிடிக்காது. கட்டோடு பிடிக்காது. அது இஷ்டக்கு பிஷ்டக்கு என்று நெளிவதைப் பார்த்தாலே அவருக்குக் குமட்டிக் கொண்டு வரும். அப்பொழுது அவர் கண்களை மூடிக் கொண்டு கம்மா போயிருக்கலாம் அல்லவா ? நின்று வேடிக்கை பார்த்தார்.

தெருவின் இறக்கத்தில் இருந்த பள்ளத்தில் மழை நீர் தேங்கி யிருந்தது. அதைச் சுற்றி இருந்த ஈர மண்ணை ஒருவன் ஒரு கம்பியால் கிளறிப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மண் புழுவை எடுத்து, தண்ணீரில் கழுவி, துருப் பிடித்த ஒரு தகரக் குவளையில் போட்ட போதுதான் அவன் மீன் பிடிக்க மண் புழு சேகரிக்கிறான் என்பது ரங்கசாமிக்குத் தெரிந்தது.

''ஏம்ப்பா, இப்படி நோண்டி எடுத்து, சின்னாபின்னப்படுத்திச் சித்திரவதை பண்ணறே? ஒரே அடியா அதைக் கொன்னுட்டாத் தேவலாம் இல்லே?'' என்று ரங்கசாமி கேட்டார்.

காக்கி அரை நிஜாரும் பனியனும் அணிந்திருந்த அந்த ஆள், நகங்கிப் போய்க் கிடந்த ஒரு மண் புழுவை இரண்டு விரல்களால் தூக்கிக் காண்பித்து, ''எத்தனை துண்டா வெட்டிப் போட்டாலும் சாகாது சார் இது. நெளிஞ்சுக்கிட்டேதான் இருக்கும்'' என்றான்.

ரங்கசாமி அவன் சொன்னதை நம்பவில்லை. 'அதெப்படி முடியும்? துண்டு துண்டா வெட்டிப் போட்டால் சாகாம இருக்கவாவது?' என்று நினைத்தார். ஒருவேளை நம்மைப்போல் இருக்குமோ? எவ்வளவு பணத் தட்டாக இருந்தாலும் சமாளித்துக் கொண்டு தஞ்சாவூர் பொம்மை மாதிரி தலையை நிமிர்த்திக் கொண்டிருக்கிறோமே?

''டேய், புஸ்தகப் புழு! புக் வொர்ம் !'' என்று அவருடன் படித்த பையன்கள் அவரைக் கேலி பண்ணிக் கத்தினதெல்லாம் முப்பது வருஷங்களுக்கு மேல் ஆகியும் மறக்காமல் இருக்கிறது. சில விஷயங்கள் — சமீபத்தில் நடந்தவை — மறந்துவிட்டன. சின்ன வயசில், எத்தனையோ வருஷங்களுக்குமுன், நடந்தவை இன்னும் பசுமையாக நினைவில் இருக்கின்றன. இது எப்படி என்று ஒவ்வொரு சமயம் அவருக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

பள்ளிக்கூடத்தில் எழுபது எண்பது என்று தான் அவர் மார்க்குகள் வாங்கினார். என்ன பிரயோஜனம்? கல்லூரியில் சேர்க்க முடியாமல், முப்பதோ நாற்பதோ சம்பளம் வந்தால் குடும்பத்துக்கு ஒத்தாசையாக இருக்கும் என்று அவர் அப்பா அவர் படிப்பை நிறுத்தி, ஒரு வேலையும் பார்த்துக் கொடுத்துவிட்டார். அதற்கே எத்தனை பேரை அவர் காக்காய் பிடித்தாரோ ? வேலையான சூட்டோடு ரங்கசாமிக்குக் கல்யாணமும் செய்து வைத்ததில் குடும்பம் பெருகிவிட்டது. நாமிருவர் நமக்கிருவர் என்ற பேச்செல்லாம் அப்போது கிடையாது. புஸ்தகப் புழுவுக்கு இப்போது பத்திரிகைகள் வாங்கிப் படிக்கக்கூட வசதி இல்லை. காலையில் செய்திப் பத்திரிகை வாங்குவதோடு சரி. மற்றதெல்லாம் ஓசி.

ரங்கசாமி யோசித்துக் கொண்டே நடந்தார். ராஜப்பாவை நினைத்துப் பார்த்தார். அவர் வாய் சிகரெட்டை நினைத்தார். பங்களாவை நினைத்தார், அம்பாசடர் காரை நினைத்தார்.

அன்று அவர் பழைய பேப்பரைக் கடையில் போட்டதில் ஒன்றரை ரூபாய் கிடைத்தது. அவர் பெண் வசந்தாவுக்கு வயிற்றுக் கடுப்பு. மிக்சரும் மாத்திரைகளும் வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார். இதற்காகப் பழைய பேப்பர்களை அவர் பிராய்ந்து எடுத்தபோதே அவர் மனசு அலண்டு போய்விட்டது.

''கடையிலே பேப்பர் போட்டு ஒரு மாசம் ஆறது. இருபது பேப்பர் தேறலியே. பாக்கி எல்லாம் என்ன ஆச்சு ?''

''பாலு டிபன் கட்டிண்டு போறானே!'' என்று அவர் மனைவியிடமிருந்து பதில் வந்தது.

''அவனுக்குத்தான் சப்பட்டையா ஒரு டிபன்பாக்ஸ் வாங்கி இருக்கே அலுமினியத்துலே....... ?''

''அதை எடுத்துண்டு போறதில்லே. பொட்டலம்தான் கட்டிண்டு போறான்.''

''ஏனாம் ? டிபன்பாக்ஸ் எடுத்துண்டு போனால் கௌரவக் குறைச்சலோ? இதுலே ஒண்ணும் குறைச்சலில்லே, படிப்புலே ஒண்ணும் இல்லாட்டாலும்.''

அவர் இரைந்துவிட்டுக் கடைக்குப் போனார்.

அன்று குதிரைப் பந்தயத்துக்கு டிப்ஸ் கொடுப்பதாக ராஜப்பா அவரிடம் சொல்லி இருந்தார். மகானுபாவன், வரக்கூடிய குதிரைகளாக டிப்ஸ் கொடுத்து, பத்தோ இருபதோ வந்தாலும் தேவலைதான்.

போன ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ரங்கசாமி பஸ் ஸ்டாண்டில் இருந்தார். அரை மணி நேரம் கால் கடுக்க நின்ற பிறகு பஸ் வந்தது. கூட்டத்துடன் முண்டியடித்துக்

கொண்டு அவர் ஏறினார். அவருடன் நுழைந்த தடித்த மனிதரின் மூக்குக் கண்ணாடியை யாரோ தட்டிவிட, அது மூக்கிலிருந்து சரிந்தது. அவர் அதைக் கீழே விழாமல் பிடித்துக் கொண்டு, ''எல்லாருக்கும் இடம் இருக்கு. அப்படியும் விழுந்தடிச்சிண்டு சாகறாங்க'' என்றார்.

''பஸ்லேன்னா கூட்டம்தான் இருக்கும். கூட்டத்துலே போகப் பிடிக்காட்டா டாக்ஸியிலே போகணும்'' என்று எவனோ சொன்னான்.

கண்டக்டர் வாயினால் விசில் அடித்தார். வான்கோழி கத்துகிற மாதிரி சத்தம் கேட்கவும், எல்லாரும் சிரித்தார்கள். அப்போது, உட்கார்ந்திருந்த ஒருவர் எழுந்து ஓடிப் போய் இறங்கினார்.

''இந்நேரம் தூங்கினியா? இப்பத்தான் முழுச்சிக்கினியாக்கும்'' என்றார் கண்டக்டர்.

புதையலைக் கண்டவர் மாதிரி, காலியான ஸீட்டில் ஓடிப் போய் ரங்கசாமி உட்கார்ந்தார். அவர் பக்கத்தில் உட்கார்ந்த தடித்த மனிதர், தம் ஜிப்பா பையில் கையை விட்டு ஒரு ரேஸ் புஸ்தகத்தை எடுத்தார்; புரட்டினார்.

ரங்கசாமிக்கு அவரை ஏற்கனவே பார்த்த மாதிரி இருந்தது. அவர் குடியிருந்த வீட்டிலிருந்து நான்கைந்து வீடுகள் தள்ளி ஒரு பங்களா. அந்தப் பங்களா வாசலில், 'கலைச் செல்வி புரொடக்ஷன்ஸ்' என்று ஒரு போர்டு இருக்கும். வீட்டுச் சொந்தக்காரர் பெயர் சலவைக் கல்லில் எஸ். ஆர். ராஜப்பா என்று பொறித்திருக்கும். அம்பாஸடர் கார் ஒன்று போர்டிகோவில் நிற்கும். இந்த ராஜப்பாவை அவ்வப்போது ரங்கசாமி அந்தப் பங்களா வாசலில் பார்த்திருக்கிறார்.

ரங்கசாமி கனைத்துக் கொண்டு கேட்டார். ''ஏன், ஸார், இன்னிக்குப் பஸ்லேயே போறீங்க?''

ஜிப்பாக்காரர் மூக்குக் கண்ணாடி மேல் பார்வையைச் செலுத்தி அவரைப் பார்த்தார். பெரிய மனுஷப் பார்வை.

''கார்லேதான் பொறப்பட்டேன். பாதியிலே கார் மக்கர் பண்ணிட்டுது. அதான் இப்பிடி வந்தேன். டாக்ஸியும் கிடைக்கல்லே. அர்ஜண்டாப் போகணுமென்னு இதுலே ஏறிட்டேன். நீங்களும் கிண்டிதானே?''

'இல்லை' என்று சொல்வது ரங்கசாமிக்குக் கௌரவக் குறைவாகப்பட்டது. இத்தனை பேர் ரேசுக்குப் போகிறார்கள். பஸ்ஸில் பாதிப் பேர் கையில் ரேஸ் புஸ்தகம். அந்தப் பஸ்ஸில் ஏறிவிட்டு, 'வேளச்சேரி போகிறேன்' என்று சொல்வது? தலையை ஆட்டினார். ஆமாம் என்றோ, இல்லை என்றோ எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளட்டுமே.

மறு நாள் ராஜப்பாவை அவர் பங்களாவின் வாசலில் கண்டார். ராஜப்பா, வாயிலிருந்த சிகரெட்டைக் கையில் எடுத்துக் கொண்டு, ''பாருங்க! நேத்து அவ்வளவு அவசரமாப் போயும் லேட்டாயிடுத்து. மொதல் ரேசுக்குப் போகணும்னு போனேன்.



அதுலெதான் எனக்கு சர்ட்டண்டி. ஸ்டேபிள் இன்பார்மேஷன். நான் போறேன், மொதல் ரேஸ் உட்டுட்டான். டிக்கெட் வாங்க முடியல்லே'' என்றார்.

'' அந்த ஹார்ஸ் வந்துதாக்கும் ?''

'' பின்னெ வராமெ ? ஸ்டேபிள் இன்பர்மேஷன் ஆச்சே !''

'' என்ன துரதிர்ஷ்டம் ஸார் !''

''ஒரு டொண்டி தவுசன் பண்ணி இருக்க வேண்டியவன், ஏழெட்டு ரூவா நஷ்டத்தோடே திரும்பி வந்தேன். போகட்டும், உடுங்க. ரேஸ்ன்னா இப்படித்தான் இருக்கும். போகும் வரும். அடுத்த வெள்ளிக்கிழமை குட் ப்ரைடே ரேஸ் உண்டு. அதுலெ மேக்கப் பண்ணிவிடலாம்.''

'' அன்னி ரேசுக்கும் உங்களுக்கு டிப்ஸ் கிடைச்சிருக்கோ?''

ராஜப்பா சிகரெட்டை வாய் ஓரத்துக்கு நகர்த்தினார். ஜிப்பா பைக்குள் கையை விட்டு ரேஸ் புஸ்தகத்தை வெளியே எடுத்தார். அதைப் பிரித்து ஒரு பக்கத்தில் ஒரு குதிரையின் பெயர் மேல் தம் விரல் நகத்தால் கோடு இழுத்தார்.

'' இந்தக் கோல்டு ஸ்டார் ஒன் ஹார்ஸ் ரேஸ் அன்னிக்கி ! இதுலெதான் மேக் அப் பண்ணனும். நீங்க போவீங்க இல்லே?''

''ம்ம்......''

''கண்டிப்பா போங்க. உடாதீங்க. ரேஸ் ஆட ஆரம்பிச்சா, சீசன்லே ஒரு நாள்கூட உடக் கூடாது. உட்டீங்களோ, அன்னிக்கி தான் ஒங்க குதிரை எல்லாம் ஓடியாந்துடும். ஞாபகம் வைச்சுக்குங்க.''

''ம்ம்.....''

''இதுலெ போடுங்க ஒங்க பணத்தை. ஒங்க வீட்டு வாடகை வந்துடும். எவ்வளவு குடுக்கிறீங்க வாடகை?''

''எரனூறு !''

வாடகை நூறுதான். அவருக்கு இருநூறு என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது. சொன்னார்.

''ஓ, தாராளமா வரும். ஆனா ஒண்ணு மிஸ்டர். யாரிட்டேயும் சொல்லிடாதீங்க.... ஃபேவரிட் ஆயிடும். த்ரீ டு ஒன், டு டு ஒன்னுன்னு போயிடும்.''

இதெல்லாம் என்ன, குதிரைகளா; இல்லே ஏதாவது ராக்ஷச ஜன்மங்களா ? இப்படி அசுர வேகத்தில் பறக்கின்றனவே. அதில், ரங்கசாமியின் குதிரை நாலு கால் பாய்ச்சலில் எல்லாவற்றையும் முந்திக் கொண்டு ஓடி 'வின்' அடிக்கிறது !

வேர்த்துக் கொட்ட, மூச்சு முட்ட, ரங்கசாமி விழித்துக் கொண்டார். கனவு என்று தெரிந்ததும், அ ்ர் ஒருக்களித்துப் படுத்தார்.

அந்த வாரம் குதிரைப் பந்தயத்தில் உண்மையிலேயே அவர் குதிரை ஜயித்தது. ஆனால் அதில் அவருக்கு முப்பத்திரண்டு ரூபாய்தான் கிடைத்தது. ஜவுளிக் கடையில் துணி வாங்கினார். சின்னாளப்பட்டில் புடவையும் நாலு முழம் கைத்தறி வேஷ்டியும்.

;''ஏது இப்பப் பணம், மாசக் கடைசியில்?'' என்று அவர் மனைவி கேட்டாள். அவள் நல்ல அழகி. பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்டிருக்கக் கூடியவள். உறவு விட்டுப் போக வேண்டாம் என்பதற்காக அவள் தகப்பனார் அவளை ரங்கசாமிக்குக் கொடுத்தார். மாசக் கடைசியில் அவர் புடவையும் வேஷ்டியும் வாங்கி வந்ததில் அவளுக்கு மிகுந்த ஆச்சரியம்.

ரேசுக்குப் போனேன், பணம் வந்தது என்று சொல்ல முடியுமா? எத்தனை நாட்களாய் இந்தப் பழக்கம் என்கிற கேள்வி வரும்.

''ஆபீசில் ஒரு அஞ்சு ரூபா சீட்டுக் கட்டினேன். இந்த மாசம் எனக்கு விழுந்தது.''

''அட, நமக்கும் கொஞ்சம் அதிர்ஷ்டம் இருக்கே !''

அவள் கண்கள் வேர்க்கின்றன. வாய் குவிகிறது. ரங்கசாமி அவளையே பார்க்கிறார். அவள் வாயைக் குவித்துக் கொண்டு செல்வதே ஓர் அழகாக இருக்கிறது.

அதிர்ஷ்டம் இருக்கா ? நிஜமாவா? மனைவி வாயில் வந்ததே அதிர்ஷ்டம் இருக்கு என்று ! முயற்சி பண்ணிப் பார்க்கலாமா? அவள் கடிகாரம் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று ரொம்ப நாட்களாக ஆசைப்படுகிறாள். அவள் கைக்குக் கடிகாரம் அழகாகத்தான் இருக்கும். ஒவ்வொருத்தியின் கையைப் போல் எலும்புக் கையாக இல்லாமல், கொழுகொழு என்று உருட்டிவிட்ட மாதிரி வாழைத் தண்டுக் கை. அந்தக் கையை முதல் முதல் பிடித்தபோது உடம்பெல்லாம் எப்படிப் பரபரத்தது !

ஞாயிற்றுக்கிழமை ரேஸானால், அன்று தான் அவர் தலை க்ராப் செய்து கொள்கிற தினமும். ஸலூனில் கூட்டமாகத்தான் இருக்கும். காத்திருக்கிற நேரத்தில் இல்லஸ்ட்ரேடட் வீக்லி படிக்கலாம். அவர் போகும் போது ராஜப்பாவின் பங்களாவைப் பார்த்துக் கொண்டே போனார். வரும் போதும் பார்த்துக் கொண்டே வந்தார். ராஜப்பா கண்ணில் படவில்லை. கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போய், 'ராஜப்பா இருக்கிறாரா?' என்று கேட்டு, டிப்ஸுக்காகப் பல்லை இளிப்பது சரி என்று படவில்லை. அவரைத் தற்செயலாகப் பார்த்த மாதிரி இருக்க வேண்டும். அப்போது கேட்க வேண்டும்.

வீட்டுக்கு வந்த பிறகு மறுபடியும் வெளியே போக அவர் துடித்தார். அப்போது, '' நெருப்புப் பொட்டி வாங்கின்டு வாடா கண்ணு!'' என்று மனைவி மகனை வேண்டுவதும், அவன் 'இரு, போறேன்' என்று சொல்வதும் காதில் விழுந்தது.

'' நானே போறேன். அவனை ஏன் வேண்டறே?'' என்று அவர் விருட்டென்று எழுந்தார்.

அந்தப் பாவி மனுஷன் ராஜப்பா இந்த முறையாவது அவர் கண்ணில் படக்கூடாதா ? அம்பாசடர் காரைத் தவிர வேறு எதுவும் வெளியே இல்லை. ரங்கசாமி, கையிலிருந்த காசைக் கீழே போட்டவர் மாதிரி சற்று நேரம் கீழே குனிந்து குறுக்கும் நெடுக்கும் அலைந்தார். தரையில் ஒரு கண், பங்களா வாசலில் ஒரு கண். நெருப்புப் பெட்டியை வாங்கிக் கொண்டு அவர் திரும்பி வந்த போதும் இதே கதைதான் நடந்தது.

செருப்பைக் கழற்றி வைக்கும் போது, சமையல் அறைப் பக்கம் கணீரென்று சத்தம்



மதுரை கல்கி ஏஜெண்ட் திரு கே. ராஜூ அவர்கள் குமாரத்தி செல்வி: சுப்புலட்சுமிக்கும் திரு கே. கிருஷ்ணசாமி அவர்கள் குமாரர் செல்வன் கே. சந்திரசேகரனுக்கும் மதுரையில் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



ஒரு குடும்பஸ்தரின் அங்கலாய்ப்பு: "ம், இந்த மாத 'எலெக்ட்ரிக் பில்'லைப் பார்த்து ரொம்ப ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தேன் - என் மனைவி மண்ணெண்ணெய் 'பில்'லைக் கண்ணில் காட்டும் வரை...!"

- கே. வி. முரளி

மின் வெட்டு.....



"என்ன சார் கையிலே கட்டு?"

"மாடிப்படி ஏறும்போது வழுக்கி விழுந்துவிட்டேன்!"

"உங்கள் வீட்டில் மாடிப்படியே கிடையாதே?"

"இருட்டில் அது தெரிந்தால் தானே?"

கேட்டது. இடது கையை மடக்கி, புறங் கையால் முதுகைத் தடவிக் கொண்டு, உடம்பை நெளித்தபடி சாம்பு, ரங்கசாமியின் எதிரே ஓடி வந்தான்.

"என்ன பண்ணித்து இந்தப் பிடை, கேளுங்கோ."

"கேக்கறது என்ன? முதுகிலே அறை வாங்கிண்டு இருக்கான்."

"அறையா? அறை போறுமா அதுக்கு? கொன்னு குழியை வெட்டி எறக்கணும் அதை. நல்லெண்ணெய் வாங்கிண்டு வான்னு அனுப்பினா, ஒண்ணேகால் ரூபா எண்ணெயையும் தெருவிலே கொட்டி மெழுகிப்பிட்டு வந்து நிக்கறது, கழிச்சலே போறது."

ரங்கசாமிக்கு நான்கு குழந்தைகள். ஐந்தாவதுக்கும் அடி போட்டாய்விட்டது. நாலில் சாம்புதான் செல்லப்பிள்ளை.

அன்று டிபனுக்கு பஜ்ஜி போடச் சொல்லி எண்ணெய் வாங்கப் பணமும் அவர் கொடுத்துவிட்டுப் போனார். அந்த எண்ணெயைத்தான் அவர் செல்லப்பிள்ளை தெருப் புழுதிக்கு அர்ப்பணம் பண்ணியிருக்கிறான்.

"பஜ்ஜி கேட்டேளே ஆசைப்பட்டு. தினமும்தான் ஹோட்டல்லே கண்டத்தையும் வாங்கிச் சாப்பிடறேள். இன்னிக்காவது ஆசைப்பட்டதைப் பண்ணித் தரலாம்னு பார்த்தால், இது இந்த மாதிரி பண்ணிட்டு நிக்கறது. நமக்கு இருக்கற சமர்த்துத்தானே நம்ம வயத்துலே பொறந்ததுக்கும் இருக்கும். எல்லாரையும் போல நகைநட்டோட நான் வாழறேனா? இழுப்பக் கட்டி மாதிரி தோடும், சாயம் போன புடவையுமாய், பிக்காரிமாதிரி தானே இருக்கேன்?"

கழுத்தைச் சுற்றி வழிந்த வியர்வையை அவள் புடவைத் தலைப்பினால் ஒற்றிக் கொண்டாள். இவளா பிக்காரி மாதிரியிருக்கிறாள்? நகைநட்டு இல்லாவிட்டாலும், துடைத்து விட்ட சலவைக் கல் பொம்மைமாதிரி மூக்கும் விழியுமாய்! நாலு பிள்ளை பெற்றவள் என்று சொன்னால் யார் நம்புவார்கள்? இவள் முதுகிலேயும் இப்படி ஓர் அழகா?

உள்ளே போகிறவளின் முதுகைப் பார்த்துக் கொண்டேயிருந்தவர், பனியனை மாட்டிக் கொண்டு கிளம்பினார். அவள் திரும்பி வந்து, "எங்கே இந்த வெயில்லே?" என்று கேட்டாள்.

"பொடி வாங்க."

"டப்பி நிறையப் பொடி இருக்கேப்பா!"-இதுசாம்பு.

"உம். காரமே இல்லே. வேறெ கடையிலே வாங்கணும்."

இந்தப் பொய்யோடு மணம் உள்ள பொடியை அவர்கள் எதிரில் சாக்கடையில் கொட்டி விட்டு வெளியே போனார்.

அப்பொழுதும் ராஜப்பா அவர் கண்ணில் படவில்லை. இந்த வெயில்லெ எவன் வெளியிலே இருப்பான்? நமக்குத்தான் தலையெழுத்து.

"கார்த்தாலேதானே சாமி பொடி வாங்கினீங்க?"

பொடிக் கடை சோமு முதலி கேட்கிறார்.

"கொட்டிப் போச்சு முதலியாரே!"

புதுப் பொடியை ஒரு சிமிட்டா 'சர்ர்.....' என்று இழுத்துத் திரும்பி வருகையில் ராஜப்பாவின் மேல் இடறிவிழாத குறை. அந்தத் தடித்த மனிதர் சிகரெட் புகைத்துக் கொண்டு வாசலில் நிற்கிறார். காருக்கு என்னவோ ரிப்பேர் நடக்கிறது.

ரங்கசாமி பல்லைக் காட்ட, ராஜப்பா தலையை ஆட்டினார்.

"அன்னிக்கு ஆடினீங்களா மிஸ்டர்?"

"ம்ம்..... முப்பத்திரண்டு ரூபாய்தான் வந்தது."

"ஃபேவரிட் ஆயிடிச்சு. நீங்க எல்லார் கிட்டேயும் சொன்னீங்களோ?"

"ம்ம்......."

"இன்னிக்கும் போறீங்க, இல்லே?"

ரங்கசாமி இடுப்பில் கைவிட்டு ரேஸ் புஸ்தகத்தை எடுத்தார். புஸ்தகமா அது? விலை நாலணா இருக்கும் என்று ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் வாங்கினார். விலையைப் பார்த்தால் ஒரு ரூபாய் இருபத்தைந்து பைசா என்று இருந்தது. இதற்கா இத்தனை விலை?

திருப்பிக் கொடுத்தால் அந்தப் பையன் பிடை கிராக்கி என்று முணுமுணுப்பான். இன்னொரு காகிதமும் அவன் வைத்திருந்தான். குதிரைகள் பெயரும் ஜாக்கிகள் பெயரும் மட்டும் இருந்தன. இருபத்தைந்து பைசா. அதைக் கொண்டு போய் ராஜப்பா

விடம் நீட்டுவதா என்று அவருக்குத் தோன்றிற்று. புத்தகமே வாங்கி விட்டார்.

''ரெண்டாவது ரேஸ்லே அஞ்சாம் நம்பர் இல்லெ? டார்க் ப்யூட்டி. அதான் இன்னிக்கி நூறாட் பேவரிட். ஒன் ஹார்ஸ் ரேஸ்! எவ்வளவு பணம் இருக்கோ, அதை அதுந் தலையிலே 'போடுங்கோ மிஸ்டர்! ஆனால் கொஞ்சமாத்தான் பணம் குடுக்கும். பேவரிட் பாருங்க......''

இடுப்பில் இருந்த ரேஸ் புஸ்தகத்தை ரகசியமாக எடுத்து மேஜை டிராயருக்குள் திணிக்கையில், எங்கிருந்தோ கழுகுப் பார்வை பார்த்துக் கொண்டிருந்த சாம்பு, ''அதென்னப்பா டைரி? எனக்குக் குடுப்பா'' என்றான்.

''டைரியும் இல்லே, மண்ணாங்கட்டியும் இல்லே, வேலையைப் பாரு! ஒரு காரியம் சொன்னா ஒழுங்காச் செய்யத் துப்பில்லே. டைரி என்ன டைரி?''

''கொழந்தை ஆசைப்பட்டுக் கேக்கறான். அவனுக்குத்தான் ஒரு டைரி கொடுங்களேன். ரெண்டு மூணு வைச்சுண்டு நீங்க என்ன பண்ணப் போறேளாம்?''

பையனுக்குக் கழுகுப் பார்வை என்றால், கூடத்து வாசற்படியில் தலை வைத்துப் படுத்திருப்பவளுக்குப் பாம்புச் செவியா? தூங்கலியா இவள்?

''டைரின்னு யார் சொன்னா? அவன் ஒளர்றான். சகஸ்ரநாம புஸ்தகத்தை டைரிங்கறான்'' என்று ரங்கசாமி வெதுவெதுப்புடன் சொல்லி, ரேஸ் புஸ்தகத்தைச் சாமர்த்தியமாக ஒளித்துவிட்டு, அதே அளவில் இருந்த சகஸ்ரநாம புஸ்தகத்தை எடுத்துச் செப்பிடுவித்தைக்காரன் மாதிரி தூக்கிக் காண்பித்தார்.

''அதில்லேப்பா!'' என்று ஆரம்பித்த சாம்பு, சிநேகிதப் பையன் தன்னைக் கூப்பிடுவதைக் கேட்டு வெளியே ஓடினான்.

ரங்கசாமி தாராளமாக மூச்சு வாங்கினார்.

அன்று கிண்டியில் இரண்டாவது ரேஸ் முடிவுகள் வெளியான போது ரங்கசாமியால் தாராளமாக மூச்சுவிட முடியவில்லை. அவருடைய டார்க் பியூட்டி அரோகரா! மூன்றாவதாகக்கூடத் தலை காட்டவில்லை.

கிராண்ட் ஸ்டாண்டிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த ராஜப்பா, வாய் ஓரம் சிகரெட்டுடன், ''ஒங்களுக்கு எவ்வளவு போச்சு மிஸ்டர்?'' என்று கேட்டார்.

ரங்கசாமி நூறு என்றதும், ''தட்ஸ் ஆல்? தட்ஸ் நத்திங்! எனக்குப் பதினைஞ்சாயிரம் போச்சு மிஸ்டர். வின் பண்ணின ஹார்ஸ் டார்க் ப்யூட்டியோட ஸ்டேபிள் மேட்.... இதைக் காட்டி ஃபேவரிட் ஆக்கி, அதைக் கொண்டாந்து வின் பண்ணிட்டாங்க, திருட்டுப் பசங்க! இருக்கட்டும். இந்த ரேஸ்லே ட்ரை பண்ணலாம்'' என்று சொல்லிவிட்டு, டிக்கெட் வாங்க விரைந்தார்.

தட்ஸ் நத்திங்காவது! வீட்டுக்காரனுக்குக் கொடுக்க வேண்டிய வாடகைப் பணம் போய் விட்டது: தட்ஸ் நத்திங்கா! அவனுக்கென்ன, மகாராஜன். ஆயிரக்கணக்கில் போனாலும் லட்சியம் இல்லே. பெரிய பங்களா, கார், தொள தொள ஜிப்பா, கை மணிக்கட்டுலெ கிழங்கு மாதிரி ஜப்பான் கடிகாரம், ஜெர்மன் ஃப்ரேம் மூக்குக் கண்ணாடி, வாய் ஓரம் சிகரெட் எல்லாம் இருக்கு. படிப்புத்தான் இல்லே. பேச்சைப் பார்த்தாலே தெரியறது. நாம் படிச்சு என்னத்தைக் கண்டோம்? புஸ்தகப் புழுன்னு பேர் வாங்கினதுதான் மிச்சம்......

ரங்கசாமி சிந்தித்துக் கொண்டே வீட்டுக்குத் திரும்பினார். தெரு இறக்கத்தில், காக்கி அரை நிஜார்க்காரன் மண்ணைக் கிளறி மண் புழுவைத் தேடிக் கொண்டிருந்த காட்சி நினைவுக்கு வந்தது. துண்டு துண்டாக வெட்டிப் போட்டாலும் சாகாமெ நெளிஞ்சுகிட்டே இருக்கும்னு சொன்னானே. நிஜமாக இருக்குமா? ஏன் இருக்காது?

......சிரிப்பைக் கொட்டு



''ஏண்டி, மாப்பிள்ளைப் பையன் பாதித் தாடியும் பாதி மீசையுமாக இருக்கிறார்?''

''உஷ்..... இரையாதேடி....! 'எலெக்ட்ரிக் ஷேவராலே பாதி 'ஷேவ்' பண்ணிக் கொள்ளும் போது மின்சாரம் 'கட்' ஆயிடுத்தாம்!''

''ஏம்பா, பெல்பாட்டம், லுங்கி, ஹிப்ஸ்டர் எல்லாம் 'அல்ட்ரா மாடர்ன்'னு உடுத்திகிட்டுப் போறவங்க கையிலே ஏன் ஓலை விசிறிகளைக் கொண்டு போறாங்க?''

''ஒண்ணுமில்லேப்பா, அவங்க ஆபீஸிலே ஃபேன் எல்லாம் இப்ப உபயோகிக்கக் கூடாதாம்!''

— நெல்லை நீல. சுந்தரம்





நல்லதோர் காலை
நறுமண வேளை
நாள்தனை
நன்கு தொடங்கிட
நரசுஸ்
காபி
100% PURE COFFEE
'தெர்மலோ'
முறையில் தயாரிக்கும்
நரசுஸ் காபி இப்போது
மற்ற காபிகளைவிட
கிலோவிற்கு 30 கோப்பை
அதிகச் சுவையுள்ள
காபியை அளிக்கிறது.
நரசுஸ் காபி கம்பெனி
சேலம்-7
கிளைகள் தமிழகமெங்கும்

8

பைரவி உண்மையிலேயே பொறி கலங்கிப் போயிருந்தாள். அவளுடைய கூந்தல் சற்றே கலைந்தது போல் காணப்பட்டது. அவசரத்தில் கட்டிக்கொண்டு புறப்படுகிற மாதிரி சேலையைச் சுற்றிக் கொண்டிருந்த மாதிரியும் அவனது கண்களுக்குப் புலப்பட்டது.

இரண்டு கால் பாய்ச்சலில் மாடியிலிருந்து பைரவி ஓடி வந்தாளே! அதனால் ஏற்பட்ட கோலமா இது?

சக்கர வண்டியில் அமர்ந்த வண்ணம் இடக் கரத்தால் மார்பை அழுந்தப் பற்றிக் கொண்டு குனிந்த தலையைச் சற்றே ஒருக்களித்து, ஓடி வந்து நின்ற மனையாளை ஓரக் கண்களால் கவனித்தான் மோகனசுந்தரம். அவனுடைய உடல் முழுதும் வியர்வை சொட்டிக்கொண்டிருந்தது.

அருகே வந்து நின்ற பைரவி, கணவனுடைய முதுகில் வலக் கரத்தால் இதமாகப் பற்றி, ''மறுபடியும் செஸ்ட் பெயின் வந்து விட்டதா?'' என்று குரல் நடுங்கக் கேட்டாள்.

'உம்' கொட்டிக் கொண்டே தலை அசைத்த வண்ணம் மனையாளை நோக்கினான். அவளுடைய அந்தக் கோலம் அவனுக்குப் புதியதாகவும் புதிராகவும் தென்பட்டது. ஏன் இப்படிச் சற்றே அலங்கோலமாகக் காணப்படுகிறாள்!

இதையே திரும்பத் திரும்ப அவனுடைய உள்ளுணர்வு கேட்டுக் கொண்டிருந்தது.

''டாக்டரை அழைச்சிக்கிட்டு வரட்டுமா?'' என்று கேட்டாள் பைரவி. சொல்லப் போனால் இதயத் துடிப்பு அவளுக்குத்தான் அதிகமாக இருந்தது. எந்த நேரத்தில் அது நின்றுவிடுமோ என்றும் பயமுறுத்தியது.

'வேண்டாம்' என்பதுபோலச் சமிக்ஞை காட்டினான் மோகனசுந்தரம். ''பயப்படும்படியாக ஒண்ணுமில்லே!''

''பின்னே ஏன் அப்படிச் சத்தம் போட்டீங்க?''

''நெஞ்சை யாரோ அழுத்திப் பிடிக்கிற மாதிரி இருந்தது. இருதயத்திலே ஏதோ முள் குத்தினால் எப்படி இருக்கும்? அப்படி இருந்தது!''

அப்படிக் கத்தும்போது அவனுக்கு உண்மையில் நெஞ்சு வலி இல்லை! கருவேல மரத்தின் முள் இப்போதுதான் அவன் இதயத்தைக் குத்திக் கொண்டிருந்தது.

''எதுக்கும் டாக்டரைக் கூட்டிக்கிட்டு வந்தால் நல்லதில்லையா?'' புழுவாகத் துடித்தாள் பைரவி. புழுவைப்போல் துடிக்க வேண்டிய மோகனசுந்தரம் புற்றுநாகம் போலப் படம் விரித்துக் கவனித்தான். இடவலமாகத் தலையசைத்து, ''கொஞ்சம் வெந்நீர் கொடு, போதும்'' என்றான்.

கொஞ்சமும் தாமதியாமல் சமையலறைக்கு ஓடிச் சென்று 'ஸ்டவ்'வைப் பற்ற வைத்து வெந்நீர் போட்டாள்.

அந்த இடைவெளியில் மாடி அறையை அண்ணாந்து கவனித்தான் மோகனசுந்தரம். விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அவனால் எதையும் சரிவரத் தீர்மானிக்க முடியவில்லை. அவனுடைய சிந்தனையில் தட்டெழுத்து இயந்திரம் தொடர்ந்து சத்தமிட்டதும், பிறகு நின்றதும் கண்பொத்தி விளையாட்டுப் போல் தோன்றியது.



விசித்திரமான ஓர் இயந்திரமா அது? பைரவி ஓடி வருகிறபோது தொடர்ந்து அடித்துக் கொண்டிருந்ததே! பின்பு அந்தச் சத்தம் 'ப்ட்' டென்று நின்றதே! அது எப்படி?.... எப்படி?.... எப்படி????

ஏதோ ஒரு மாயாஜாலபுரி மாடியில் இருப்பதாகவே கற்பனை செய்து பார்த்தான் மோகனசுந்தரம். சிரிப்பொலி கேட்டது முதற்கொண்டு தொடர்ந்து சிந்தனையைச் சங்கிலியாகக் கோத்துப் பார்த்தான். ஆமாம், நமக்கும் அப்பால் ஏதோ ஒன்று மேலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது! அது என்ன என்பது தான் புரிந்து கொள்ள முடியாத விசித்திரமாகத் தெரிகிறது.

முதலில் கேட்ட சிரிப்பொலி, மல்லிகைப்பூ மர்மம்... மாடியிலிருந்து வந்த ஆஷ் டிரே... இவன் துப்பறிந்து கண்டுபிடித்த மாற்று பிராண்டு சிகரெட்டுத் துண்டு, சினிமா டிக்கெட்டுகள் எல்லாம் மாறி மாறி அவனது மனக் கண்முன் வந்து வந்து போய்க் கொண்டிருந்தன.

சிக்கலான இந்தச் . சிந்தனைக்கு எங்கோ ஒரு முடிச்சு இருக்கிறது. அதனைத் தேடி அவிழ்த்து விட்டால் சந்தேகத்துக்குரிய சிக்கல் தீர்ந்து விடும்.

பைரவி வெந்நீர் கொண்டு வந்தாள். அதனைப் பெற்றுப் பருகிய மோகனசுந்தரம், ''மாடியில் இன்னும் வேலை இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''அது கிடக்கட்டும்; முதலில் உங்க உடம்பு எப்படி இருக்கு? அதைச் சொல்லுங்க!''


''படுத்து ஓய்வு எடுத்துட்டாச் சரியாய்ப் போயிடும்!''


சக்கர வண்டியைப் படுக்கையண்டைத் தள்ளிச் சென்றாள் பைரவி. பின்னர் கைத்தாங்கலாகப் பற்றிப் படுக்கையில் கிடத்தினாள். அதற்குமேல் அவளும் மாடிக்குச் செல்லவில்லை. கணவன் கண்ணுறங்கும்வரையில் தானும் பக்கத்திலிருந்து பணிவிடை செய்தாள்.

மாடி அறையிலும் அதை யொட்டிய வராந்தாவிலும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அதை மட்டும் உணர்ந்த பைரவி மாடிக்குச் சென்று அறையின் கதவுகளைப் பூட்டிவிட்டு மின் விளக்குகளையும் அணைத்து விட்டு ஐந்தே நிமிடங்களில் திரும்பவும் வந்து படுக்கையில் படுத்துக் கொண்டாள்.

நன்றாகத் தூங்குபவன்போல் காணப்பட்ட மோகனசுந்தரம் பைரவி மாடியறைக்குச் சென்று திரும்ப எவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டாள் என்பதையும் கணக்கிடத் தவறவில்லை.

அன்றிரவு முழுதும் விழிப்பும் அரைத் தூக்கமுமாகக் கழிந்தது.






காலண்டரிலிருந்து ஒரு காகிதத்தைக் கிழித்தான்மோகனசுந்தரம். முதல் தேதி சிவப்பு மையில் அபாயகரமாகத் தெரிந்தது. பொதுவாகவே எல்லாருக்குமே ஆனந்தமாகப் படவேண்டிய இந்தத் தேதியை ஏன்தான் சிவப்பு மையால் அச்சடிக்கிறார்களோ? ஒருகால் ஜாக்கிரதை, இன்று முதல் தேதி பிறக்கிறது; இன்னும் முப்பது நாட்கள் இருக்கின்றன என்று எச்சரிப்பதற்காக இருக்கலாமோ?

விடியற்காலை ஐந்து மணிக்கே வர வேண்டிய அஞ்சலை மணி எட்டாகியும் வரவில்லை! ''ஏன் அஞ்சலை இப்படி மட்டம் போட்டு விட்டாள்?'' என்று முனகியபடியே பம்பரம்போல் சுழன்று சுழன்று காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள் பைரவி! அவள் இனி மேல் எங்கு வரப் போகிறாள்? மோகனசுந்தரத்துக்குத் தெரியுமே!

காலையிலேயே டாக்டருக்குச் சொல்லி யனுப்பி யிருந்தாள் பைரவி. இரத்த அழுத்தத்தைப் பரிசோதனை செய்து பார்த்த டாக்டர், ''நூறு வயசு வரைக்கும் உங்களை ஒண்ணுமே பண்ண முடியாது ஸார்! அவ்வளவு ஸ்ட்ராங்கா இருக்கு உங்களுடைய இருதயம்!'' என்று சொல்லிவிட்டுப் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்துப் பார்த்து அடுத்த 'விசிட்' யாருடைய வீட்டுக்கு என்று நினைவு படுத்திக் கொண்டு யாருடையபதிலுக்கும் காத்திராமல் நடையைக் கட்டினார். பைரவி அலுவலகத்துக்குப் புறப்பட்டாள். புறப்படும்போதும் காலையில் கேட்ட அதே கேள்வியைக் கேட்டாள். ''இன்னிக்கு நான் ஆபீசுக்குப் போகணுமா?''



மோகனசுந்தரம் சிரித்தான். அந்தச் சிரிப்பில் சூன்யத்தின் பிரதிபலிப்புத் தெரிந்தது. ''என் இருதயம் அதற்குள்ளே வெடித்து விடாது! அதுதான் நூறு வயசு இருக்கப் போகிறேனே! பயப்படாமல் போயிட்டு வா...''

பைரவி அவனுடைய முகத்தைக் கவனித்தாள். அகத்தின் அழகை முகத்தில் பார்க்கிறாளா? அல்லது அகத்தின் விகாரத்தை முகத்தில் புரிந்து கொள்ள முயற்சி செய்கிறாளா? மோகனசுந்தரம் சற்றே சமாளித்தான்.

''இன்னிக்குச் சம்பளத் தேதி இல்லையா? வரும்பொழுது ஏதாவது பழம் வாங்கிட்டு வாயேன். மாதுளம் பழம் சாப்பிடணும்போலத் தோணுது! ஒரு பெண்ணுடைய உள்ளத்தை அந்தப் பழத்துக்குப் பெயராக வைச்சானே, அவன் மகா புத்திசாலி பைரவி...!''

பைரவி, பிளந்த மாதுளம் பழத்தைப்போல் சிரித்தாள்.

மோகனசுந்தரம் மேலும் பேச்சைத் தொடர்ந்தான்: ''உன்னைப்போல் ஒரு நல்ல மனைவி அவனுக்கு வாய்த்திருக்கணும்! மணி மணியான நல்ல சிவந்த எண்ணங்களைத் தாங்கிய உள்ளமல்லவா மாதுளம்?''

அவன் கலகலவென்று சிரித்தான். சூன்யத்தின் பொட்டல் வெளியிலிருந்து ஏகாந்தமாகச் சிரிப்பதுபோல் அவன் தொடர்ந்து சிரித்தான்.

சிணுங்கியிருந்த பைரவியின் மனம் அந்தச் சிரிப்பில் சற்றே இதழ் விரித்துத் தெளிந்தது. அதுவரையில் தயங்கியிருந்த அவளுடைய கால்கள் இப்போது தாராளமாக நடை போட்டு அலுவலகம் நோக்கிச் சென்றன. அவள் புரிந்து கொண்ட விதம் அப்படி!

கடிகாரத்தின் முள் சுழன்று கொண்டேயிருந்தது.

வெகு நேரம் கழித்து ஒரு முடிவுடன் சக்கர வண்டியைச் சுழற்றிக் கொண்டே தெரு வாசற் கதவண்டை சென்று சாத்தித் தாழிட்டான். எப்படியும் மாடிக்குச்

சென்று சோதனையிட வேண்டும். அது தான் அவனுடைய முதல் வேலை.

பரணை அண்ணாந்து கவனித்தான். காலொடிந்தபோது அவனுக்காக வாங்கிய ஊன்றுகோல்கள் அங்கே கிடந்தன... அவன் சிந்தனை பின்னோக்கிச் சென்றது.

ஒரு நாள் அந்தி வேளை. ஊன்று கோல்களை வைத்துக் கொண்டு தாங்கித் தாங்கி அவன் நடந்து கொண்டிருந்த நாட்கள்! பைரவி அன்று புதிதாக ஒரு சேலை வாங்கி வந்திருந்தாள். மஞ்சள் நிறத்தில் பிரிண்ட் செய்யப்பட்ட ஷிஃப்பான் சேலை. கண்ணைப் பறித்தது. அலுவலகத்திலிருந்து வந்ததும் வராதது மாக அந்தச் சேலையைக் கட்டிக் கொள்ளச் சொல்லி உத்தரவிட்டிருந்தான். புருஷனின் உத்தரவைச் சிரமேற் கொண்ட அவள் உடனே குளியலறைக் குச் சென்று விட்டாள். ஊர்வசியைப் போல் வந்து நிற்கப்போகும் தனது மனையாளைப் பற்றிய எண்ணத்திலிருந்த மோகனசுந்தரத்தின் காதுகளில் வாசவில் செல்லும் பூக்காரியின் குரல் கேட்டது.

மஞ்சள் நிற அந்தி நேரம்; மஞ்சள் சேலை; மஞ்சள் சோளி; இதற்கெல்லாம் இணையாக அவளது மஞ்சள் நிற மேனி; தலையிலேயும் மஞ்சள் நிறப் பூக்களை வைத்துவிட்டால்! தனது கண்ணே பட்டுவிடும்! பூக்காரியிடம் சாமந்திப்பூ இருக்க வேண்டுமே! ஊன்றுகோல்களை இடுக்கிக் கொண்டு மூன்றுகால் பாய்ச்சலில் வாசற்படிவரை சென்று குரல் கொடுத்துப் பூக்காரியை அழைத்தான். நல்ல வேளை அவளிடம் சாமந்திப்பூ இருந்தது; பத்து முழங்கள் வாங்கிக் கொண்டான்! அதற்குண்டான பணத்தைக் கொடுத்து அனுப்பி விட்டுத் திரும்பவும் பைரவி, மஞ்சள் நிறத்தை ஹால் முழுதும் பிரதிபலித்துக் கொண்டு அழகே உருவாக அறையிலிருந்து வெளியே வரவும் சரியாக இருந்தது.

கையில் இருக்கும் சாமந்தியைச் சட்டென்று பின்னால் மறைத்துக்கொண்ட மோகனசுந்தரம், ''நில்லு பைரவி!'' என்று கூறிவிட்டு 'விருட்' 'விருட்' டென்று அவளை நோக்கி விரைந்தான்.

சரக்!...

ஊன்றுகோலில் ஒன்று 'மழ மழ' வென்றிருந்த தரையில் வழுக்கிவிட்டது. அடுத்த விநாடி தரையில் உருண்டான் மோகனசுந்தரம். துடித்துப்போய் விட்டாள் பைரவி. நல்ல வேளை, பெரிதாக ஒன்றும் நடந்து விடவில்லை!

செல்லமாகக் கடிந்து கொண்ட பைரவி ஊன்றுகோல்களைப் பரணையின் மீது தூக்கி எறிந்து விட்டாள்; மறுநாளே சக்கர வண்டியை வாங்கி வந்து விட்டாள்!

அன்று தூக்கியெறிந்த ஊன்று கோல்கள் இன்னமும் பரணையிலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டேயிருக்கின்றன. ''நான் வேண்டாமா உனக்கு?'' என்று கேட்பதுபோல் ஊன்றுகோல்களின் மேல் பிடிகள் மட்டும் பரணுக்கு வெளியே தலையை நீட்டிக் கொண்டிருந்தன.

மாடிக்குச் செல்ல வேண்டுமென்றால் இந்த ஊன்றுகோல்கள் இருந்தால் தேவலை! அவைகளை எடுக்க வேண்டும்! எப்படி எடுப்பது? நீளமான மூங்கில் கம்போ அல்லது ஒட்டடைக் குச்சியோ இருந்தால் காரியம் எளிதில் முடிந்து விடும்! நோட்டம் விட்டுப் பார்த்து விட்டான். எங்கும் எதுவும் தென்படவில்லை!

ஆழ்ந்த சிந்தனையுடன் ஹால் முழுதும் கண்ணோட்டமிட்ட அவனது பார்வையில் ஏதோ ஒன்று பளிச்சிட்டது. ஹாலின் ஓர் ஓரத்தில் எப்போதோ வாங்கிய ஒரு பிரம்பு நாற்காலி! எப்போதும் உட்கார ஆளற்றுக் கிடக்கும்! இன்று அதற்கும் ஓர் உபயோகத்தை அவன் கண்டு கொண்டிருந்தான்.

ஒரு பேனாக் கத்தியின் துணை கொண்டு பிரம்பு நாற்காலியின் பிரம்புகளை ஒவ்வொன்றாகத் தனித் தனியாக அறுத்து விட்டான். சிறு சிறு பிரம்புகளாக ஆக்கிக் கொண்டான். பிரம்புகளின் ஒவ்வொரு நுனியையும் இன்னொரு பிரம்பின் நுனியுடன் இணைத்து 'டொயின்' நூலைக் கொண்டு கட்டினான். இதேபோல் பத்து அல்லது பன்னிரண்டு அடி நீளத்துக்கு எட்டும்படியான ஒரு நீண்ட கொம்பைத் தயார் செய்துவிட்டான். கொம்பின் ஒரு முனையில் பேனாக் கத்தியை இறுகக் கட்டினான். கத்தி முனையை இப்பொழுது மடக்கியதும் அது கொம்பின் நுனியில் ஒரு கொக்கியைப் போல் காணப்பட்டது. இதையே பயன்படுத்திப் பரணமேலிருக்கும் ஊன்றுகோல்களை எடுத்துவிடலாம் என்கிற நம்பிக்கை பிறந்தது. ஆம்! இப்பொழுது அவனிடம் பத்துப் பன்னிரண்டு அடி நீளத்துக்கு ஓர் 'அலகு' இருந்தது.

பரணை ஒட்டியது போலிருந்த ஜன்னல் கம்பிகளை இடக் கரத்தால் இறுகப் பற்றிக் கொண்டான். முடமான கால் முட்டியை வண்டிப் பீடத்தில் அழுந்த வைத்துக் கொண்டு மற்றொரு காலைத் தரையில் பிடிப்பாக ஊன்றிக் கொண்டு வலக் கரத்தால் பிரம்பாலான கொம்பைப் பரணையை

'ஹார்லிக்ஸ்' பருக மறந்து விடாதீர்கள்.
குறிப்பாக இச்சமயத்தில்
நீங்கள் இரண்டு
பேருக்கான ஆகாரம்
உட்கொள்ள வேண்டும்.





அயர்ச்சியைத் தாங்கும் சக்தியை அதிகரித்து, நாள்முழுதும் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கிறது.

கர்ப்பிணிகளுக்கு விசேடமான ஊட்டம் தேவைப் படுகிறது. அதை 'ஹார்லிக்ஸ்' அளிக்கிறது. ஏனென்றால் 'ஹார்லிக்ஸ்' அதிக சக்தி மற்றும் உடல் வலிமை தரும் புரதத்தை தாய்க்கும் அவள் கருவில் வளரும் சேய்க்கும் அளிக்கிறது. தவிர, அது எளிதில் செரிக்கக்கூடியது.

அதனால்தான் உலகெங்கும் சுமார் 100 வருடங்களாக டாக்டர்கள் கர்ப்பிணிகளுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் இதை சிபாரிசு செய்கின்றனர்.

"'ஹார்லிக்ஸ்' ஊட்டத்திற்கு முக்கிய ஆதாரமாகும்: புரதம் மற்றும் கார்போஹைட்ரேட்டின் கலவையாகிய இது செரிக்கக் கூடியது. தாய்ப்பாலின் தரத்தை உயர்த்துவதிலும் தாயின் நலத்தை உறுதி செய்வதிலும் அது பெரும் பங்கு கொள்கிறது. அதிக சக்தி, நிம்மதியான உறக்கம், மற்றும் காலை வேளை அயர்ச்சியைப் போக்குவதற்கு நாள் தோறும் இரு முறை 'ஹார்லிக்ஸ்' அருந்த வேண்டுமென்று நான் சிபாரிசு செய்கிறேன்"


முழுமையான ஊட்டம்பெற—
'ஹார்லிக்ஸ்'



"ஹார்லிக்ஸ்"
பதிவு பெற்ற ட்ரேட்மார்க்

HL-5599A

மலர்களிலே அவள் மல்லிகை!





மலர்களின் ராணி, மல்லிகை!
இளமைப் பூங்காவில் பூரிப்புடன்
பூத்துக் குலுங்கும் இந்த
இளமங்கை, அழகு
ராணியாகத் திகழ்கிறாள். அந்த
புத்தெழில் என்றுமே நிலைத்திட
அவள் ஜெய் அழகு சாதன சோப்
உபயோகிக்கிறாள். மல்லிகை மணம்
வீசும் ஜெய் சோப் மேனியை
மிருதுவாக்கி, பொன்னொளி
வீசச் செய்கிறது.

மல்லிகை
மணம் கமழும்

ஜெய்

அழகுசாதன
சோப்

டாடா தயாரிப்பு

OBM.7002 TM

நோக்கி மெல்ல மெல்ல மேலே நகர்த்திக் கொண்டிருந்தான். அவனது கை நடுங்கத் தொடங்கியது. அவனுக்கு வியர்த்து விட்டது. ஒரு தடவை தோல்வியுற்று, இரண்டாம் முறை முயன்று பார்த்தான். இப்பொழுது ஊன்றுகோலின் கைப்பிடியைக் கத்தியின் கொக்கி முனை 'கப்'பென்று பிடித்துக் கொண்டது. சற்று இழுத்துப் பார்த்தான்.

ஆஹா !

ஊன்றுகோல் இரண்டு அங்குலம் நகர்ந்து கொடுத்தது. அவனது முகத்தில் ஓர் அசாதாரண ஒளி இழையோடியது. நெற்றியில் துளித்த வியர்வையை இடக் கரத்தால் துடைத்தான்.

பலம் கொண்ட மட்டும் இனி இழுக்க வேண்டியதுதான். அது வரையில் மூடமாகப் பரண்மேல் உறங்கிக் கொண்டிருந்த ஊன்றுகோல்கள் பலத்த சத்தத்துடன் தரையில் வந்து விழப் போகின்றன. ஆனால் விழும் பொழுது தன்து மேலே விழுந்துவிடக் கூடாது. அது விழப் போகும் இடத்தைச் சுமாராக நிதானித்துப் பார்த்துச் சக்கர வண்டியைச் சற்றுத் தள்ளி நிறுத்திக் கொண்டான்.

நீண்டதொரு பெருமூச்சை விட்டு விட்டுப் பிரம்பின் அடிப் பகுதியைப் பலம் கொண்ட.மட்டும் இழுத்தான்.

ஆகா !

துண்டு துண்டாகக் கட்டி வைக்கப் பட்ட பிரம்புகளின் ஒரு பகுதி தனியே பிய்த்துக் கொண்டு கையுடன் வந்து விட்டது.... அண்ணாந்து கவனித்தான். ஊன்றுகோல் அங்கேயே இருக்கிறது. கொக்கி போல் மாட்டியிருக்கும் கத்தியும் அதை இணைத்துக் கொண்டிருக்கும் இரண்டு அடி நீளமுள்ள ஒரு பிரம்புப் பகுதியும் த னி யா க த் துண்டித்து நின்று ஊன்றுகோலின் கைப் பிடியில் ஆடிக் கொண்டிருந்தன. மற்ற நீளமான பிரம்புப் பகுதி தரையில் விழுந்து விட்டது ! கட்டியிருந்த 'டொயின்' நூல் அறுந்துவிட்டதுதான் காரணம்.

நெப்போலியன் கண்ட வாட்டர்லூ யுத்தத்தின் தோல்வியைவிடப் பெரிதாகத் தெரிந்தது மோகனசுந்தரத்துக்கு! மறுபடியும் முதலிலிருந்து ஆரம்பிக்க வேண்டுமே!

யாரோ கதவைத் தட்டினார்கள் ! ஏதோ பெரிய தவற்றை இழைத்துவிட்டவன் போல் சுற்று முற்றும் ஒரு முறை பார்த்துக் கொண்டான் ! யாராக இருக்கும் ? ஒரு வேளை ! பைரவியோ! 'என்ன செய்கிறீர்கள்' என்று கேட்டால்....? அவசரம் அவசரமாகச் சக்கர நாற்காலியைத் தள்ளினான். அரை குறையாக அறுபட்டும் சின்னபின்னப்



''1951ல் தியாகங்களைச் செய்ய மக்கள் தயாராக இருக்க வேண்டும் என்றார் நேருஜி. 1973ல் இந்திரா காந்தியும் அதையே சொல்கிறார்.''

- ஸ்டேட்ஸ்மன் கடிதம்

அரசின் போக்கு இப்படியே நீடித்தால் 95லும் நமது பிரதமர் இதையேதான் கூறிக் கொண்டிருப்பார் !

- பாபு

பட்டும் கிடக்கும் பிரம்பு நாற்காலியிடம் சென்றான்.... மூளியாகக் கிடந்த அதை ஒரு காலால் உதைத்தவண்ணம் தள்ளிச் சென்று பயனற்றுக் கிடந்த பக்கத்து அறையில் உள்ளே தள்ளிவிட்டான் ! கீழே கிடக்கும் பிரம்பினால் ஆன அந்த ஒடிந்த கொம்பையும் எக்கிப் பிடித்து எடுத்து அந்த அறையினுள் கொண்டு தள்ளிக் கதவை அவசரம் அவசரமாகச் சாத்தினான்.

மிகுதியிருந்த நூல்கண்டை மேஜை டிராயரில் வைத்து அதை வேகமாக மூடினான். அங்கிருந்தபடியே பரண் மீது தன் பார்வையை ஓட்டினான் !

ஊன்றுகோல் பிடியின் மீது மடிக்கப் பட்ட கத்தியின் முனையுடன் இரண்டு அடி நீளமுள்ள பிரம்பு தொங்கிக் கொண்டிருந்தது. ஹாலில் சுற்றிக் கொண்டிருந்த மின்விசிறியின் காற்றினால் அது சற்று ஆடிக் கொண்டிருந்தது.

தலைக்கு மேலே கத்தி ! அது எந்த நேரமும் கீழே விழலாம் ! விழாமலும் இருக்கலாம் !

கதவைத் தட்டும் சத்தம் மறுபடியும் கேட்டது.

ச க் க ர வண்டியைத் தள்ளிக் கொண்டே கதவிடம் சென்று கதவைத் திறந்தான் மோகனசுந்தரம். 'வணக்கம்' என்று ஒரே நேரத்தில் கூறிய

படியே திருப்பதி — ஆண்டாள் தம்பதி வாய் நிறையச் சிரிப்புடன் நின்று கொண்டிருந்தனர்.

'இந்த நேரத்தில் இவர்கள் ஏன் வர வேண்டும்?' என்ற எரிச்சலே மேலோங்கியது மோகனசுந்தரத்துக்கு! ஆயினும் ஒருவாறு அடக்கிக் கொண்டு, ''எங்கே, தண்டலுக்கு வந்தீங்களா?'' என்று கேட்டான்.

'' ஏன் ? உங்களுக்கு இது தண்டலை மாதிரி தெரியறதோ ?'' என்று குறுக்கிட்டான் திருப்பதி.

மோகனசுந்தரம் சிரித்துக்கொண்டே, ''நான் அனுபவிப்பதே ஒருவித தண்டனைதான்!'' என்றான்.

அவன் உள்ளத்தைப் புரிந்து கொள்ளாமல் அவன் காலைப் பார்த்துவிட்டு, ''ஐ ஆம் ஸாரி! நீங்க எத்தனையோ பேருக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தவங்க! வேணும்னு சொல்லுங்க! உங்களுக்கும் ஒரு பண முடிச்சுக்கு ஏற்பாடு பண்ணறோம்'' என்றான் திருப்பதி.

''வேண்டாம்; அந்தத் துர்ப்பாக்கியமான நிலை இன்னும் எனக்கு வரலை.''

''சும்மா ஒரு இதுக்குச் சொன்னேம்'' என்று கூறி உடலை நாணிக் கோணி அசைத்துக் கொண்டான் திருப்பதி. ''இன்னொரு நாளைக்கு வரச் சொன்னீங்க! அதான் வந்தோம். பண முடிச்சு விஷயம்?''

ஆண்டாள் வாய் திறந்தாள்:

''இப்பக்கூட நாங்க ஓர் அதிசயமான இரட்டையர்களைச் சந்தித்தோம். ஒருத்தி குருடி; இன்னொருத்தி ஊமை மட்டுமில்லே, செவிடும்கூட!''

''ஈஸ், இட் ?'' — மோகனசுந்தரம் வியப்பாகவே வினவினான்.

'' எஸ் ஸார்! அவுங்களுக்கும் ஒரு பண முடிச்சு தரணும்னு நினைக்கிறோம்.'' —இது திருப்பதி.

'' அவுங்க ரெண்டு பேரையும் நீங்க பார்த்தா அப்படியே அசந்து போயிடுவீங்க!'' — ஆண்டாள்.

''தங்களுக்குள்ள , ஊனத்தையோ, குறைகளையோ அவுங்க நினைக்கிறதேயில்லை! ஐம்புலன்களும் சரியாயிருக்கிற சாதாரணப் பெண்மணிகள் மாதிரி அவுங்க ரொம்ப சந்தோஷமாகவே இருக்காங்க!''

''ஒருத்திக்கு இன்னொருத்தி துணை!''

'' ஒருத்தி இல்லாம இன்னொருத்தியாலே வாழ முடியாது!''

'' ஒருத்தியாலே பார்க்க மட்டும் முடியும்... கேட்க முடியாது... பேச முடியாது.....''

''இன்னொருத்தியாலே பார்க்க முடியாது....ஆனால் கேட்க முடியும், பேச முடியும்.....''

மோகனசுந்தரத்தின் உடல் இப்பொழுது புல்லரித்துவிட்டது!

ஒரு காலை இழந்த அவனுக்கு எப்படிப்பட்ட தாழ்வு மனப்பான்மையிருக்கிறது! அதுவே எப்படியெல்லாம் அவனைச் சித்திரவதைக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறது! அப்படியிருக்கக் கண்ணில்லாத ஒருத்தி, ஊமையும் செவிடுமான இன்னொருத்தி இவர்கள் சந்தோஷமாக வாழ்கிறார்கள் என்பதைக் கேட்டவுடன் அவனது உடலில் ஏதோ புதுத் தெம்பு உண்டாகியது போல் ஒரு பிரமை ஏற்பட்டது!

தனது மனைவி பற்றிய பயங்கரச் சிந்தனைகூட இப்பொழுது இரண்டாம் பட்சமாகத் தோன்றியது அவனுக்கு.

'' இதிலே வேடிக்கை பாருங்க...'' திருப்பதி ஆரம்பிக்க ஆண்டாள் தொடர்ந்தாள்: ''அவுங்க ரெண்டு பேருமே இணை பிரியாம இருக்க ரெண்டு பேருடைய முந்தானையையும் இழுத்து ரெண்டு முடிச்சுப் போட்டுக்கிட்டுச் சாப்பிடறதிலேயிருந்து தூங்கறவரையிலும் இப்படியே வாழறாங்க!''

'' எல்லாத்தையும்விட ஆச்சரியம்! அவுங்க ரெண்டு பேரும் உழைச்சுச் சம்பாதிக்கிறாங்க!''

இந்த வார்த்தைகள் அவனை மிகவும் குத்திவிட்டன! தன்னையே நொந்து கொண்டான் மோகனசுந்தரம்! கால் போய் விட்டால் என்ன? நம்மால் வேறு வழிகளில் பிழைக்க முடியாதா? மனைவியை உத்தியோகம் பார்க்க அனுப்பித்தான் ஆகணுமா? உள்ளுணர்வு உரக்கக் கத்தியது....

''இப்படிப்பட்ட அதிசய இரட்டையர்களுக்காவது நீங்க உங்களாலான உதவி பண்ணணும்.....''

மோகனசுந்தரம் நாள் காலண்டரைப் பார்த்தான்.... முதல் தேதி.... ஆம் அவளுக்குச் சம்பள நாள்.

''சாயந்திரம் வாருங்கள்! அவசியம் பணம் கொடுக்கிறேன்......'' என்று மோகனசுந்தரம் கூறி முடித்ததும், மொத்தம் அறுபத்து நான்கு பற்களையும் காட்டிக் கொண்டே தம்பதிகள் வெளியேறி விட்டார்கள்!

இன்று முதல் தேதி! முதல் தேதியோ முடிவான தேதியோ? முதல் முடிச்சு இன்று நிச்சயமாக அவிழப் போகிறது. அல்லது அவனால் அவிழ்க்கப்படப் போகிறது!

இடையில் வேறு இரு முடிச்சுக்கள்! இரட்டைப் பெண்மணிகளைப் பற்றிய சிந்தனை அவனது உடலில் புது ரத்தத்தைப் பாய்ச்சிக் கொண்டிருந்தது.

(தொடரும்)

விண்ணப்பம்: சவால்களுக்கும் சபதங்களுக்கும் படாதிபதிகளே, ஓய்வு கொடுங்கள்!




விஜயா

முதல் கேள்வி: திரைக் கதையின் அசட்டுத்தனத்துக்கும் ஓர் எல்லையே கிடையாதா?

இரண்டாவது கேள்வி: தியேட்டரில் மின் விசிறி ஓடாத நிலையை நினைவூட்ட ஐந்து பாடல்கள் இருக்கின்றன. இவை போதாக்குறைக்கு நகைச்சுவைக் காட்சிகள் என்ற பெயரில் கொடுமையும், நடனங்களும், கிளப்பில் நடக்கும் அட்டகாசமான ஆட்டங்களும் நிறைய இருக்கின்றன. வேதனைக்குக் கேட்க வேண்டுமா?

மூன்றாவது கேள்வி: கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்பை ஏற்றிருக்கும் 'வியட்நாம் வீடு' சுந்தரத்தின் வசனம் மட்டும் அருமையாக அமைந்திருக்கிறது - கண்களை மூடிக்கொண்டு கேட்கத் தயாரா?

நான்காவது கேள்வி: மேற்படி மூன்று கேள்விகளை எழுப்பியபிறகு இந்த விமர்சனத்தைத் தொடர்ந்து எழுதுவதும் அவசியம்தானா? —**காந்தன்**




ஜாங்கோ ஜக்கு
கதை: குட்டி கிருஷ்ணன்
சித்திரம்: ராஜு
22
பி.க.பி.ம.வின் ஜாகைக்குள் நுழைந்து பக்கத்து வீட்டு வாசல் வழியாக வெளியேறிய ஜக்கு, பொன் மொழியைக் காக்க அவசரமாகக் கப்பண்ணா வீடு செல்ல விரும்பினான்.
அடடா! என் அவசரத்தைப் புரிந்து கொண்டவன் போலச் சாவியைக் காரிலேயே வைச்சுட்டுப் போயிருக்கானே இந்த மகானுபாவன்! ஆபத்துக்குக் குற்றமில்லைன்னு கிளப்பிக் கிட்டுப் போக வேண்டியது தான், ஜிம்மி!
இது என்ன டி.பி. பேஷண்ட் மாதிரி இருமுதே தவிர ஸ்டார்ட் ஆகலே?
லொக் லொக் லொக் லொக்
சாலைத் தமிழர்களின் உயிரைக் கண்ணே போல் போற்றிக் காக்கும் தர்மராஜன். அதனால்தான் எனக்குக் கார் ஓட்டத் தெரியாது என்பதை எப்படியோ உணர்ந்து கொண்டு தன்னை மாடலாகக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கான்!... அதோ ஒரு டிரை க்ளீனர்ஸ் வண்டி!... ஐடியா!
BABA DRY CLEANERS
ஜிம்மி! துணி மூட்டைகளுக் கிடையில் சவாரி எப்படி இருக்கு? உஷ்! ரொம்பச் சத்தம் போடாதே! டிரைவர் காதில் விழப் போறது!
அட! சொல்லி வைத்தாற் போல் சில விஷயங்கள் கதைகளில் தான் நிகழும்; நம் வாழ்க்கையிலும் நடக்குதே! கப்பண்ணா வசிக்கும் பேட்டைக்கே வந்து சேர்ந்திருக்கோம்.... வண்டி நிக்குது... டிரைவர் இறங்கி வரு முன்....



...நாம் தப்பி ஓடலாம். இங்கிருந்து நாலு தெரு தள்ளித்தான் கப்பண்ணா வீடு.
சற்று நேரத்துக்குப் பிறகு....
கப்பண்ணா, வைரங்கள் இதோ! பொன்மொழி எங்கே? சீக்கிரம் சொல்லு! டைம் பாம் வெடிச்சுடப் போகுது!
டைம் பாம் பண்ண எனக் கெப்படித் தெரியும்..?
அதானே, டைம் பார்க்கவே சரியா தெரியாதே!
சும்மா மிரட்டிப் பார்த்தேன்; கை மேல் பலன் கிடைச்சுடுத்து. பொன்மொழி அதோ அந்த ரூமிலேதான் சௌக்கியமா கதைப் புத்தகம் படிச்சுண்டு இருக்கா. இந்தா சாவி!
பொன்மொழி! இதோ உன்னைக் காப்பாற்ற நான் வந்துட்டேன்!
ஹை ஹீரோ!
ளொள், ளொள்!
ளொள், ளொள்!
கப்பண்ணா! இந்த வைரங்களைத் தேடிக்கிட்டு சி.ஐ.டி. அனந்தாச்சாரி இப்போ இங்கே வருவார், உன்னையும் பிடிச்சுப்பார். நீ கம்பி நீட்டு!
பின்னே, இங்கே தாமதிக்க எனக்குப் பைத்தியமா? கப்பண்ணா வந்த யோகம்! எல்லா வைரங்களும் எனக்கே!
கப்பண்ணா போனதும் தனித்து விடப்பட்ட நிக்கியும், நிம்மியும்; பொன்மொழியும், ஜக்குவும்.... மன்னிக்கவும், வார்த்தைகளும் படமும் தணிக்கை செய்யப்பட்டன!

தொடரும்



தியேட்டரில் நல்ல கூட்டம். 'நடிப்பின் சிகரம்' என்ற பட்டம் பெற்ற நடிகரின் படம். கூட்டத்தைச் சமாளிக்க விசேஷ போலீஸ் படை இருந்தது.

டிக்கட் கொடுக்கப்படுவதை அறிவிக்கும் மணி அடித்தது. இரு வரிசைகள் சீர்ப்பட்டன; சில வரிசைகள் தடியடிப் பிரயோகத்தால் சீர்ப்படுத்தப்பட்டன.

''சீ... அடிக்காதய்யா... எலே சோமாறி, ஏண்டா எகிறிக் குதிக்கிறே?.... சாவு கிராக்கி, தலை மேலே காலை வைக்காதே....''

இப்படிப் பலவிதமான இரைச்சல்கள் எழுந்தன.

ஒரு டாக்ஸி வந்து நின்றது. அவசரமாகப் பின்ஸீட்டிலிருந்து எழுந்த ராஜேஷ், அநாயாசமாகப் பேண்ட் பின் பக்கப் பாக்கெட்டிலிருந்து மூன்று ஒரு ரூபாய் நோட்டுக்களை டிரைவரிடம் கொடுத்தான். அதற்குள் டாக்ஸியிலிருந்து அந்த எழில் மங்கையும் இறங்கினாள்.

அலட்சியமாக ஆனால் அழுத்தமாக அவளை உராய்ந்தபடியே நடந்தான் ராஜேஷ்.

''என்ன லதா! பிரமிக்கப் போய் நிக்கறே?.... படம் ரிலீஸாகி நாலு நாட்கள் தானே ஆவுது?.... அதுக்காகத்தான் முன்னாடியே 'ரிஸர்வ்' பண்ணி வைச்சேன்!''

''நான் இன்னைக்கு வர முடியாதிருந்தால்...?'' என்று அவள் ஒயிலாகக் கழுத்தை வளைத்துக் கேட்டாள்.

''...ஸோ வாட்...! பிளாக்கிலே வித்திருப்பேனே !.....'' என்றான் இடமாக.

அவர்கள் இருவரும் மேல் வகுப்பு டிக்கட் கௌண்டரருகே சென்றுவிட்டனர்.

எனக்கு ஆத்திரமாக வந்தது. கல்லூரி வகுப்புக்கு

பாசக் குரல்

மட்டம் போட்டுவிட்டு, ஒரு பெண்ணுடன் — அதுவும் இந்தப் பெண்ணுடன் — சினிமா பார்க்க வந்தவன். 'பிளாக்' டிக்கட் விற்பதிலும் சூரனாக இருப்பேன் என்று பெருமைப் பட்டுக் கொள்கிறானே !

நான் பெருமைப் பட்டுக் கொள்ளும் படியான விஷயமா அது ?

'' சீக்கிரம் நகருங்க.... ம்.... ம்... வெய்யில் வேறே கொளுத்துது. காலங்கெட்ட காலத்திலே வெய்யிலும், மழையும்.....தூ... நாட்டிலே எல்லாம் முறையா நடந்துதுன்னு இயற்கையும் முறையா இருக்கும்....'' பெரியவர் ஒருவர் சொன்னதை, விடலைப் பையன் கேட்டுவிட்டுச் சொன்னான்:

''பெரியவரே....! 'காலம் கெட்ட காலத்திலே'ன்னு சொல்றீங்களே?.... உங்க வயசுக்கு, இந்த வெய்யில்லே, இந்த 'அடல்ட்ஸ் ஒன்லி' தமிழ்ப் படம் பார்க்கணும்கிறது ரொம்ப அவசியமா ?''

வரிசையில் இருந்த பலர் வாய்விட்டு நகைத்தனர். பெரியவருக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை.

ஆயிற்று. அந்த டிக்கட்டுகள் யாவும் விற்றுவிட்டன.

மனம் சோர்ந்து திரும்பினேன். தியேட்டர் மானேஜர் என்னைப் பார்த்துவிட்டார். அவர் என் பள்ளி நண்பன்.

'' டேடே.... அருணாசலம்.... வாப்பா... வா....''

அன்புடன் கூப்பிட்டார். அதைத் தட்ட முடியவில்லை. அவர் அறைக்குச் சென்றேன். படிகளைக் கடந்து, நான் அந்த முதல் வகுப்பு நுழை வாயிலைத் தாண்டியபோது—

ராஜேஷ் என்னைக் கவனித்து விட்டான்.

பகல் காட்சி முடிந்து எல்லோரும் வெளியேறுவதற்கு முன்பே நான் வெளிவந்துவிட்டேன். மின்சார வெட்டின் காரணமாக, விசிறிகளும் ஓடாததால், வழிந்து வரும் வியர்வையையும், மனத்தில் ஏற்பட்ட கவலையால் சோர்ந்துவிட்ட முகத்தையும் நன்றாகத் துடைத்துக்கொண்டு படி இறங்கிக் கீழே வந்த என் கண்களில் பட்ட அந்தக் கம்பீரமான உருவம் —

முறுக்கிவிடப்பட்ட மீசையும், கடுமை நிறைந்த விழிகளும், உறுதியான உதடுகளும் கொண்ட வாட்டசாட்டமான அந்த உருவம்—

லதாவின் அப்பா !

சட்டென்று கும்பலோடு கும்பலாகக் கலந்து வேறு வழியில் மறைந்து விட்டேன்.

மாடியிலிருந்து இறங்கி வந்த ராஜேஷ், ''லதா, உன் அப்பா...!'' என்று கிசுகிசுத்தான். அவ்வளவுதான். லதாவுக்கு மயக்கம் வந்துவிடும் போலிருந்தது!

''ராஜேஷ்!...வா... அப்படிப் போயிடலாம்'' என்று வேறு வழியைக் காண்பித்தாள்.



என் மனமோ ராஜேஷை யும், அந்தப் பெண்ணையுமே சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தது......

''.....அருணாசலம்...! போப்பா... மாடிக்குப் போ... படம் 'ஏ ஒன்'தான்....'' என்று கண் சிமிட்டினார் மானேஜர்.

மாடியில்தான் ராஜேஷும், அந்தப் பெண்ணும்........

நான் பார்க்கப் போவது படத்தையா ? அல்லது இந்த இருவரின் 'ஏ' காட்சியையா ?

அவர்கள் இருவரும் என்னைக் கடந்து சென்ற போது, நான் முதுகைக் காட்டிய படியே இருந்தேன் !

நான் வீட்டை அடையும் பொழுது இரவு மணி பத்தரை இருக்கும்.

பத்தரைமாற்றுத் தங்கம் போல், மனைவி எனக்கு. ஆனால்....

கதவைத் தட்டினேன். அவன்தான்.

உடுப்புக்களைக் கழற்றிவிட்டு, வேஷ்டியைக் கட்டிக் கொண்டேன்.

சுவரில் ஆணியில் மாட்டப்பட்டிருந்த 'பட்டை பெல்ட்' என்னைப் பார்த்தது; அழைத்தது.

''சாப்பிட வாங்க.''

''....அப்புறம் சாப்பிடறேன்..... முக்கியமான ஒரு வேலை இருக்கு.....''

'' சாப்பாடு ஆறிப் போயிடுமே!''

'' சாப்பாடு சாப்பிட்ட பிறகு என் கோபமும் ஆறிப் போயிடுமே..... இரு.... எங்கே உன் உத்தம புத்திரன் ?'' என் கை, ஆணியிலிருந்து 'பெல்ட்'டை உருவியது; என் குரலோ உறுமியது.

''என்னங்க... என்னுச்க?...'' மனைவி பதறினாள்.

'பெல்ட்' என் கையில் சாட்டையாக ஆட, மகன் அறைக்குள் சென்றேன்.

''ஸார்..... சொஸ்தமாகத் தூங்குகிறார் '' என்று சொல்லிக் கொண்டே, 'பளார்' என்று முதுகில் அறைந்தேன்.

'ஐயோ' என்று அலறியபடியே சட்டென்று எழுந்தான் மகன் — ராஜேஷ்! அறையை விட்டு ஹாலுக்கு ஓடி வந்தான்.

லதாவைப் பற்றிய கனவில் லயித்திருந்த பொழுது, லதாவின் அப்பா எதிரில் வந்து கன்னத்தில் அறைவது போன்ற கனவில்—

இப்படியொரு 'பெல்ட்' அறையா! •

'' என்னங்க.... இது.... வந்ததும்.... வராததுமா...இப்படிப் பச்சைப் புள்ளையை.'' என் மகனுக்கும், எனக்கும் — குறிப்பாக பெல்ட்டுக்கும் — குறுக்கே நின்றாள் மனைவி!

''சீ !.... பச்சைப் புள்ளையாம் புள்ளை.... படவா ராஸ்கல்..... இராப் பகலா நாயா அலைஞ்சு, மாடா ஓடி, ஓடா தேய்ஞ்சு, சம்பாதிச்சிட்டு வர்றேன்.... கழுதை! ஏதோ என் பையனும் கல்லூரிப் படிப்புப் படிச்சு, பட்டம் வாங்கணும்னு பேராசைப் பட்டு, கல்லூரியிலே சேர்த்துப் படிக்கச் சொன்னால்..... சோம்பேறிக் கழுதை..... காலேஜுக்கு மட்டம் போட்டுட்டு.... மாட்டினி ஷோ பார்க்க வர்றான்..... தூத்தெறி.'' 'பெல்ட்' மறுபடியும் அவன் முதுகைப் பதம் பார்த்தது. மனைவியின் கன்னத்திலும் சிறி விழுந்தது.

''கேளுடி..... உன் புத்திரசிகாமணிக்கு என்ன வயசாச்சு? பள்ளிக்கூடத்திலே கோட் அடிச்சு அடிச்சு... இப்போ காலேஜ் நுழையறச்சேயே இருபது ஆயிடுச்சி!.... கேடு கெட்ட ராஸ்கல்..... இந்த அழகுக்கு இவனுக்கு ஒரு காதலி வேறே.....'' சட்டென்று மகனின் தலைமயிரைப் பிடித்து, பிடரியில் இரு குத்துக்களை விட்டேன்.

என் மனைவி தடுக்கவில்லை. மகனின் காதல் பற்றிச் சொன்னதையே அவள் ஜீரணிக்கவில்லையே!

'' விடுங்கப்பா..... சே! அப்பாவாம் அப்பா!''

''என்னடா, சொன்னே ?'' என்று நான் சீறி, அடிப்பதற்குள் அவன் சுதாரித்துக் கொண்டான்.

''....என்னமோ பெரிய கடமை பத்திப் பேசறீங்களே..... கல்லூரிக்கு மட்டம் போட்டுவிட்டுச் சினிமா போனது தப்புத்தான். நீங்க மட்டும் செஞ்சது ஒழுங்கோ ?''

'' என்னடா சொல்லறே......'' என்று மனைவி கேட்டாள்.

''....ஆமாம்மா... கடமை, கடமைன்னு அப்பா அடிக்கடி பேசுவாரே? இவர் என்ன செய்தார் தெரியுமா? இவர் கடமை என்ன? டிக்கட் கொடுக்கறப்போ, 'க்யூ' வரிசையிலே கலாட்டா நடக்காமல் பார்த்துக்கணும்.... கான்ஸ்டேபின் வேலை அதானே அம்மா.... இவர் ஏன் உள்ளே வந்து சினிமா பார்த்தாரு...? இவர் மட்டும் வேலையை விட்டுட்டுச் சினிமா பார்க்கலாமா ?....'' அழுது கொண்டே கேட்டான் மகன்.

என் பலவீனப் பகுதியில் சுருக்கென்று குத்திவிட்டானே!

'டூட்டி'யில் தியேட்டருக்குப் போன போலீஸ்காரர், சினிமா பார்க்கலாமா?

என் மனைவி என்னைப் பார்த்தாள்.

'இதுக்கு என்ன சொல்றீங்க?' என்பது போன்ற பார்வை!

'' பாவி மகனே!.... நான் கடமையிலிருந்து தவறிவிடவில்லையடா.... உன் காதலியோட நீ டாக்ஸியிலே வந்து இறங்கின உடனேயே கவனிச்சேன். நீ காதலின்னு தேர்ந்தெடுத்துச் சினிமாவுக்கு அழைச்சிண்டு வந்திருந்தயே, அந்த லதா என் மேலதிகாரி இன்ஸ்பெக்டர் ராஜவேல் பொண்ணுடா!''

என் மனைவி திகைத்து நின்றாள்.

'' இன்னைக்குக் காலையிலேதான்டா அவர் என்கிட்டே சொன்னார்: 'அருணாசலம், என் பெண் லதாவோட யாரோ ஒரு பயல் சுத்திக்கிட்டுத் திரியறான்... அவனைக் கண்டு, ரெண்டு தட்டு தட்டி வை..... என் பெண்ணு தாயில்லாதவள். அதனாலே நானும் இலேசா கண்டிச்சு வைக்கறேன்னாருடா... பாவி.... அந்தக் காலிப் பயலா நீ இருக்கயே!.... சே! உன்னைப் பெற்ற அப்பான்னு சொல்லிக்கவே எனக்கு வெட்கமா இருக்கு.....''

'' ஏங்க..... தியேட்டரிலேயே அவங்க ரெண்டு பேரையும் கண்டிச்சு வீட்டுக்கு அனுப்பறதுக்கு என்ன?....'' என்று கலங்கிய கண்களுடன் நடுங்கியபடியே கேட்டாள் மனைவி.

''....ரஞ்சிதம்....! நான் இவங்க ரெண்டு பேரையும் தியேட்டரிலேயே திட்டறேன்னு வைச்சுக்க..... என்ன ஆகும் தெரியுமா?... இந்தப் பய, அவனுக்கு எதிரே என்னைத் திட்டுவான்; அந்தப் பெண்ணும் மிரண்டு போயிடும்..... அதுவுமில்லாம பொது இடத்திலே, நான். அப்படிச் செய்தால், அந்தப் பெண்ணுக்குத்தானே அதிக அவமானம்? என்னையும் ஒரு போலீஸ்காரராகத்தான் மக்கள் பார்ப்பார்களே தவிர, ஊதாரிப் பிள்ளையைக் கண்டிக்கிற ஓர் அப்பாவாக நினைப்பாங்களா? முள் வாழையிலையிலே விழுந்தாலும், வாழை இலை முள்ளிலே விழுந்தாலும், பாதிப்பு வாழை இலைக்குத்தானே? நான் சொல்ற சொல்லாலே, வாழப் போற பெண்ணுக்குத் தீங்கு வரலாமா?.... அதனால் தான், தியேட்டர் உள்ளே நான் அந்தப் பெண்ணுக்குக் காவலாகப் போய் உட்கார்ந்தேன். நல்ல வேளை, அந்தப் பெண்ணுக்கு நான்தான் ராஜேஷின் அப்பா என்று தெரியாது.........''



சென்னை, சங்கீத வித்வான் ஸ்ரீ P. S. நாராயணஸ்வாமி அவர்கள் குமாரத்தி சௌ. லக்ஷ்மிக்கும், கீழவடயல் ஸ்ரீ V. சேதுராம அய்யர் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி V. S. ராமமூர்த்தி B. E.,க்கும் விஷ்ணுபுரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



''இதென்ன அத்தான்! என் ஜாக்கெட் கை போலவே நீங்களும் சட்டை தைச்சிட்டிருக்கீங்க?''

''நான் கையை மடக்குறெ போதெல்லாம் மஸல்ஸ் உருவாகிச் சட்டைக் கை கிழியாம லிருக்க வழி!''

வாசல் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.

கதவைத் திறந்தேன், திகைத்தேன்.

இன்ஸ்பெக்டர் ராஜுவேல் கைப்பிரம்பால் இடது உள்ளங் கையில் தட்டியவாறே, உள்ளே நுழைந்தார்.

கீழே விழுந்து கிடந்த பெல்ட், மனைவி ரஞ்சிதத்தின் அழுத கண்கள், ராஜேஷின் முதுகில் பட்டையாகச் சிவந்திருந்த தோல், ரஞ்சிதத்தின் கன்னத்தில் விழுந்திருந்த செவ் வரிகள், என் முகத்தில் வீசிய கனல் —

ராஜுவேல் ஊகித்துக் கொண்டார்.

'' தியேட்டரிலே இரவுக் காட்சி ஆரம்ப மாயிடுத்துன்னு கேள்விப்பட்டு, கலவரம் ஒன்றும் நடக்கவில்லை என்று மானேஜர் சொன்ன பிறகு, உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாம்னு வந்தேன்......'' அவர் பர்ஸி லிருந்து எடுத்த ராஜேஷின் போட்டோவும், அவர் குரலில் இருந்த அமைதியும் என்னைத் திடுக்கிட வைத்தன. காதலியிடம் இவன் கொடுத்த போட்டோ அவள் தகப்பனார் இங்கு வர வழி செய்துவிட்டது!

''..... தியேட்டரிலே ஒன்றும் கலவரம் இல்லே. ஆனால் நம்ப இரண்டு பேர் வீட்டிலே யும்தான் கலவரம்.... ம்....'' என்றபடியே ராஜேஷைப் பார்த்தார். அவன் தலை குனிந்து கொண்டு நின்றான்.

''.....ராஜேஷ்...! இப்ப தலை குனிந்து கொண்டு நீ நிக்கறே! ஏதாவது விபரீதம் நடந்திருந்தால், நானும் உன் அப்பாவும் வாழ்நாள் முழுதும் தலை குனிஞ்சிண்டு நிற்கும் படியா ஆகியிருக்கும்.... வீட்டுக்குக் காவல் அம்மா. நாட்டுக்குக் காவல் அப்பா. ஆனால் உனக்கு...... உன் மனசுதாம்பா காவல். கல்லூரிப் படிப்புப் படிக்க, நீ அடுத்த வருஷம் பட்டம் வாங்கப் போறதைப் பத்தி உங்கப்பா எவ்வளவு பெருமைப்பட்டிருக்கிறார் தெரியுமா!...... ஆனால் நீ... இப்படியொரு நிலைமையை உண்டாக்கி, கெட்ட பட்டம் வாங்கிக்கப் போறே...? உன் குடும்ப கௌர வப் பட்டத்தைக் கிழிச்சு எறியப் போறே...''

''ஸார்.....! நீங்க ஏன் ஸார் இப்படியெல் லாம் பேசணும்?.... நொறுக்கிடறேன் ஸார் இவனை....'' என்றேன் ஆத்திரத்துடன்.

''......தூ.... அமைதியா இரு....இவனை நொறுக்கிட்டா எல்லாம் சரியாப்போயிடுமா? நான் வருவதற்கு முன்னால், நீ பேசினதை ஜன்னல் மூலமாகப் பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்தேன். பாதிக்கப்படறது என் பெண்ணோட வாழ்க்கையாச்சே!....''

''என்ன ஸார், நீங்க இப்படிப் பேச நீங்களே! தண்டிக்கிற சமயத்துலே இரக் கமே காட்டக் கூடாது!''

''...... அருணாசலம்...! நான் இன்ஸ் பெக்டர்தான். ஆனால் இப்போ அந்த ஸ்தானத்துலேயிருந்து பேசலே. ஒரு தாயில் லாப் பெண்ணோட அப்பா பேசறேன் அருணா சலம். அந்தப் பெண், வாழ்நாளெல்லாம் கலங்கி நிற்காமல் சந்தோஷமா இருக்க வேண்டுமே என்ற துடிப்போட, கவலையோட, குமுறிக் கொண்டிருக்கிற அப்பா பேசறேன்... என் பெண் மனசிலே காலியா யிருந்த இடத்தை இவன் பிடிச்சுக்கிட்டான். சாயங் காலம் என் பொண்ணு அழுதுகிட்டே சொல் லிச்சு, அருணாசலம்!'' என்று சொல்லி நிறுத் தினார். அவர் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

மனைவி என்னைப் பார்த்தாள். நான் காலிப் பயலான என் மகனைப் பார்த்தேன். அவனோ, ராஜுவேலுவின் கால்களையே பார்த் துக் கொண்டிருந்தான்.

'' என்ன சொல்லறே அருணாசலம்?'' என்று கேட்ட ராஜுவேலுவின் குரலில், இன்ஸ் பெக்டரின் கம்பீரம் இல்லை; அன்புத் தந்தை யின் பாசக் குரல் கேட்டது.

என் மனம் நெகிழ்ந்துவிட்டது. என் மன நிலையைப் பிரதிபலிப்பது போல, ராஜேஷ், ராஜுவேலுவின் கால்களில் விழுந்தான்.

''ஸார். .... என்னை மன்னிச்சிடுங்க ஸார்.....'' என்று கதறினான்.

அவனைத் தூக்கி நிறுத்திய ராஜுவேல், ''தம்பி! நீ இனி மேல் இந்த மாதிரி என்ன, எந்தத் தப்பும் பண்ணமாட்டாய்; ஆனால் பண்ணின தவறுக்குத் தண்டனை கொடுத்துத் தானே ஆகணும்......'' என்றார்.

''ஸார்..... நீங்க....'' — இது நான்.

''.....ஆமாம்.... அருணாசலம்.... இவன் பட்டம் வாங்கற வரைக்கும் என் பெண்ணைப் பார்க்கவே கூடாது என்பதுதான் தண்டனை! பட்டம் வாங்கிய பிறகு பார்த்துக்கொண்டே யிருப்பதும் ஒரு தண்டனையே!'' கலங்கிய கண்களுடனே, ராஜுவேல், கீழே விழுந்து கிடந்த 'பெல்ட்'டை எடுத்தார்.

என் மனம் கூசியது. அவரே அந்தப் 'பெல்ட்'டை ஆணியில் தொங்கவிட்டார்.

'' அருணாசலம்! நாம் போலீஸ்காரர்கள் தான். அதனாலே வெளியே கடைப்பிடிக்கிற கண்டிப்பையும், வேகத்தையும் வீட்டிலேயும் கடைப்பிடிக்க முடியுமா?.... வீட்டிலேயும் கண்டிப்பு இருக்க வேண்டியதுதான். ஆனால் பிரச்னையை அணுகுகிற முறைதான் முக் கியம்..... இனி மேல் இந்த 'பெல்ட்', இடுப்பிலேயிருந்து நழுவி விழற, உடுப்புக் களை அணைக்க, வளைஞ்சு இருக்கணுமே தவிர, நீண்டு, பெற்ற பிள்ளையையே அடிக்கக் கூடாது...... என்ன.....?''

அவரை வழி அனுப்ப, வாசல் கதவைத் திறந்தேன்.



சத்திய வெள்ளம்

நா. பார்த்தசாரதி


முப்பத்தைந்தாவது அத்தியாயம்

மறு நாள் காலையில் கண்ணுக்கினியாள் மதுரைக்குப் புறப்பட்டாள். முன்பு அவர்கள் பேசி வைத்துக் கொண்ட மாதிரி அவள், பாண்டியன், மணவாளன், எல்லாரும் சேர்ந்தே ஊருக்குப் புறப்பட முடியாமற் போய் விட்டது. பாண்டியனுக்கும் மணவாளனுக்கும் அங்கே செய்து முடிக்க வேண்டிய வேலைகள் இன்னும் மீதம் இருந்தன. அதனால் அவர்களே அவளை முதலில் புறப்பட்டுப் போகச் சொல்லி விட்டார்கள். மல்லிகைப்பந்தல் பஸ் நிலையத்தில் அதிகாலை முதல் பஸ்ஸில் குளிரோடு குளிராக அவளை வழியனுப்பும்போது, ''வளைகள், செயின், மோதிரம் எல்லாம் எங்கே என்று உங்க நாயினாவும் அம்மாவும் உன்னைக் கேட்டால் என்ன பதில் சொல்லப் போகிறாய்?'' என்று கேட்டான் பாண்டியன். இதைக் கேட்டு ஒரு பதிலும் சொல்லாமல் அவனைப் பார்த்துச் சிரித்தாள் அவள். அப்புறம் பஸ் புறப்படுவதற்குச் சில விநாடிகளுக்கு முன், ''அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் அதைப் பற்றிக் கவலைப் பட வேண்டியதில்லை. நிம்மதியாக மற்ற வேலைகளைக் கவனியுங்கள்'' என்று முகத்தில் மலர்ச்சியுடனும் புன்னகையுடனும் அவன் முன்பு கேட்ட அந்தக் கேள்விக்குப் பதில் சொன்னாள் அவள். அவளை வழியனுப்பிவிட்டு மல்லிகைப் பந்தல் பஸ் நிலையத்திலிருந்து அப்படியே மணவாளன் தங்கியிருந்த ஹோட்டலுக்குப் போனான் பாண்டியன். மணவாளன் அறையில் இருந்தார். அவன் போன போதுதான் யாருடனோ ஃபோனில் பேசி முடித்துவிட்டுத் தலை நிமிர்ந்த மணவாளன் பாண்டியனைப் பார்த்ததும், ''வா, பாண்டியன்! ரொம்பச் சரியான நேரத்தில்தான் நீயும் இங்கே வந்திருக்கிறாய்! இன்னும் சிறிது நேரத்தில் பல்கலைக் கழக சிண்டிகேட் உறுப்பினரும், எஸ்டேட் அதிபரும் ஆகிய ஆனந்தவேலு இங்கே என்னைப் பார்க்க வரப் போவதாக ஃபோன் செய்திருக்கிறார்'' என்று கூறியபடி வரவேற்கவே, பாண்டியனுக்கு அந்தச் செய்தி வியப்பை அளித்தது. ''ஆனந்தவேலு எதற்காக இங்கே வருகிறார்? அவருக்கு இப்போது இங்கே உங்களிடம் என்ன வேலை?'' என்று கேட்டான் பாண்டியன்.

''நீயும் இருந்து வேடிக்கை பார்! அப்போதுதான் உனக்கு எல்லாம் புரியும்! மனிதர்கள் எப்படி எப்படி எல்லாம் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள உனக்கு இது ஒரு வாய்ப்பு'' என்று சொல்லிச் சிரித்தார் மணவாளன். பாண்டியன் அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். அது நிர்மலமாக எப்போதும்போல் தெளிவாக மலர்ந்திருந்தது. அவரே அவனிடம் பேசலானார்:

''இந்த ஆட்சி வந்தபின் பல்கலைக் கழக 'சிண்டிகேட்'டை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறார் ஆனந்தவேலு. இந்தப் பல்கலைக்கழக செனட், சிண்டிகேட் போன்றவற்றைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும், வோட்டும் தங்களுக்கு உண்டு என்பதை அறியாத காரணத்தால் இந்தப் பல்கலைக் கழகத்தில் படித்து வெளியேறிய பட்டதாரிகள் பலர் தங்கள் பெயரை செனட் வோட்டராகப் பதிவு செய்து கொள்ளவில்லை. தமக்கு வேண்டியவர்களைத் தாமே பணம் கட்டி வோட்டராகப் பதிவு செய்து தம்முடைய கைப்பாவைகளே செனட் உறுப்பினர்களாக வருவதற்கான எல்லாத் தந்திரங்களையும் செய்கிறவர் இந்த ஆனந்தவேலு. இவருடைய சூழ்ச்சியாலும், தந்திரங்களாலும் சுமாரான தகுதியுள்ள பலர் அகடமிக் கவுன்ஸில் உறுப்பினராக நேர்ந்திருக்கிறது. அகடமிக் கவுன்ஸிலும், செனட்டும் மோசமான தரத்துக்கு இருந்தால் சிண்டிகேட்டின் தரமும் மோசமாகவே இருக்கும். 'சிண்டிகேட்' தரம் குறைந்தாலோ பல்கலைக் கழகத்தின் தரமும் தானாகக் குறையும்'' என்று மணவாளன் கூறியபோது ஆனந்தவேலுவைப் பற்றி இவ்வளவு தூரம் தெரிந்து வைத்திருப்பவர் இந்த அதிகாலையில் அவரைச் சந்திப்பதற்கு ஏன் சம்மதித்தார் என்று புரியாமல் மருண்டான் பாண்டியன்.

''அது மட்டுமில்லை! அண்ணனுக்கு இன்னொரு விவரமும் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். தங்களுக்கு வேண்



டாத பட்டதாரிகள் அல்லது தங்களுக்கு வோட் போட மாட்டார்கள் என்று இவர்கள் நினைக்கும் பட்டதாரிகள் 'செனட்' வோட்டராகப் பதிவு செய்து கொள்ள விண்ணப்பம் அனுப்பினால் அந்த விண்ணப்பங்களை எந்தத் தேதிக்குள் வரவு வைத்தால் அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடைக்குமோ, அந்தத் தேதி வரை அவற்றை வரவு வைக்காமல் காலந் தாழ்த்தி வரவு வைத்து அந்த ஆண்டிலேயே அவர்கள் வோட்டளிக்க முடியாமல் யூனிவர்ஸிடி நிர்வாகத்தையும், வி.ஸி.யையும் கைக்குள் போட்டுக் கொண்டு இவர்கள் செய்து விடுவார்கள். வருகிற வோட்டுக்களிலும் வோட்டர் 1 என்ற எண்ணுள்ள வேட்பாளருக்கு வோட் செய்திருந்தால் அதற்குப் பக்கத்தில் அதே மையில் ஒரு 2ஐயும் சேர்த்து '12' என்ற எண்ணுள்ள வேட்பாளருக்கு அந்த வோட்டை மாற்றி விடுகிற காரியத்தைக்கூடச் செய்துவிடுகிறார்கள்.''

''மெத்தப் படித்தவர்கள் நடத்தும் பல்கலைக் கழகத் தேர்தல்களின் லட்சணமே இதுதான் என்றால் அப்புறம் இந்த நாட்டின் பொதுத் தேர்தல்கள் மோசமாக நடப்பதைப் பற்றிக் கேட்பானேன்?''

''தலைமுறை தலைமுறையாகப் பல்கலைக் கழக செனட், சிண்டிகேட் உறுப்பினர் ஆவதற்கென்றே விரல் விட்டு எண்ணக்கூடிய சில குடும்பங்கள் இங்கு இருக்கின்றன. புதிய சக்திகள்—நல்ல சக்திகள் பல்கலைக் கழகங்களில் நுழைந்துவிடாமல் கவனித்துக் கொள்கிறார்கள் இவர்கள்! ஆனந்தவேலுவை மதித்து வரச் சொல்லி அண்ணன் இங்கே கூப்பிட்டிருப்பதே எனக்குப் பிடிக்கவில்லை.....''

''நீ கூறும் குறைபாடுகள் ஜனநாயகத்தைப் போற்றவும், நேசிக்கவும், தெரியாதவர்களிடம் ஜனநாயகம் சிக்கிக் கொண்டால் அது என்னென்ன புண்களையும், காயங்களையும் பட வேண்டியிருக்கும் என்பதைக் காட்டுகிறது பாண்டியன்! அதே தவற்றை நானும் நீயும் செய்யக்கூடாது. ஆனந்தவேலு என்னை எதற்காகப் பார்க்க வரப் போகிறார் என்று தெரியாமலே நான் அவரைக் காண மறுப்பது சரியில்லை. அவரைப் பார்க்க வரச் சொல்வதனாலேயே நான் கெட்டுவிட முடியுமானால் என் கொள்கைகளின் உறுதியையே நீ சந்தேகிக்கிறாய் என்று ஆகிறது'' என்று மணவாளன் பதில் கூறியபின்பே பாண்டியன் அமைதி அடைந்தான். அவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போதே ஹோட்டல் மாடி வராந்தாவிலிருந்து ஆனந்தவேலுவின் 'சவர்லே — இம்பாலா' கீழே பிரதான வாயிற் காம்பவுண்டுக்குள் நுழைவது தெரிந்தது அவர்களுக்கு.

வழக்கத்தை விட மிகவும் அன்பாக நடந்து கொள்ளும் ஒரு பணிவான பெரிய மனிதரைப் போல் முகம் மலரக் கைகூப்பிக் கொண்டே வந்தார் ஆனந்தவேலு. பாண்டியனை அவர் கண்டு கொள்ளாதது போல் இருக்கவே மணவாளனே அவனை அவருக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். பாண்டியன் அங்கிருந்து வெளியேறினாலொழியத் தாம் பேச வந்த விஷயத்தைப் பேச முடியாது என்பது போல் ஆனந்தவேலு குளிரின் கடுமை, வியட்நாம் யுத்தம் என்று ஏதேதோ விஷயங்களைப் பற்றிப் பேசத் தொடங்கி யிருந்தார்.

அங்கிருந்து தானாகவே எழுந்து இரண்டு முறை வெளியே வராந்தாவின் பக்கமாகப் போய் நிற்க முயன்ற பாண்டியனை, ''இரு! பாண்டியன்... அப்புறம் போகலாம். இப்போதென்ன அவசரம்?'' என்று மணவாளனே தடுத்துவிட்டார். பாண்டியனும் அவர் குறிப்பை ஏற்று அங்கேயே இருந்துவிட்டான். ''பாவம்! அவரை ஏன் தடுக்கிறீர்கள்? இந்தக் காலத்தில் படிக்கிற பிள்ளைகளை ஓர் இடத்தில் கால் தரித்து உட்கார வைப்பது முடிகிற காரியம் இல்லை'' என்று அங்கிருந்து பாண்டியனைப் போகச் செய்ய முயல்கிற தொனியில் குறுக்கிட்டுப் பேசினார், ஆனந்தவேலு. பாண்டியன், மணவாளன் இருவருமே விழிப்பா யிருந்து அவர் வார்த்தைகளைக் கவனித்தார்கள். சுற்றி வளைத்து வந்த காரியத்தை ஆரம்பித்தார் ஆனந்தவேலு. பசுத் தோல் விலகிப் புலி தெரியத் தொடங்கியது.

அங்கே மாணவர் மகாநாட்டுப் பந்தலுக்கு நெருப்பூட்டப் பட்டதனால் விளைந்த பொருள் நஷ்டங்களுக்காக ஆனந்தவேலு வருத்தப்பட்டார். தம்முடைய நன்கொடையாக ஒரு பெருந் தொகையைக் குறிப்பிட்டு அதைத் தருவதாக வாக்களித்தார்.

உடனே மணவாளன் குறுக்கிட்டு, ''உங்களுக்கு எதற்கு வீண் சிரமம்? எங்களுக்குப் பணக் கஷ்டம் ஏற்பட்டது உண்மை. ஆனால் அதிலிருந்து நாங்கள் மீண்டுவிட்டோம். இப்போது எங்களுக்கு எதுவும் தேவையில்லை. உங்கள் அன்புக்கு நன்றி'' என்று நாசூக்காக



அவர் உதவியை மறுத்துவிட்டார். 'மாணவர்களுக்கு எப்போது எதற்காகப் பண முடை வந்தாலும் தாம் உதவுவதற்குத் தயாராக இருப்பதாக' மீண்டும் ஆனந்தவேலு கூறியபோது, ''உங்களிடம் வந்து உங்களைச் சிரமப்படுத்துகிற அளவு பெரிய பணக் கஷ்டம் எங்களுக்கு எதுவும் வராது சார்!'' என்றார் மணவாளன்.

''யூனிவர்ஸிடி திறந்ததும் கான்வகேஷன் வருகிறது. அதில் அமைச்சர் கரியமாணிக்கம் பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்துகிறார்... மாணவர்கள் கட்டுப்பாடாக நடந்து கொண்டு நம்முடைய யூனிவர்ஸிடியின் நற்பெயரைக் காப்பாற்ற வேண்டும் மிஸ்டர் மணவாளன்! நீங்கள்தான் இதைச் செய்ய முடியும்...''

''அமைச்சர் கரியமாணிக்கத்துக்கு டாக்டர் பட்டம் தர வேண்டும் என்றுகூட 'ஸிண்டிகேட்'டில் முடிவு செய்திருக்கிறீர்கள் போலிருக்கிறது...''

''ஆமாம்! அதனால்தான் உங்களைச் சந்தித்து இதை வேண்டிக் கொள்ளலாம் என்று வந்தேன். வி. ஸி. பயப்படுகிறார். நீங்கள் மனம் வைத்தால் வி. ஸி. பயப்படுகிறாற்போல் எதுவும் நடக்காமல் தடுக்க முடியும், மிஸ்டர் மணவாளன்!''

''மன்னிக்க வேண்டும் சார்! இதில் எதையும் நான் தடுக்க முடியாது. மாணவர்களுடைய முடிவுகள் 'ஸ்டுடண்ட் கவுன்ஸிலால்' செய்யப்படும். அதன்படி அவர்கள் பிரச்னையின் நியாய அநியாய அடிப்படையில் செயலாற்றுவார்கள். நன்கொடைகளின் மூலம் அவர்களை விலைக்கு வாங்கிவிட முடியாது.''

''நோ... நோ... நீங்கள் தப்பாகப் புரிந்துகொண்டு விட்டீர்கள், மிஸ்டர் மணவாளன்!



அதனால்தான் இப்படிக் கோபமாகப் பதில் சொல்லுகிறீர்கள்... நான் சொல்லவந்தது என்னவென்றால்...''

''என்னவா யிருந்தாலும் பரவா யில்லை! நீங்கள் நினைப்பது நடக்காது! தயவுசெய்து உடனே இந்த முயற்சியைக் கைவிடுவதைத் தவிர உங்களுக்கு வேறு வழியில்லை'' என்று அழுத்தமாக மறுமொழி கூறினார் அவர். பாண்டியன் எதுவும் பேசவே இல்லை. வந்த காரியம் நடக்காது என்று தெரிந்த பின்னும் உடனே எழுந்து போய் விடாமல் சிறிது நேரம் எதை யெதையோ பேசிக் கொண்டிருந்தார் ஆனந்தவேலு. அவர் உடனே பேச்சை முறித்துக் கொண்டு புறப்படவில்லை. மேலும் பேசினார்:

''டாக்டர் பட்டம் பெற அமைச்சர் வரும்போது மாணவர்கள் எதிர்த்தால் அவர்களைப் பதிலுக்குத் தாக்குவது' என்று கடுங் கோபத்தோடு இருக்கிறார் மல்லை இராவணசாமி. மாணவர்களுக்கு எதுவும் துன்பம் வரக் கூடாதே என்ற நல்லெண்ணத்தில்தான் இங்கு வந்தேன் நான்.''

''உங்கள் நல்லெண்ணத்துக்கு நன்றி! நீங்கள் சாம, தான, பேத முறைகளால் எங்களை மிரட்டுகிறீர்கள். இந்த நூற்றாண்டில் மிரட்டல்கள்கூட மிகவும் நாசூக்காக நடக்கின்றன. இனிய வார்த்தைகளைப் பயங்கரமான அர்த்தத்தில் கூறும் மிரட்டல்களை விடப் பயங்கரமான வார்த்தைகளைப் பகிரங்கமாகவே கூறிக் கொண்டு கழியும் கையுமாக எதிரே வருகிற மிரட்டலே பரவாயில்லை. ஏனெனில் அதில் ஒளிவு மறைவில்லை'' என்று அவரைச் சாடினார் மணவாளன்.

''எனிஹெள... ப்ளீஸ் திங்க் ஓவர் இட் எகெய்ன்... அண்ட் டெல்மீ... ஃபார்சுனேட்லி யூ ஹாவ் எனஃப் டைம் டு திங்க்...'' என்று கூறிக் கொண்டே போவதற்கு எழுந்து நின்ற ஆனந்தவேலுவை நோக்கிப் பெரிய கும்பிடாகப் போட்டு அனுப்பி வைத்தார்கள் மணவாளனும், பாண்டியனும். அவர் எதற்காகத் தேடி வந்துவிட்டுப் போனார் என்பது இப்போது இருவருக்குமே தெளிவாகப் புரிந்து விட்டது. மணவாளன் கேலியாகச் சிரித்தபடியே பாண்டியனிடம் கூறினார்:

''ஸோ... பட்டமளிப்பு விழாவைப் பொங்கல் விடுமுறை முடிந்து பல்கலைக் கழகம் திறந்ததுமே நடத்தப் போகிறார்கள் என்பது உறுதியாகி விட்டது....''

''ஆமாம்! இனிமேல் தள்ளிப் போட மாட்டார்கள். நமது மகாநாட்டில் பேச வந்தால் அரசாங்கத்தில் கெட்ட பேர் வாங்க நேரிடுமோ என்று பயப் பட்ட வி. ஸி. நேற்று மாலை மல்லை இராவணசாமியைப் பதிப்பாளராகவும் கோட்டம் குருசாமியை ஆசிரியராகவும் கொண்ட 'தீவட்டி' என்ற வார இதழை வெளியிட்டுப் புகழ்ந்து பேசியிருக்கிறார். 'தீவட்டி'யால்தான் தமிழகம் ஒளிபெற முடியும் என்று திருவாய்மலர்ந்தருளி யிருக்கிறார்.''

''அதுமட்டுமில்லை, பாண்டியன்! இலக்கிய விழாக்களுக்கு அழைத்தால் கூட 'எனக்கு ஓய்வில்லை. என் அமைதியில் குறுக்கிடாதீர். மன்னிக்கவும்' என்று இரண்டே வாக்கியங்களைப் பதிலாக எழுதி வர மறுக்கும் நம் வி. ஸி. ஆளும் கட்சியினர் நடத்தும் மூன்றாந் தரக் கூட்டங்களில்கூடப் போய்ப் பேசுகிறார்.''

பகல் வரை அங்கேயே மணவாளனோடு இருந்தான் பாண்டியன். இரண்டேகால் மணிக்கு அண்ணாச்சி வந்தார். காலையில் எஸ்டேட் அதிபர் ஆனந்தவேலு தன்னையும் தேடி வந்ததாக அண்ணாச்சி கூறினார். ''மந்திரி வரப்ப மாணவர்கள் கலாட்டாப் பண்ணாமல் இருக்கும்படி செய்தீருன்னா உமக்கு என்ன வேணுமின்னாலும் செய்து தரேன்னு ஆசை காட்டினாரு.

''ஆண்டவன் புண்ணியத்திலே நான் நல்லாவே இருக்கேன். எனக்கு நீங்க எதுவுமே செய்து தர வேணாம்னு சொல்லி அனுப்பிச்சேன். மாணவர்களுக்கு நிறையப் பணம் தர்றேன். கான்வொகேஷன் நடக்கிறப்ப முக்கியமான மாணவர்களை யெல்லாம் பிளேன் டிக்

தில்லையம்பலவனுக்குத் திருமறைப் பணி

வேதநாயகனான ஸ்ரீமந் நடராஜ மூர்த்தியின் முன் மறை மந்திரம் ஓதும் புண்ணியப் பணியைச் செய்து வருகிறது சிதம்பரம் ஸ்ரீ சித்ஸபேச திரிவேத பாராயண பரிபாலன சபை. இதற்கு மூலதனமாகவும், வேத வகுப்புக்கள் நடத்துவதற்காகவும் ரூ. 60,000 திரட்ட உத்தேசித்திருக்கிறார்கள். இதையொட்டித் தலைக்கு நூறு ரூபாய் தரும் அறுநூறு அன்பர்களை ஆயுள் அங்கத்தினர்களாகச் சேர்க்க விரும்புகிறார்கள். தில்லைக் கூத்தனுக்கு வேத பூர்வமாகத் தொண்டு செய்வது பாக்கியம். நூறு ரூபாய் நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ சித்ஸபேச திரிவேத பாராயண பரிபாலன சபா, 73, வடக்கு வீதி, சிதம்பரம்.


மைக்ரோஃபைன்ட்

ஆஸ்ப்ரோ

அதிவேகமாகக் கரைந்து, அதிவேகமாகக் கிரகிக்கப் படுகிறது. அதனால்தான் அது அதிவேகமாக வலியைப் போக்கி விடுகிறது–

சாதாரண வலிநிவாரண மாத்திரைகளைவிட இருமடங்கு அதிக வேகத்துடன் வலியைப் போக்கி விடுகிறது.







சாதாரண மாத்திரைகளைப் போலன்றி, ஆஸ்ப்ரோவின் நுண்ணிய அணுக்கூறுகள் அதிவேகமாகக் கிரகிக்கப் படுகின்றன. வலியின் இருப்பிடத்தை அதிவேகமாக அடைகின்றன. உங்களுக்கு அதிவேக நிவாரணம் அளிக்கின்றன.

கீழ்க்கண்டவைகளுக்கு மைக்ரோஃபைன்ட் ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்: நரம்புவலி • உடல் வலி • ஜலதோஷம் • ஃப்ளு • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவைப் பட்டால் மீண்டும் சாப்பிடவும். குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொற்படி

ஆஸ்ப்ரோ மட்டுமே மைக்ரோ:ஃபைன் செய்யப் படுகிறது, அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக.

நிகோலஸ் (N) தயாரிப்பு

A.G.57 TM


கண்டதுமில்லை, காணப்போவதுமில்லை — இத்தகைய
வெண்மை
சோப்பைவிட
1½ மடங்கு அதிக
துணிகளை சலவை
செய்கிறது.
பாதி உழைப்பிலேயே
மென்னீரிலும், எளிதில் நுரை
விடாத நீரிலும், சோப்பைவிட
இரட்டிப்பு பலனளிக்கிறது.
NEW!
det
detergent washing cake
டெட் கட்டி
டெட்டின் மற்றொரு தரமான தயாரிப்பு: புதிய முச்செயல் புரியும் டெட் பவுடர்—
வெண்மையானாலும் நீலமானாலும்: துணிகளை அதிக வெண்மையாக சலவை செய்கிறது.
வண்ணத் துணிகளை அதிக பிரகாசமாக சலவை செய்கிறது. துணிகளுக்கும்
கைகளுக்கும் அதிக பாதுகாப்பு தருகிறது.
Shilpi HPMA-38a/72 Tam

கட் வாங்கிக் கொடுத்துக் காஷ்மீருக்கு உல்லாசப் பயணம் போகச் சொல்லி அனுப்பிடலாம். நீங்களே கூட்டிக் கிட்டுப் போங்கன்னு கெஞ்சினரு... முகத்திலே காரித் துப்பாத குறையாப் பதில் சொல்லித் திட்டி அனுப்பினேன். மனுசன் இதே வேலையா அலையறாரு'' என்றார் அண்ணாச்சி. அதே தினம் மாலையில் மகாநாட்டுப் பாக்கிகளைக் கணக்குத் தீர்க்க ஆட்களை வரச் சொல்லியிருந்தார்கள் அவர்கள். மாலை ஏழு மணி வரையில் அந்த வேலை சரியாக இருந்தது. பாண்டியனையும், மணவாளனையும், அண்ணாச்சியையும் அன்று மாலையில் தம் வீட்டில் இரவு உணவுக்கு வருமாறு ஃபோன் மூலம் அழைத்திருந்தார் பேராசிரியர் பூதலிங்கம். அவர்கள் எவ்வளவோ மறுத்தும் அவர் கேட்கவில்லை. கண்டிப்பாக வரவேண்டும் என்றார் அவர்.

இரவு எட்டு மணி அளவில் அவர்கள் பூதலிங்கத்தின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தபோது அவர் அவர்களை எதிர் பார்த்துக் காத்திருந்தார். அரை மணி நேரம் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த பின் சாப்பிட உட்கார்ந்தார்கள் அவர்கள். சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே பூதலிங்கம் மணவாளனை ஒரு கேள்வி கேட்டார்:

''உங்களை யெல்லாம் இன்று எஸ் டேட் அதிபர் ஆனந்தவேலு சந்தித் திருப்பாரே?''

''ஆமாம்! அது எப்படி உங்களுக்குத் தெரியும்?''

''அமைச்சர் வி. ஸி.க்குப் போன் பண்ணி வி. ஸி. தூது அனுப்பித்தானே ஆனந்தவேலு உங்களிடம் வந்தார்? எனக்கு நேற்றே தெரியும். நேற்றிரவு அகாலத்தில் ஆனந்தவேலு என்னைத் தேடி வந்து, உங்களை எல்லாம் நான் பார்த்துப் பேசிச் சரிக்கட்ட முடியுமா? என்று கேட்டார். 'அது என் வேலை யல்ல. என்னால் முடியவும் முடியாது' என்று கடுமையாக மறுத்த பின்பே, அவர் புறப்பட்டுப் போனார்'' என்றார் பூதலிங்கம். மணவாளனும், அண்ணாச்சியும் ஆனந்தவேலு தங்களைச் சந்திக்க வந்த அநுபவங்களைத் தனித்தனியே விவரித்தார்கள். பூதலிங்கம் அதைக் கேட்டு நகைத்தபடியே, ''நன்றாக அர சாங்கத்துக்குத் தரகு வேலை பார்க்கிறார் அவர்! இவ்வளவு திறமையான வேறு தரகர் அவர்களுக்குக் கிடைக்க முடியாது'' என்றார். சாப்பிட்டு முடிந்த பின்பும் நீண்ட நேரம் அமர்ந்து, அவர்கள் உரையாடிக் கொண்டிருந் தார்கள். அண்ணாச்சி, 'ஆனந்தவேலு தன்னிடம் வந்து முக்கியமான மாண வர் தலைவர்களை விமானத்தில் காஷ்மீருக்கு உல்லாசப் பயணம் அழைத்துக் கொண்டு போக முடியுமா?' என்று கேட்டதைச் சொல்லியபோது பூத லிங்கத்தின் சிரிப்பு அடங்க நெடு நேர மாயிற்று.

''காஷ்மீரானால் முடியாது! நூறு மாணவர்களை ஸ்விட்ஜர்லாந்துக்கு அழைத்துப் போவதானால்தான் முடியும் என்று சொல்லிப் பார்ப்பது தானே?'' என்று கேலியாக வினவினார் பூதலிங்கம். மறு நாள் மாலைக்குள் அவர்கள் வேலைகள் எல்லாம் முடிந்து விட்டதனால் பிற்பகல் பஸ்ஸில் மண வாளனும் பாண்டியனும் மதுரைக்குப்


சத்திய வெள்ளம்



இந்த நூற்றாண்டில் மிரட்டல்கள்கூட மிக வும் நாசூக்காக நடக்கின்றன. இனிய வார்த்தைகளைப் பயங்கரமான அர்த்தத்தில் கூறும் மிரட்டல்களை விடப் பயங்கரமான வார்த்தைகளைப் பகிரங்கமாகவே கூறிக் கொண்டு கழியும் கையுமாக எதிரே வருகிற மிரட்டலே பரவாயில்லை. ஏனெனில் அதில் ஒளிவு மறைவு கிடையாது. □

புறப்பட்டார்கள். வழியனுப்ப நிறைய மாணவர்கள் பஸ் நிலையத்துக்கு வந் திருந்தார்கள். எல்லா மாணவர்களும் பட்டமளிப்பு விழாப் போராட்டத்தைப் பற்றியே கேட்டுக் கொண்டிருந்தார்கள். பொங்கல் விடுமுறை முடிந்து பல்கலைக் கழகம் திறந்ததும் தானே மீண்டும் வருவதாகக் கூறி விடைபெற்றார் மண வாளன். பாண்டியனும் நண்பர்களிடம் அதையே கூறினான்.

அன்றிரவு மதுரையில் மணவாள ேனாடு தங்கிவிட்டு மறு நாள் பகலில் பாலவநத்தம் போக முடிவு செய்திருந் தான் பாண்டியன். மறு நாள் காலை அவன் சித்திரக்காரத் தெருவுக்குப் போய்க் கண்ணுக்கினியாளைச் சந்தித் தான். அவன் போனபோது கந்தசாமி நாயுடு, அவர் மனைவி, மகள் கண்ணுக் கினியாள், எல்லாருமாகச் செவ்விள நீர்க் கொத்து, பூக்குடலை, தேங்காய் பழம் சகிதம் வண்டியூர் மாரியம்மன் கோவிலுக்குப் புறப்பட்டுக் கொண் டிருந்தார்கள். வாசலில் ஒரு டாக்ஸி தயாராக நின்றது.



சாதாரணமாகக் கத்தரிக்கோலைப் பையில் போட்டுக்கொண்டு போனால் கையைக் குத்தும். அதைத் தடுக்க, சிக்காகோவில் ஒரு நிறுவனம் இப்படிச் சௌகரியமாக மடக்கக் கூடிய ஒரு கத்தரிக்கோலைக் கண்டுபிடித்திருக்கிறது. — நியூஸ்வீக் — பாபு

''நீயும் வாயேன், தம்பி! வண்டியூர்த் தெப்பக்குளம் வரையில் போயிட்டு வரலாம். ஒரு பிரார்த்தனை இருக்கு. பகல் சாப்பாட்டுக்கு இங்கே திரும்பி விடலாம்.....'' என்றார் நாயுடு. ''மறுத்து விடாமல் வாருங்கள்'' என்று கண் பார்வையாலேயே அவனைக் கெஞ்சினாள் கண்ணுக்கினியாள். அவன் பகல் உணவுக்குள் மணவாளன் வீட்டுக்குத் திரும்பி வருவதாகச் சொல்லியிருந்தான். ஆனாலும் நாயுடுவின் வேண்டுகோளையும், கண்ணுக்கினியாளின் ஆசையையும் தட்ட முடியாமல் அவன் அவர்களோடு செல்லும்படி ஆகிவிட்டது. போகும்போது அவன் கண்ணுக்கினியாளிடம் தனியாக எதுவும் பேச முடியவில்லை. நாயுடுதான் அண்ணாச்சியின் சௌக்கியம் பற்றியும் மகாநாட்டுப் பந்தலில் தீப்பிடித்தது பற்றியும் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுக் கொண்டு வந்தார். நடு நடுவே அவளும் பொதுவாக இரண்டொரு கேள்விகளைக் கேட்டாள். மாரியம்மன் தெப்பக்குளம் போய்ச் சேர்ந்ததும் கோவிலில் கூட்டம் அதிகமாக இருந்ததால் நாயுடுவிடம் சொல்லிக் கொண்டு படகில் தெப்பக்குளத்தின் மைய மண்டபத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்கள் அவர்கள். அவள் கைகளை இன்னும் அதே சாதாரண வளைகள் மட்டும் அலங்கரிப்பதைப் பார்த்த அவன், ''நயினாவோ, அம்மாவோ ஒண்ணும் கேட்கலியா?'' என்றான். படகில் பலரும் இருந்ததால் அவர்கள் தங்களையே கூர்ந்து கவனித்து விடாத வகையில் பொதுவாகப் பேசிக் கொண்டார்கள் அவர்கள். அவள் பதில் சொன்னாள்: ''கேட்டாங்க. இருட்டு போயிடுச்சன்னு பொய் சொன்னேன். பொய் என்ன? நெஜமும் அதுதானே?... வளை, மோதிரம், செயின் எல்லாம் திருடி, மனசையும் திருடி.....?''

அவன் அவளை முறைத்துப் பார்த்தான். ''வளை, மோதிரம், செயின் எல்லாத்தையும் வேணாத் திருப்பித் தந்திடலாம். ஆனால் நீ கடைசியாச் சொன்னதை மட்டும் திருப்பித் தர முடியாது.''

''பட்டமளிப்பு விழா என்ன ஆச்சு? எப்ப நடக்கும்? மாணவர்கள் என்ன செய்யிறதா முடிவு பண்ணினீங்க?...'' என்று மெல்லப் பேச்சை மாற்றினாள் அவள். அந்த விவரங்களை யெல்லாம் சொன்னான் அவன்.


மைய மண்டபத்தின் நடுவில் இருந்த கோபுரத்தின் உச்சிக்கு ஏறினார்கள் அவர்கள். ஓரிடத்தில் படியில் விழுந்து விடுவது போல் தள்ளாடிய அவளைத் தன் கைகளால் தழுவினாற் போல் தாங்கிக்கொண்டான் அவன். ''விடுங்க... இதென்ன... விளையாட்டு...?'' என்று செல்லமாகச் சிணுங்கிய அவளை, ''இது என்ன விளையாட்டு என்று பரீட்சைக் கேள்வி மாதிரிக் கேட்டால் எப்படிப் பதில் சொல்ல முடியும்? இதுதான் விளையாட்டு! விளையாட வேண்டிய விளையாட்டு'' என்று பதில் சொல்லிய படியே அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான் அவன். கீழேயிருந்து படிகளில் மேலும் சிலர் ஏறி வரும் ஓசை கேட்கவே அவள் அவன் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு, ''வருபவர்கள் வாழ்க!'' என்றாள். ''அவர்கள் வீழ்க'' என்றான் அவன். தங்கள் தனிமையைக் கெடுத்த அவர்கள் மேல் கோபம் வந்தது அவனுக்கு. மைய மண்டபக் கோபுரத்தின் உச்சியிலிருந்து பார்த்த போது மேற்கே கோபுரங்களும், மதுரை நகரமும், திருப்பரங்குன்றும் மிக மிக அழகாகத் தெரிந்தன.


''உயரத்திலிருந்து பார்த்தால் எதுவுமே அழகாகத் தெரிகிறது.''

''ஆனால் சிலரால் உயரத்தில் வந்தும் அழகைப் பார்க்கவே முடியவில்லை. உயரத்தில் வந்தும் அடுத்தவர்களுக்கு இடையூறாக இருக்கிறார்கள் இவர்'' என்று அருகே ஏறி வந்து கொண்டிருந்த நாலைந்துபேரை அவளிடம் சுட்டிக்காட்டிக் குறும்பு நகை புரிந்தான் அவன்.

(தொடரும்)

பல்லவன் பஸ்கள் தாமாகவே இப்படி அடிக்கடி 'ரூட் சீரமைப்பு' செய்து கொண்டிருக்கின்றனவே! என்னே! பல்லவன் பஸ்களின் புத்தி சாதுர்யம் !






பஸ், பிரயாணிகள் சீரமைக்கப்பட்டால்!...


பஸ் ரூட்கள் சீரமைக்கப் படும். —செய்தி

★

ஸ்டாப்பிங்குகளின் பெயர்களைப் பயணிகள் சரிவரச் சொல்லக் கண்டக்டர் கற்றுத் தரலாம் !


பஸ் தள்ளுவதிலும் சீரமைப்பு! கைகளில் அழுக்குப் படாமல் பஸ்ஸைத் தள்ளுவதற்குப் பயணிகளுக்குக் கையுறை கொடுக்கலாம் !






பஸ் பயணிகள் மனம் மகிழ, மகளிர் ஸ்பெஷல் பஸ்களிலிருந்து நறுமணம் கமழும் புகையைப் பரவச் செய்தால் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் புகழும் மணக்குமே !

'பிரேக் டவுன்' பஸ்களை இப்படிச் சீரமைத்து 'வயோதிகர் ஸ்பெஷல்' விட்டால் என்ன ?





மதிப்பிற்குரிய அன்னை

செட்டிநாட்டரசி

உயர்திரு ராணி லேடி மெய்யம்மை ஆச்சி

1905 அக்டோபர் 11 :: 1970 மார்ச் 1

மூன்று ஆண்டுகளுக்கு முன் இதே தினம்
(1-3-1970) எங்களை விட்டுப் பிரிந்தும் எங்கள்
நெஞ்சை விட்டகலாமல் என்றும் நிலைத்திருக்கும்

ராணி அம்மா


என்று அன்புடன் அழைக்கப்படும்

கொடைவள்ளல்
மாண்புமிகு செட்டிநாட்டரசியாருக்கு

வணக்கம் செலுத்தி
அன்னார் ஆற்றிவந்த நற்பணிகளைத் தொடர்ந்து
மேற்கொள்வதென உறுதி கொள்கிறோம்.

கீழ்க்கண்ட நிறுவனங்களின் நிர்வாகத்தினரும் பணியாளர்களும் :

ராணி மெய்யம்மை உயர்நிலைப்பள்ளி, காந்திநகர், சென்னை ○ ராணி மெய்யம்மை பெண்கள் உயர்நிலைப்பள்ளி, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை ○ செட்டிநாடு கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிடெட் ○ மதுரை சௌத் இந்தியா கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிடெட் ○ சௌத் இந்தியா கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிடெட் ○ சௌத் இந்தியா கார்ப்பரேஷன் (திருவாங்கூர்) பிரைவேட் லிமிடெட் ○ ஸ்ரீ கருணாம்பிகை ஜின்னிங் பேக்டரி ○ டுபாரி குரூப் எஸ்டேட்ஸ் ○ தொட்லக்கூண்டா எஸ்டேட் ○ சேஷகிரி எஸ்டேட் ○ குண்டல்லி எஸ்டேட்.



இலக்கிய மலர்கள்

மீ.ப.சோமு

16. மனைவியின் உள்ளம்

நலங்கள் நிரம்பிய உத்தமியான மனைவிக்குத் தன் கணவனுடைய அன்பும் ஆதரவுமே பெரிய செல்வங்கள்! இந்நிலையில், தன் கணவன் இன்னொரு பெண்ணின் பாசத்திலே சிக்கி விட்டான் என்றால் அவள் அடைகிற வேதனை எப்படி இருக்கும்?

அயன்றைப் பதியில் இருந்த சடையன் என்ற நாயகனைப் பற்றிய ஒரு பழைய பாடல்.

பெரிய மலை போன்ற தோள் வல்லமை கொண்ட அழகிய வீரன் அவன்.

மாகுன்று அனையபொன் தோளான்
வழுதிமன்

[பொன் தோளான் — அழகிய தோள்களை உடையவன். வழுதிமன் — பாண்டியன். அதாவது என் ராஜா — என் அரசன்!]


இத்தனை வீரமும் எழிலும் பொருந்திய அழகன்,

மாகுன் றனையபொற் தோளான்
வழுதிமன், வான்கரும்பின்
பாகுஒன்று சொல்லியைப் பார்த்து என்னைப்
பார்த்திலன்

[பாகுஒன்று சொல்லி — பாகு ஒன்றிய சொல்லி — வெல்லப் பாகு சேர்த்தது போன்ற தித்திப்புக் கொண்ட இனிய சொல்லை உடையவள்.]

வானத்திலே விளைந்த கரும்பு இந்த உலகத்திலே இல்லாத ஒரு பொருள்! அந்தக் கரும்பின் வெல்லப் பாகு போன்று சொல் இனிமையுடையவளான ஒருத்தியைப் பார்த்தான்; அவ்வளவுதான்; என்னைப் பார்ப்பதில்லை. புறக்கணித்தான். என்னைத் தனிமையிலே விட்டுப் பிரிந்து அவளிடம் சென்று விட்டான்.





அண்ணாவின் பக்தி

பொதுவாக, கிறிஸ்தவ மாதா கோவில்களிலோ, இஸ்லாமியப் பள்ளிவாசல்களிலோ, தொழுகையின் போது நிலவுகிற பேரமைதி, இந்துக் கோவில்களில் இல்லவே இல்லை. இரைச்சலும் கூச்சலுமே எதிரொலி எழுப்பி அங்கு நிலவ வேண்டிய தெய்வீகச் சூழ்நிலையைக் கெடுத்து விடுகின்றன. இளம் பக்தரான அண்ணாவுக்கு இந்தச் சந்தடி அறவே பிடிக்கவில்லை. எனவே, கோவில்களில் கூட்டம் இருக்கும்போது செல்லாமல், கூட்டம் குறைவாக இருக்கும் போது மட்டும் ஆண்டவனைத் தொழுவதற்குப் போவாராம். அத்துடன் கும்பல் மிகுதியாயிருக்கும் ஆலயங்களை விட்டுவிட்டுச் சென்றுவார் அற்றுக் கிடக்கும் ஆலயங்களாகப் பார்த்துச் செல்வாராம்.

ஆதாரம்: பேரறிஞர் அண்ணாவின் பெருவாழ்வு
தகவல்: 'விஜயம்'

ஊர் உலகத்தில் இல்லாத ஒரு கரும்பு மொழி என்று கூறுவதிலே துயர வெகுளியும் அந்தக் கரும்பிலே தலைவிக்குள்ள ஒரு கசப்பும் ஒலிக்கின்றன! 'சொல்லி' என்பதில் கபடம் உடையவள், சொல்லினால் பசப்புகிறவள், மனத்தில் வேறு விதம், சொல்லிலே மட்டும் இனிப்பு!

வான்கரும்பின்
பாகொன்று சொல்லியைப் பார்த்தென்னைப் பார்த்திலன்

பறவைகள் பறந்து செல்கின்றன. அவற்றிடம் தூது அனுப்புகிறாள் மனைவி. அதாவது பிரலாபத்தை வானத்தைப் பார்த்து முறையிடுகிறாள் என்ற நிலை! அந்தப் பறவைகள் வேகமாகத்தான் காற்றிலே சிறகடித்துப் பறந்து செல்லுகின்றன. ஆனாலும் நாயகியின் உள்ளத்திலே உள்ள வேகத்திலே, ஆற்றாமையிலே, அந்தப் பறவைகளின் வேகம் எம்மட்டு!

பையப் பையப்
போகின்ற புள்ளினங்காள்!

மெதுவாகப் போகிற பறவைகளே, நீங்கள் புழற்கோட்டம் என்று அழைக்கப்படுகிற என் கணவனுடைய இருப்பிடத்துக்குப் பக்கமாகப் போக நேர்ந்தால்,

புழற்கோட்டம்
புகுவது உண்டேல்

அந்தப் பக்கமாகப் போக நேர்ந்தால், வேறு ஒன்றும் நீங்கள் அவரிடத்திலே சொல்ல வேண்டாம்.

சாகின்ற னள்என்று சொல்லீர்
அயன்றைச் சடையனுக்கே!

இங்கே ஒருத்தி செத்துக் கொண்டிருக்கிறாள் என்று மட்டும் சொன்னால் போதும்—அயன்றைச் சடையனான என் கணவனுக்கு!

வான் கரும்பின் சொல்லியைப் பற்றி வான் பறவைகளிடம் வானைப் பார்த்துச் சொல்லி விட்டுப் பிறகு செத்துக் கொண்டிருக்கிறாள் என்று உணர்ச்சி விம்மக் கூறுகிறாள் மனைவி. செத்துவிட்டாள் என்று முடிக்காமல் சாவு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. கணவன் திரும்பி வந்தால் இந்த நிலையிலும் வாழ்வு மலர்வதற்கு வழி இருக்கிறது என்ற தாபமும் அந்த நம்பிக்கையும் நிகழ்கால வினைச்சொல்லாகிய ''சாகின்றனள்'' என்ற சொல்லிலே ஒலிக்கின்றன!

''பையப் பைய'' என்று பறவைகளின் வேகத்தைக் குறைப்பது நாயகியின் உணர்ச்சி வேகத்தை அதிகப்படுத்திக் காட்டுகிறது. மரண வேதனை என்ற நிலையை ஒரே சொல்லில், ஒரு மொழித் தூதாகக் கூறிவிடுவதால் அதற்கு மேல் சொல்வதற்கு வேறு என்ன இருக்கிறது! அடைமொழிகளைக் கடந்த ஒரு முடிவான நிலையல்லவா சாவு!

மாகுன் றனையபொற் றோளான்
வழுதிமன் வான்கரும்பின்

பாகொன்று சொல்லியைப் பார்த்தென்னைப் பார்த்திலன் பையப் பையப்

போகின்ற புள்ளி னங்காள்!
புழற்கோட்டம் புகுவதுண்டேல்

சாகின்ற னள்என்று சொல்லீர்
அயன்றைச் சடையனுக்கே!

புழற் கோட்டம் என்பது அக்காலத்துத் தொண்டை மண்டலத்தின் இருபத்தி நான்கு பிரிவுகளில் ஒன்று. இன்றையச் சென்னையின் எழும்பூர்ப் பகுதிகள் அடங்கிய பிரிவு என்று தெரிகிறது.

'சாகின்றனள்' என்று சொல்வதிலேதான் எத்தகைய சோகம் துடிதுடிக்கிறது! ஒரு மனைவியின் இதயத் துடிப்பு அல்லவா அது!

மதுரை நகரில் பல வருடங்களாகச் சிறந்த நிர்வாகத்தினாலும், மக்களின் ஒத்துழைப்பாலும் பஸ் ஊழியர்களின் அன்பான, திறமையான உழைப்பினாலும் திறம்பட நடந்து புகழ் பெற்று விளங்கிய நகர பஸ் போக்குவரத்து. (பாண்டியன் போக்குவரத்தாக மாறியபின்) முன்போல் சரிவரச் செயல்படவில்லை. பல நேரங்களில் பஸ்களில் பயணிகளை முன்னும் பின்னும் ஏற்றி இறக்குகின்றனர். சில நேரங்களில் அப்படி ஏறுபவர்களைக் கோபமாகக் கடிந்து கொள்கின்றனர். இதனால்



தகராறு வருகிறது. மதுரையில் இதுநாள் வரை நடக்காத வகையில் ஒரு தி. மு. க. வட்டச் செயலாளருக்கும் பஸ் ஊழியர்களுக்கும் இடையில் நடந்த தகராறு காரணமாகவும், ஓரிரு மாணவர்கள், பஸ் ஊழியர்கள் ஆகியோருக்கிடையே நடந்த தகராறு காரணமாகவும் பஸ் போக்குவரத்து முழுமையாக, நிறுத்தப்பட்டு, பொதுமக்கள் கடந்த பிப்ரவரி 7, 8, 9 தேதிகளில் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களின் குறுக்கீடுகளின் காரணமாகப் பஸ் ஊழியர்களிடம் கடமை உணர்ச்சி குறைந்து வருகிறது. பஸ், அரசு உடைமையாக மாறிய பிறகு நல்ல நிர்வாகம் சீர்குலைந்து வருகிறது.

மதுரை-10
14-2-73 இரா. சித்தரஞ்சன்

சென்னையில் உள்ள மிருகக் காட்சி சாலையில் இருப்பவை ஒருசில மிருகங்கள்தாம். ஆனால் அவைகளைப் பார்க்கச் சகிக்கவில்லை. ஒவ்வொரு மிருகமும் ஒட்டிய வயிறுடன் எலும்பும் தோலுமாகக் காட்சி தருகின்றது. அங்கு உள்ள சிங்கத்தைப் பார்த்தால் அசிங்கமாக இருக்கிறது. மனிதக் குரங்கு ஒன்றைக் கண்டேன். ஐயோ, பாவம்! பல நாட்கள் சாப்பாடு இல்லாமல் பட்டினி கிடந்த மனிதனைப் போல எலும்பும் தோலுமாகக் காட்சி தருகிறது. மிருகங்கள் பேசமாட்டா என்பதால் அவைகளைப் பட்டினி போட்டுக் கொல்வது பாவம். நகராட்சி, மிருகக் காட்சி சாலையை ஏலத்துக்கு விட்டுவிட்டுச் சும்மா இருந்து விடுகிறது போலும். மிருகங்களைக் கவனிக்க வேண்டியவர்கள் காக் சேர்ப்பதிலேயே கவனமாக உள்ளார்களோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

முண்டியம்பாக்கம்
14-2-73 எல். வெகப்பிரமணியன்

மின்வெட்டின் காரணமாக லிட்டர் 75 பைசாவாக இருந்த மண்ணெண்ணெய் ரூ. 1.50 ஆக உயர்ந்துவிட்டது.

மண்ணெண்ணெயும் சிம்னி விளக்குமாக மங்கலான வெளிச்சத்தில் இருக்கப் பழகிக் கொண்டாலும் மின்விளக்கே எரிக்காமல், குறைந்தபட்ச மின்கட்டணமாக ரூ. 4.00 கட்டவேண்டி யிருப்பதை நினைக்கும்போது பாரமாகத்தான் தோன்றுகிறது.

மின்வெட்டு அமுலில் இருக்கும் காலம் வரை, 'குறைந்தபட்ச மின் கட்டணத்திலும்' ஏதாவது சலுகை அளிக்கப்படுமானால் சலிப்பிலேயே வாழ்ந்து வரும் பல நடுத்தர மக்களுக்குப் பேருதவி புரிந்த புண்ணியம் அரசுக்குக் கிடைக்கும்.

திண்டுக்கல்
16-2-73 மா. கமலவேலன்

சென்ற மாதம் 5ந் தேதி ஒரு தொழிலாளி சம்பளம் வாங்கிய கையோடு சம்பளப் பாக்கெட்டுடன் கள்ளுக்கடை சென்று திரும்பியிருப்பார் போலும். நல்ல குடிபோதையில் இருந்த அவர், சம்பளப் பட்டுவாடா பாக்கெட் ஒன்றைக் கையிலிருந்து வீசி எறிந்து விட்டு, இதிலிருந்த நூறு ரூபாய் நோட்டை யார் எடுத்தது என்று பலவாறு ஜனங்களைத் திட்டிக்கொண்டிருந்தார். பாக்கெட்டில் வீடு, மற்றும் பிராவிடெண்ட் பண்ட் பிடித்தம் போக ரூ. 153.00 என எழுதியிருந்தது. ஆனால் பாக்கெட்டில் ஐந்து பத்து ரூபாய் நோட்டுகள் மட்டுமே இருந்தன. ஒரு முழு நூறு ரூபாய் நோட்டை இந்தத் தொழிலாளி கள்ளுக் கடையிலோ அல்லது வேறெங்கோ தவறவிட்டிருக்க வேண்டும். அல்லது இவர் குடிபோதையில் இருந்த சமயம் யாரோ அபேஸ் செய்திருக்க வேண்டும். ரூபாய் நானூறு ஐந்நூறு சம்பளம் வாங்குபவர்களே செலவுக்கும் வரவுக்குமிடையே சரிக்கட்ட முடியாமல் மிகவும் சிரமப்படும் இந்நாளில் இந்தத் தொழிலாளி இந்த ஐம்பது ரூபாயில் ஒரு மாதத்தைக் கடத்தாக வேண்டும்; அல்லது கடன் வாங்க வேண்டும். கடன் சுமை, வறுமையின் எல்லைக்கு அழைத்துச் செல்லும். இது போன்று எத்தனை ஏழைகள் இன்று அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்களோ!

நெய்வேலி
17-2-73 மணக்கால் சங்கர்

ராஜாஜி பற்றி ஜீவா :

ராஜாஜி கடல் மடை திறந்தது போல் பேச மாட்டார்.

ஒரு தாய் தன் குழந்தையை மடியிலிட்டுப் பாலைப் பாலாடையில் ஊற்றிச் சிறிது சிறிதாகப் பரிவுடனும் அதன் வளர்ச்சியில் ஆர்வத்துடனும் வார்ப்பது போல் ராஜாஜி விஷயங்களை மெதுவாக, கொஞ்சம் கொஞ்சமாக அன்புடன் மக்களுக்கு ஊட்டுவார்! நன்றி : குமரிமலர்

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madrar-600031
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)

